# ஏழு கடல்கன்னிகள்

(ஏழு கதைகள்)



தமயந்தி

# ஏழு கடல்கன்னிகள்

*(ஏழு கதைகள்)*

**தமயந்தி**



உயிர்மெய்

# ஏழு கடல்கன்னிகள்

*(ஏழு கதைகள்)*

## தமயந்தி

*வெளியீடு: உயிர்மெய் பதிப்பகம்*
*காப்டன் லிங்கேஸ் தெரு -9*
*6006 ஓலசுண்ட்*
*நோர்வே*
*மின்னஞ்சல்:* banu.nor@gmail.com
*முதலாம் பதிப்பு: 30.08.2016*
*முகப்பு ஓவியம்: நிலாந்தன்*
*பின்முகப்பு ஒளிப்படம்:* S.*சுசீந்திரா*
*வடிவமைப்பு: தர்மு பிரசாத்*
*அச்சாக்கம்:*

*விலை: ரூ.200*

Publisher: UYIRMEI NORWAY
E-Posr: banu.nor@gmail.com
www.piraththiyaal.com
Address: Kaptein Likes vegen 9A
6006 Aalesund
Norway
Cover Art: Nilanthan
Back cover photo: S.Suseenthira
Layout: Dharmu Pirasath
Printed by:

Price: Rs.200

All rights: Thamayanthi

# விசாரணை




*(1985ம் ஆண்டு நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையில் இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டு, தீவகக் கடற்பரப்புக்குள் எமது மக்களால் மீட்டெடுக்கப்பட்ட 9தமிழக மீனவர்களின் உடல்களை வேலணைத் துறைமுகத்தில் அடக்கம் செய்து, கொல்லப்பட்டவர்களின் பெயராலேயே தீவக மீனவமக்களால் கட்டப்பட்ட நினைவுக் கோபுரம்)*

## கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள்:

1. செல்வம்
2. மொஹமெட்
3. செல்வராஜ்
4. சுப்பிரமணி
5. காளிமுத்து
6. மதணாளியன்
7. மஞ்சகோதன்
8. சேதுமாணிக்கர்
9. துவரி ஐயர் பிச்சை

இப்படி இதுவரை காலமும் கடலில் கொல்லப்பட்ட ஈழ, தமிழக மீனவர்களின் கொலைச்சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைக் கோரி இந்தப் பிரதி.

★★★★★★★★★

## அந்தோனிகளுடன் நங்கூரமிட்டுள்ளான்

என் மகளே!
கலங்காதிரு
காத்திருப்பைக் காத்துக்கொள்
அவன் வருவான்
கடலின்பொருட்டு கர்வமுடையவன்
அலைகளின் சிறகெடுத்து
மீண்டுமவன் கரை தொடுவான்

சோளகம் இல்லாக் காலம்.
கொண்டலடி காற்றும்
ஆழ உறக்கத்தில் அடைந்து கிடக்கும் பருவம்
வெகுநேரம் தரித்திருக்க வேண்டியது இல்லைத்தான்.

தேக்குமர அடிப்பாகம் தேடியெடுத்து
தன் பிள்ளைக்கென செதுக்கிக்கொடுத்த
சிறு பாய்வள்ளத்தை வெள்ளோட்டம் பார்க்கவென
ஓடோடி அவன் வருவான்.
வங்கு நிறைந்த மீன்களுடன்
வலம்புரிச்
சங்கினொலிக் குரலெடுத்து, அம்பாதனையிசைத்து
கரைமீள்வான் என் மகளே.
இந்துக்கடலின் பெருவெளியில்
நீல, வெள்ளைப் பேய்கள்தம் செப்புக்குண்டுகளை
அவனுடலில் புதைக்காதவரை
கடலின்பொருட்டு
அவன் கர்வமுடையவன்.
காற்றையும் புயலையும் ஆள வல்லவன்.
ஏழாற்றுச் சுழல்நீரை எள்ளி நகையாடி
உள்ளங்கையிலள்ளி வாய் கொப்பளித்தவன்
கடலின்பொருட்டு அவன் கர்வமுடையவன்.

சோளகக்காற்றில்
பிடுங்குண்டு அடையும் சாதாளைமுதல்
கடலடி வேர்கொண்ட சாட்டாமாறுவரை
அவனது மூச்சு நீண்ட நெடியது

போர்ப்பறவை நீர்ப்பறவை போகாத ஊர்ப்பறவை
சாப்பறவை சாம்பற்காட்டின் பேய்ப்பறவை எல்லாமே
அவன்
கொய்வீச எறிந்திழுக்கும் முகட்டுவலைத் தூரசம்மா

அவன் வருவான்.
கடலின்பொருட்டு கர்வமுடையவன்
வங்கக் கடலலையை சிறங்கை என அள்ளி
வாய்
கொப்பளித்த கடலவன்
வாரி அள்ளிய வங்கு நிறைந்த பிலால்களுடன்
வருவான் கரை மீண்டும்.

நடுக்கடலில் நங்கூரமிட்டு
பாலைதீவு அந்தோனியுடனும்
கச்சைதீவு அந்தோனியுடனும்
பேசிக்கொண்டிருக்கிறான்

அந்தோனிகளே!
அனுப்பிவையுங்களவனைக் கரைக்கு விரைவாய்
அவனது மகனிடம்.
எனது நேசத்துக்குரிய மகளும் நெஞ்சு மலர்வாள்.

★★★★★★★★★★★★★

# நன்றி

அம்மா
சுவடுகள்
குவர்னிகா
புதுவிசை
ஆக்காட்டி
தோற்றுத்தான் போவோமா

# உள்ளே


1. கிற்ரார் பாடகன்
2. ஏழாற்று கன்னிகள்
3. நாச்சிக்குடா
4. அப்பு
5. தொள்ளாயிரம் சரிகளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான காயங்களும்
6. வேர் கொண்டெழும் பாறை
7. மண்டா
8. எட்டாம் பிரசங்கம்

# கிற்றார் பாடகன்

அவாக்குச் சொந்தமானதெல்லாம் கம்பிகள் தொய்ந்து போன ஒரு பழைய கிற்றார், மரக்குவளை ஒன்று, அவனது உடலோடு உரசிக்கொண்டிருக்கும் மரக்கட்டைத் துண்டுகளைப் பொத்தானாய்ப் பொருத்திக் கொண்ட மண்ணிற ஒட்டுக்கள் போட்ட இத்துப் போன நீளக் குளிருடை, அதே வயதை ஒத்த ராணுவக் காற்சட்டை, மழை, வெயில், பனியின் தாக்குதல்களிலிருந்து அவனது தலையை விறைத்த வீரனைப் போல் எப்போதும் பாதுகாத்துக் கொண்டு அவனது தலை மேல் குந்தியிருக்கும் வெள்ளைக் கரடியின் தோலினாலான தொப்பி.

நகரத்தின் தோளிலிருந்து பிரியும் குறும்பாதை புனித யோவான் சாலையைச் சென்றடையும். யோவான் சாலையின் தொப்பிளிலிருந்து தொழிலாளர் தெரு பிரிகிறது. தொழிலாளர் தெருவின் தொடக்கத்தில் இருந்து அதன் இரு கரைகளையும் நிறைத்து நெருசலாய் அடுக்கப்பட்ட தொழிற்சாலைகள். தொழிலாளர் தெருவின் நெஞ்சுக்கு அண்மையில் ‘பேத்தர்’ இரும்பு ஆலை. அந்த இரும்பு ஆலையின் பிடரியிற் தொடங்கி முதுகு வழியாக குதிக்கால் வரைசென்று, தொழிலாளர் குடியிருப்புக்குள் மெலிந்து செல்லும் சிறு தெரு ‘கருங்கற் தெரு’ அந்தக் கருங்கற் தெருவின் முகத்தினருகே முதிர்ந்த சிவப்பு அப்பிள் மரம்.

அவன் பாடுகிறான், தொய்ந்து போன கிற்றார் கம்பிகளை அவனது விரல்கள் வருடும் போது தொய்வேதுமற்ற இனிமையான இசை விதைக்கப் படுகிறது. இசையின் இடையிடையே அவன் பாடுவான் சில வரிகளை. தான் நினைப்பவை எல்லாவற்றையும் ஏதோவோர் இராகமமைத்துப் பாடுவான்.

‘நேசமுள்ளோரே வாருங்கள்  
இந்த வீதிகள் நம் முன்னோர்கள்  
நமக்காய் விரித்தவை.  
சேர்ந்து நடப்போம் வாருங்கள்’

அவன் மீட்டும் இசையும் அவனது பாடலும் அந்தத் தெருவின் இடுக்குகளெல்லாம் நிரவிக் கிடந்தன.

‘இந்த மரம் நமது மரம்,
பசித்திருப்போரே வாருங்கள்,
பழங்களைச் சமமாய்ப் புசிப்போம்’

முதிர்ந்த அந்த அப்பிள் மரத்தின் இலைகள், கிளைகள், பூக்கள், பிஞ்சுகள், பக்கவேர், ஆணிவேர் யாவற்றிலும் படிந்து கிடந்தது அவனது பாடல்.

இந்த ஆலை மதில்களில் நான் நுகர்கிறேன்
என் தந்தையின், தாயின் சுற்றத்தின்,
உறவுகளின் வியர்வையின் வாசத்தை
உழைப்பின் உறுதியை.

அந்த தெருவின் ஆலைச் சுவர்களெல்லாம் அவனது பாடலை ரசித்த படி எழுந்து நின்றன.

‘நண்பனே! நண்பனே!!
உன் தசையை நீயேன் புண்ணெனச் செய்கிறாய்?
உன் குருதியை நீயேன் விரயமாய் சிந்துகிறாய்?
யந்திரங்கள் புத்தியற்றவை.
அதனால் தான் அது உயிர்களின் பெறுமதியை
அறிய மறுக்கிறது. நான் போரைப் பற்றிப் பாடுகிறேன்’

அவனது பாடல் உயரத்திற் பறந்து முகில்களை உருட்டி விளையாடின. அவன் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்பட்டான். சிரிப்பின்றி அவனைப் பார்க்க முடிவதில்லை. எப்போதும் புன்னகைதான். பாடும் போதும், ரொட்டித்துண்டுகளைக் கடிக்கும் போதும், தனது மரக்குவளையில் அந்தத் தெருவாசிகள் யாராவது கொடுத்த தேநீரைப் பருகும்போதும் சிரித்தான். சிரித்துக் கொண்டே காணப்பட்டான் கணமெலாம். பூமியின் நெஞ்சை மிதித்து ஊர்ந்து செல்லும் எல்லா மனிதர்களும் குறைந்த பட்சம் ஏதாவது ஒரு கவலையையேனும் சுமக்க முடியாமற் சுமந்த படி நடக்கையில் இவனால் மட்டும் எப்போதும் மகிழ்ச்சியாக சிரித்தபடி இருக்க எப்படி முடிகிறது? அந்த தெருவாசிகளின் முடிவுப் பிரகாரம் இவனொரு பைத்தியக்காரக் கிழவன்.

ஆசைகள் மேல் ஆசைகளை அடுக்காய் அடுக்கி சுமக்க முடியாமல் வீங்கி முட்டித் திரியும் மனிதர்களுள் ஒருவன் மகிழ்ச்சியாக, எப்பொழுதும் சிரித்தபடி, பாரபட்சமற்று எல்லா மனிதர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் ஒரு மனித நேயமுள்ளவனாகக் காணப்பட்டால் அவன் பைத்தியம். அப்படியானால்

இப்போது இந்த பூமிக்குத் தேவை நிறையவே பைத்தியங்களல்லவா?

எனக்கொரு அப்பு இருந்தார். அவரும் இதேபோலதான் காக்கி அரைக்காற்சட்டை, கோட்டுமாய்த்தான் எப்போதும் காணப்படுவார். ஐம்பதுகளின் இறுதியில் கொழும்பு கப்பற் துறைமுகத்தில் பணி செய்துவந்த 'செக்-இன் கிளார்க்' வேலையை விட்டு விட்டு ஓடி வந்தார். எப்போதும் பெருமையடிப்பார் தன் உத்தியோகம் பற்றி. வெள்ளைக் காரனின் கப்பல் நங்கூரம் கடலடியில் பாறையில் சிக்குப் பட்டதால் வெள்ளையன் செய்வதறியாது தவித்த போது, துணிந்து தானே கடலில் பாய்ந்து நங்கூரத்தைப் பாறையிடுக்கில் இருந்து மீட்டதாகவும், திகைப்படைந்த வெள்ளையன் தன்னைக் கட்டியணைத்து ஆனந்தக் கூத்தாடினானென்றும், விலையுயர்ந்த சீமைச்சாராயமும் பணமும் தந்தபோது சாரயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பணத்தை வாங்க மறுத்ததாகவும். இப்படி நிறையத் தனது சாகசங்களையும், சாதனைகளையும் எனக்கு வெட்டியடிப்பார்.

'எல்லாம் புழுகடா மகனே' என்று ஆச்சி எனக்கு மெதுவாகச் சொல்வாள். 'உந்தப் போக்கத்தவள் நான் சொல்றதில எதத்தான் நம்பினவள்? நான் பொய்யெண்டால் நீயே பார்' என்று தனது பரம்பரை முதிசமான கொப்பர்ப் பெட்டியிலிருந்து ஒரு பழைய கறுப்பு வெள்ளைப் புகைப்படமொன்றை எடுத்துக் காண்பிப்பார். அந்தப் படத்தில் அப்பு ஒரு வெள்ளையருடன் கை கோர்த்தபடி கம்பீரமாய் நிற்பார்.

அப்புவும் பாடுவார், 'சற்குணபோதன் சரணமிதே, மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் என்ன மாமுனிவரே அறியேன். யாருமறியாமல் மறைவாய்'

அப்பு தியாகராஜபாகவதரின் ரசிகனாய் இருந்திருக்க வேண்டும். அப்பு பாடுவதெல்லாம் பாகவதரின் பாடல்கள்தான். குடிக்காமல் பாட மாட்டார். அவர் பாடுவதென்றால் குடிக்க வேண்டும். இரண்டு போத்தல் கள்ளுத்தான் குடிப்பார். கள்ளுக் கொட்டிலுக்குப் போக மாட்டார். ஆச்சி அல்லது நான் சவேரிமுத்துக் கிழவனின் கொட்டிலில் வாங்கி வர வேண்டும். கள்ளுக் குடிப்பதென்றல் சும்மா ஆகாது. நண்டுச் சம்பல் வேண்டும். கடற்கரைக்குத் தானே சென்று சினை நண்டுகளாய் வாங்கி வருவார். துவரஞ் சுள்ளிகளை வீட்டுக்குக் கோடிப்புறத்தில் அடுக்கி நண்டுகளைச்சுடுவார். நண்டுச்சதையை ஆய்ந்தெடுத்து ஒரு கிண்ணத்திலிட்டு வெங்காயம், பிஞ்சுமிளகாயுடன் உப்பு, தேசிக்காய் ஆகியவற்றைக் கலந்து குழைத்து ஒரு அருமையான சம்பல் செய்வார். கள்ளும் நண்டுச் சம்பலும் வயிற்றுக்குள் சமா வைக்கத் தொடங்கியதும் பூமியில் மானிட ஜென்மம் அடைந்ததைப் பற்றி முதலில் தொடங்குவார்.

எப்போதும் அப்பு விறாந்தையில் சாக்குக் கட்டிலில்தான் படுப்பார். பக்கத்தில் சிரட்டையில் அரைவாசி மண்ணிட்டு வைக்க வேண்டும் அவர் துப்புவதற்கு. 'தன்ர எச்சிலத் தானே விழுங்கத் தெரியாத புறப்பு' என்று ஆச்சி அடிக்கடி நச்சரிப்பார். வாழ் நாளெல்லாம் ஆச்சியைக் கஷ்ரப்படுத்திய அந்த நண்டுச் சம்பல் பாடகன் போய்ச் சேர்ந்தான் ஒரு நாள். காலம் முழுக்கப் புறுபுறுத்தபடி சேவைகள் செய்த ஆச்சி கணவன் கண்களை மூடியபோதுதான் தன் உள்ளத்துள் அடங்கிக் கிடந்த நேசங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதாள். அப்புவின் பாடல்களை அப்போது என்னால் ரசிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் அவற்றை இப்போது நினைத்து ரசிக்க முடிகிறது. இந்த கிற்றார் கிழவனின் பாடல்காளை நான் தினமும் ரசிக்கிறேன் இப்போது. பல சமயங்களில் எனை மறந்தும் ரசித்திருக்கிறேன்.

கருங்கற் தெருவை அண்மித்த ஒரு குறும் சந்திற் தான் எனது குடியிருப்பு. எனது எல்லாமுமான ஒரு சிறிய நிலவறை. அதிகாலையில் நான் வேலைக்குச் செல்லும் போதும் மாலையில் வேலை முடித்து அறை திரும்பும் போதும் அவனது பாடலை சுவைக்கத் தவறுவதில்லை. என்னைக் கண்டதும் தனது பாடலை நிறுத்தி வணக்கம் சொல்வான். பதிலுக்கு நான் வணக்கம் சொல்வேன். மீண்டும் பாடத் தொடங்குவான். வேளைகளில் நான் தாமதமாக வேலைக்குப் போகும் போது 'இரவு தூங்கத் தாமதமா நண்பா?' என்று கேட்பான். பதில் கூறிவிட்டு நடப்பேன். மேலதிக வேலை சில செய்து விட்டு அறை திரும்பும் சமயம் 'குறைந்த கூலியில் உன்னை உறிஞ்சி விட்டார்கள் போலும்.. களைத்திருக்கிறாய் சென்று ஓய்வெடு நண்பா' மிக கரிசனையோடு செல்வான்.

நத்தார் தினத்துக்கு இரு தினங்களுக்கு முன் அவனைக் கடந்து செல்லும் போது தன்னருகில் வரும்படி அழைத்தான். சென்றேன். 'நத்தார் தினத்தைக் கொண்டாட நீ வேறு எங்காவது செல்கிறயா நண்பா?' கேட்டான்.
'இல்லை எனது அறையில் தான்' சொன்னேன்.
'தனியாகவா?' மீண்டும் அவனது வினா.
'ஆமாம்.' பதில் சொன்னேன்.
'எனது விண்ணப்பமொன்று உன்னிடம்' சிரித்தபடியே தயங்கினான்.
'சொல்' என்றேன்.
'இந்த நத்தார் தினத்தை நான் உன்னோடு கொண்டாட விருப்பமாய் இருக்கிறேன். உனது அறையில். உனக்குச் சம்மதமா?.' புருவங்களை உயர்த்தி, புன்னகைத்தபடியே கேட்டான்.
'சம்மதம் நண்பா, சந்தோசமாக கொண்டாடுவோம், நீ என்னோடு கொண்டாடப் பிரியமாயிருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்' எனது விருப்பையும் தெரிவித்துக் கொண்டேன் அவனிடம். ஏதோவொரு ராகத்தை உச்சஸ்தாயியில் இழுத்தபடி தன் விரல்களைக் கிற்றார் நரம்புகளில்

*மேய விட்டான். அவன் வாசிக்கும் இராகம் என்னவென்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவன் தனது ஆனந்தத்தை வெளிப்படுத்தப் பிரசவிக்கும் ஓர் ஆனந்தமான இராகம் என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.*

*மார்கழி-24 மாலை.*
*பூமியை இருள் தின்ன முயற்சித்துக் கொண்டிருந்தது. 'இருட்டிற்குப் பலி கொடேன்' என சங்கற்பம் பூண்டது போல் பூமியிற் பரந்து கிடந்த பனிப் போர்வை சிறிதளவு நிலா வெளிச்சத்தை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது.*

*எனது அறையின் அழைப்பு மணி ஒலித்தது. கிற்றாருடன் நின்றான் கிழவன். வரவேற்றேன் உள்ளே. புன்னகையுடன் நத்தார் வாழ்த்தைத் தெருவித்தபடி உள்ளே வந்தான். 'நண்பனே இவனால் முடிந்தது இதுதான். இதனை ஏற்றுக் கொள்வாயா?' பொட்டலமொன்றை நீட்டினான். பெற்றுப் பிரித்தேன். அப்பிள் பழங்களும் ஒரு ஓவியமும் இருந்தது. எனது நன்றியைத் தெரி-வித்துக் கொண்டேன் அவனுக்கு. ஓவியத்தில் ஒரு தெருப்பாடகனும், வழிப்போக்கனொருவனும். வழிப்போக்கன் தெருப் பாடகன் இசையில் மயங்கி நிற்பது போல் ஓவியம் சித்திரிக்கப்பட்டிருந்தது. உயரத்தில் நீல வானின் வெண் முகிற் திரளை நீவியபடி பறவைக் கூட்டம் சிறகுகளை விரித்துக் காட்சி தந்தது.*

*'நீ வரைந்தாயா?' கேட்டேனவனை.*
*'ஆமாம் அழகாயிருக்கிறதா?' சிரித்தபடியே கேட்டானென்னை.*
*'மிக அழகாயிருக்கிறது. நீ ஓவியமும் வரைவாயா?' எனது கேள்வி அவனைச் சேரமுன்னம்.*
*'ஏதாவது கிறுக்குவேன். அதனை ஓவியமென நீ ஏற்றுக் கொண்டால் மிகவும் மகிழ்வேன். நான் நினைத்ததை வரைய முனைந்தேன். ஆனால் நினைத்தது முழுவதுமாய் வரவில்லை. இந்த ஓவியத்தை நீ விளங்கிக் கொண்டால் அது எனது கிறுக்கலின் வெற்றி. விளங்கிக் கொள்ளவில்லையெனில்.. வருந்துகிறேன் நண்பா' அவன் கருதுவதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.*

*'உனது இசையை நான் சுவைத்துக் கொண்டு நிற்கிறேன்' நான் கூறி முடிப்பதற்குள் தனது கரங்களிரண்டையும் மேலே உயர்த்தி உரத்த சத்தமாய் ஆனந்த கூச்சலிட்டான். 'நண்பா! மிகவும் நன்றி உனக்கு. மிக்க சந்தோசம் எனக்கு. ஆமாம். நான் மனித நேயத்தைப் பற்றி எனக்குத் தெரிந்தபடி பாடுகிறேன். நீ அதனை விருப்போடு நுகர்கிறாய். நமக்குள் நட்பு வலுவடைகிறது. அந்த நட்பின் வல்லமையோ நீண்ட நெடும் பயண வழியில் முகிலெனத் திரண்டுவரும் சிறகுகளால் உடைத்தெறிந்தபடி உயரத்தில் பறவைக் கூட்டமாய்ப் பறக்கிறது. அவை சுதந்திரமான பறவைகள். ஆமாம் நண்பனே. நமது நட்பின் உன்னதங்கள்*

சுதந்திரமானவை' அவனது முகத்தில் ஆனந்தம் அதீதமாய்ப் பரவியிருந்தது.

நான் எனது தேசத்தை விட்டுத் தப்பியோடி வருவதற்கு முன் அலைந்து திரிந்து எடுத்த புகைப்படங்களில் சில என்னோடு அகதியாக இங்கு வந்தன. அவற்றிலொன்றை நத்தார் பரிசாக அவனுக்குக் கொடுத்தேன். அவனது ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவனது விழிகள் கசிந்தன. என்னை இறுக்கத் தழுவிக் கன்னங்களிரண்டிலும் முத்தமிட்டுத் தனது சிநேகத்தைத் தெருவித்தான். நான் கொடுத்த புகைப்படத்தை நீண்ட நேரமாக வைத்து ரசித்தான். 'அற்புதம்' என்றான் பல தடவைகள். குருநகர்த் துறைமுகத்தில் நின்று மேற்குப் பக்கமாய் எடுத்த நிழற்படமது. பொழுது மறைந்த சற்று நேரம். இயற்கை ஓவியம் வரைந்தது போல் சிவப்பு மஞ்சளுடன் பல வர்ணங்கள் கலந்த மேற்கு வானம். அந்த வானத்தின் கீழ் அமைதியாகக் கிடக்கும் கடற்பரப்பில் சிறு தோணியொன்றை மரக்கோலால் ஊன்றிச் செல்கிறார்கள் இரண்டு சாயங்கால வீச்சுத்தொழில் மீனவர்கள். பல நாட்கள் நங்கூரம் தூக்கப்படாத யந்திரப் படகுகள் துறைமுகங்களை அண்டிக் கிடக்கின்றன ஏதோவோர் அமைதியைக் காத்தபடி. அமைதியைத் தொலைத்து விட்டுத் தேடுவது போல் தூரத்தில் மங்கலாய் ஒரு பறவை. இவை எல்லாவற்றிற்கும் அப்பால் யாழ்ப்பாணத்தோடு தீவுப்பகுதியை இணைக்கும் பண்ணை வீதி. வானத்தின் வண்ணங்களையும், பறவையையும், மீனவர் படகுகளையும், களங்கண்டி வலைகளையும், பண்ணை வீதியையும் தானுமொரு பிரதியெடுத்து இரண்டு காட்சிகளய்க் காட்டுகிறது கடல் நீர். ஒரே படத்தை இரு பிரதிகளெடுத்து மேலும் கீழும் ஒட்டியது போல் தன்னகத்தே பிம்பம் விழுத்திக் கிடக்கிறது கடல்.

'நண்பா! இத்தனை எழில் நிறைந்த தேசமா உனது தேசம்? வருந்துகிறேன் நான். உனது இழப்பு ஈடு செய்ய முடியாது. நீ மீளவும் பெற வேண்டும் இழந்தவை அனைத்தையும். அதனை நான் மிகவும் விரும்புகிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உனது தேசம் மீண்டுமுனக்குக் கிடைக்குமென்று நான் பூரணமாய் நம்புகிறேன். தளராதே. நம்பிக்கையோடிரு' நம்பிக்கையூட்டும் தோரணையில் அவன் எனக்குச் சொன்னான்.

என்னால் எடுக்கப் பட்ட ஏனைய புகைப்படங்களையும் அவனுக்குக் காண்பித்தேன். ஒவ்வொன்றையும் அணுவணுவாய் அனுபவித்து ரசித்தான். சில படுகொலைப் படங்களை அவன் பார்க்க நேர்ந்த போது அவனது விழிகள் சிவந்தன. கோபத்தால் முகம் இறுக்கமானது. இப்போதுதான் நான் அவனைச் சிரிப்பின்றிப் பார்க்கிறேன்.

'இது கொடுமை கொடுமையிலும் கொடுமை. இந்த கொடுமை புரிந்தோரை மன்னிக்க முடியாது. இதனைச் செய்தோர் மனித விரோதிகள்.' எனக்

கோபாவேசமாகக் கத்தினான். அவனது கிற்ரார் அழுதது. கோபித்தது எனக்குத் தெரிய முதற் தடவையாக. புகைப்படங்கள் எல்லாவற்றையும் பார்த்து முடிந்ததும் 'நண்பா! உனது புகைப்படங்கள் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய படங்கள் அதிகமாய் இயற்கையை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. ஏன் மனிதர்களின் அவலங்களை, உழைப்பை, இன்பதுன்பங்களை உன்னால் பதிவு செய்ய முடியாமற் போனது. மனிதர்கள் மீது உனக்கு அப்படி என்னதான் கோபம்? உனது நிழற் படக் கண்ணை மனிதர்கள் பக்கமும் திருப்பு என்றான்'. அந்த இரவு நத்தார் தினத்தை நானும் அவனுமாய் எனது அறையில் கொண்டாடினோம். நிறைய விடயங்களைப் பற்றிப் பேசினோம். அவனைப் பற்றி நிறையவே நான் அந்த நத்தார் இரவில் தெரிந்து கொண்டேன். என்னோடு நத்தாரிரவைக் களித்ததில் அவனுக்கு பன்மடங்கு மகிழ்ச்சி. புதுவருடத்தைக் களிக்க தான் பிறந்த ஊரான பர்கன் என்ற பகுதிக்குப் பயணிக்கவிருப்பதாகத் தெரிவித்து விட்டு என்னிடம் இருந்து விடை பெற்றான். அவன் செல்லும் போது மறு தினம் காலையாயிருந்தது. அவன் என்னோடு கழித்தது சுமார் பன்னிரண்டுமணி நேரங்களாகும்.

சுமார் ஒரு வார காலமாய் நானவனைக் காணவில்லை. அவன் பர்கன் நகரத்திற்குப் போய் விட்டான். மீண்டுமவனைப் புதுவருஷம் முடிந்த மூன்றாம் நாளில் கண்டேன். வழமை போல் அவன் அந்த அப்பிள் மரத்தடியில் பாடிக்கொண்டு நின்றான். என்னைக் கண்டதும் 'நீ குன்ஷாமனி' என்றான். அவன் கூறியதை நான் புரிந்து கொள்ளப் பல வினாடிகளெடுத்தது. தான் பிரயாணிகள் படகில் பர்கன் சென்ற போது ஒரு இலங்கைத் தமிழ் நண்பனும் பயணம் வந்ததாகவும், அக்கரை சேரும்வரை அவன் தன்னோடு நட்போடு பழகியதாகவும், பல தமிழ் வார்த்தைகள் தனக்குச் சொல்லித் தந்ததாகவும், அவற்றில் சிலதுதான் தனக்கும் பாடமாயுள்ளதாகவும் கிழவன் சொன்னான்.

'நீ குன்ஷாமனி' என்றான் மீண்டும் சிரித்தபடி.
'நீ சொல்வதன் அர்த்தம் தெரியுமா உனக்கு?' கேட்டேனவனை.
'ஆமாம் தெரியும். நீ நீடூழி வாழ்க! என்பதுதானே இதன் அர்த்தம். அந்த நண்பன் நல்லவன். விபரமாய் சொல்லித்தந்தான்' அவனது அதே கலப்படமற்ற சிரிப்போடு சொன்னான். அவன் சொன்ன அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை விளங்க வைத்தேன். அவன் மீண்டும் சிரித்தான். 'ஏன் சிரிக்கிறாய்? அந்த நண்பன் மீது உனக்கு கோபம் ஏற்படவில்லையா?' கேட்டேன் நான். 'இல்லை நண்பா சந்தோஷப் படுகிறேன். பயணக் களைப்புத் தெரியாமல் அந்த நண்பனு க்கு நானொரு இலவசப் பொழுது போக்குச்சாதனமாகப் பயன்பட்டிருக்கிறேன். அந்த வகையிலாவது நான் பயன்பட்டேனென்பது என்னைப் பைத்தியம் என்று சொல்லும் நபர்களுக்கு ஒரு சாட்டையடியாய் இருக்கட்டும்' மிகவும் சாதாரணமாகச் சொன்னான் அவன். வேறென்னென்ன வார்த்தைகளைக்

கற்றுத்தந்தான் அந்தத் தமிழன் என்பதைக் கேட்டு அவற்றிற்கான விளக்கங்களைச் சொன்னேன் அவனிடம். அனைத்தும் கேவலமான கெட்ட வார்த்தைகள். வாழ்த்துக்கள், வணக்கங்கள் என்று கிழவனுக்கு இவற்றை அந்த புண்ணியவான் சொல்லிக் கொடுத்திருக்கிறான். அவன் சொல்லிக் கொடுத்த வார்த்தைகளைக் கிழவனுக்கு விளங்க வைக்க மிகவும் கூச்சமாயிருந்தது. இந்த கெட்ட வார்த்தைகளைக் கிழவனுக்கு சொல்லிக் கொடுத்ததில் அந்த முகம் தெரியா மனிதன் என்ன சுகத்தை அடைந்திருக்க முடியுமென என்னை நானே கேட்டுக் கொண்டதில் எந்த விடையும் கிடைக்கவில்லை. இப்போதெல்லாம் நான் கிட்டார் கிழவனைக் கடந்து செல்லும் போதும், அவன் வணக்கம் சொல்லும் போதும் எனக்குள் ஒரு வித உறுத்தல் நெரிப்பதுண்டு. அம்மணப் பதங்களைச் சொல்லிக் கொடுத்த ஒரு நண்பனின் பெயரால் நான் கூனிக்குறுக நேர்ந்து விட்டதே என்பதை எண்ணும் போது மிகவும் சங்கடமாகி விடும்.

'இன்பம் சுவைக்க பட்சமுடைய நண்பர்காள்! நீங்கள் இன்பம் சுகிக்க நான் பயன்படுவேனாகில் என்னைப் பாவியுங்கள். ஆனால் மனித நாகரீகம் சாகும்படியல்ல..'
கிற்றார்பாடகன் ஒரு புதிய பாடலைப் பாடுகிறான் அடிக்கடி. தூஷண வார்த்தைகள் சொல்லிக் கொடுத்த அந்த நண்பனின் பெயராலேயே கிழவன் இந்தப் பாடலைப் பாடுகிறான் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

இன்று வெள்ளிக் கிழமை வாரத்தின் கடைசி நாள். இன்று முடிந்தால் இரு தினங்கள் ஓய்வு நாள். அந்த ஓய்வு நாட்களிரண்டிலும் கிற்றார் கிழவனை எனது அறைக்கு அழைத்து நிறையப் பேச வேண்டுமென்று எண்ணிக் கொண்டு காலையில் வேலைக்குப் புறப்பட்டேன். அப்பிள் மரத்தடியில் வாகனங்களும், சன நடமாட்டமுமாயிருந்தது. என்ன நடந்து விட்டது கிழவனுக்கு என அறிய என்னைத் துரிதப் படுத்தினேன். உடலெல்லாம் நடுக்கமெடுத்தது என்னையறியாமல். அம்புலன்ஸ் வாகனமொன்றும், பொலிஸ் வாகனமொன்றும் அப்பிள் மரத்தடியில் நின்றிருந்ததை என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. மரத்தை நோக்கி நடந்தேன்..

'நோர்வே நோர்வேஜியர்களுக்கே!
கறுப்பர்களே வெளியேறுங்கள். எங்கள் தேசத்தை விட்டு
கறுப்பு நரகங்களே! எங்கள் தேசத்தை அசுத்தப் படுத்தாமல் வெளியே போங்கள்' போன்ற வாசகங்கள் பேத்தர் இரும்பு ஆலையின் சுவரில் கறுப்பு மையால் எழுதப்பட்டு இருந்தது. அந்த வாசகங்களின் கீழே நாஸி சின்னமும் பொறிக்கப்பட்டு, புதிய நாஸிஸ்டுக்கள் என்றும் புத்தம் புதிதாய் எழுதப் பட்டிருந்தன. அங்கு நின்றிருந்த வாகனங்கள் அவசர அவசரமாய் சென்று மறைந்தன. எனது கிற்றார் பாடகனும் அங்கில்லை. என்ன நடந்திருக்கும்

என்பதைத் தெளிவாய் என்னால் ஊகிக்க முடியாமல் இருந்தது. அமைதியாக வேலையில் ஈடுபட என்னால் முடியவில்லை. தலைவலி எனக் கூறிவிட்டு அறைக்குத் திரும்பி விட்டேன். அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவேயில்லை. பேத்தர் இரும்பாலைச்சுவரின் வாசகங்களும், கிற்றார் கிழவனும் எனது தூக்கத்தோடு சமர் புரிந்த வண்ணம்.

நகரத்தின் பிரதான வைத்தியசாலை. முகத்தில் சிறு சிறு ஒட்டுக்களும், வலது காலில் பெரிய கட்டுமாய் எனது கிற்றார் பாடகன் கட்டிலில் படுத்திருந்தான். என்னைக் கண்டதும் எழ முயற்சித்தான். அவனால் முடியவில்லை. ‘வா நண்பா! வந்தென் அருகில் அமர்ந்து கொள்’ அவனது கலப்படமற்ற அதே புன்னகை. அவனது கட்டிலினருகிற் கிடந்த நாற்காலியில் சென்றமர்ந்து கொண்டேன். ‘அவர்கள் உண்மையிலேயே பாவம், தாங்கள் செய்வதன் தார்ப்பரியம் புரியாமல் செய்து வருகிறார்கள். அவர்களின் தவறைப் புரிய வைக்க நான் அந்த இரவில் எவ்வளவோ முயற்சி செய்தேன். அவர்கள் புரிந்து கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. மனித நேயத்தை மறந்து நீங்கள் ஈடுபடும் காரியம் தவறானது சற்று சிந்தியுங்கள் என்றேன். அவர்கள் எதையும் தங்கள் செவியில் வாங்கவில்லை. தேசியத் துரோகி என என்னைக் கூறினார்கள். அடித்தார்கள். அப்படியிருந்தும் நான் சொல்ல வேண்டிய நியாயங்களை எடுத்துரைத்தேன். ஒரு நண்பன் தான் வைத்திருந்த இரும்புத்தடியால் எனது காலை உடைத்தான்’ வலியின் வேதனை அவனை இடை நிறுத்தச்செய்தது. தொடர்ந்தான். ‘நீ எதற்கும் கவலைப் படதே. நான் விரைவில் குணமாகி விடுவேன். அந்த சுவரில் அவர்கள் எழுதியதை நானே வந்து அழித்து விடுகிறேன். அவர்கள் மீது வஞ்சம் வளர்க்காதே. அவர்களுக்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். தங்கள் தவறை விரைவாய் அவர்கள் உணர்வார்கள். நாஸிகளால் தங்கள் தந்தையர் தேசம் அனுபவித்த இன்னல்களை சிந்திக்க மறந்து விட்டார்கள். அவர்கள் அவற்றை உணரும் காலம் அண்மையில் என்பதை நான் அறிவேன். இந்த உலகம் அறியப் போகிறது’

நத்தார் பரிசாய் அவன் எனக்குத் தந்த ஓவியமும், அவனது எல்லாமுமான கிற்றாரும் இப்போது என்னிடம் எனது நிலவறையில். ‘நான் குணமாகி வரும்வரை இதனைப் பாதுகாத்துத் தருவாயா நண்பா?’ என அவன் என்னிடம் அடைக்கலம் தந்த அவனது கிற்றாரின் கம்பிகளை நான் மெல்லத் தொட்டேன். பேச ஆரம்பித்தது. கிழவனின் கிற்றார் இப்போது கிழவனைப் பற்றி என்னோடு நிறையவே பேசத் தொடங்கியது. எனது நிலவறையில் அந்தக் கிற்றாரின் பேச்சுக் குரல் நிறைந்து வியாபித்திருந்தது.

★★★★★

**நன்றி: சுவடுகள் இல.64 (1995 பெப்ரவரி)**

# ஏழாற்று கன்னிகள்

ஈச்சாமுனைக் குன்று.

நயினாதீவின் வடகிழக்காக, குறிகாட்டுவானின் வடகரை முனையாக, பனைகளும், தென்னைகளும் கூட்டாகச் சேர்ந்து சாமரம் வீசும் பிரதேசம் ஈச்சாமுனை. இந்த முனையின் கரையிலிருந்து தொடங்கும் இருபத்திநான்கு அடி ஆழமான பணிவு கடல்தான் ஈச்சாமுனைக் குன்று. தீவுகளால் வேலியடைக்கப்பட்ட கடற்திடலின் ஆழமான பகுதியும் இதுதான்.

ஈச்சாமுனைக் குன்றிலிருந்து வடகிழக்காக கூப்பிடு தொலைவில் அமைந்த கடல்மலை நாவட்டப் பாறை. நாவட்டப்பாறை அமைந்த திடல் பதினெட்டு அடி ஆழமானது. அந்த நிலத்திலிருந்து பதினைந்தடி உயரமான மலைதான் நாவட்டப்பாறை.

நாவட்டப் பாறையைச் சூழவும் சிறிதும், பெரிதுமான வட்டக்கல் பாறைகள் ஒரு அரசதானிக்கு காவலரண்கள்போல ஆயுள்பரியந்தம் நிமிர்ந்து நிற்கின்றன. இவைகளுக்கிடையே காவல் வீரர்கள்போல் சாட்டாமாற்றுச் செடிகள் எந்த நேரமும் விழித்திருந்து வடக்கு நீருக்கும், தெற்கு நீருக்கும் இசைந்தாற்போல் அசைந்தசைந்து பதங்கள் பிடிக்கும். இவை எப்போதும் வடக்கு தெற்கு திசைகளுக்கு ஏற்றாற்போல் தலையசைத்து வந்தாலுங்கூட, இவையும் நாவட்டப் பாறையின் காவல் வீரர்கள் என்ற கணக்கிலேயே சேர்மதியாக்கப் பட்டு வந்தன.

கடல் மலையான நாவட்டப் பாறையைச் சூழவும் யாராலும் அபகரித்துச் செல்ல முடியாத கடற்தாமரைகள் படர்ந்து, விரிந்து அழகெறியும். இவை ஒருபோதும் தமது இருப்புக்களை மாற்றிக் கொண்டதில்லை. மாற்றவும் முடியாது. ஏனெனில், இவற்றின் ஆணிவேர் நாவட்டப் பாறையின் நிலத்தடியில் மிக ஆழமாகவே

வேரூன்றி இருந்தன. இவற்றுக்குச் சொந்தமான தாமரை காத்தான்களோ கண்ணயர மறந்தனவாய் தத்தமக்குச் சொந்தமான தாமரைகளின் அயலில் சுழன்றடித்துத் திரியும். எப்போதும், எங்கேயும் தமக்கேயான தாமரைகளை விட்டகலாவண்ணம் வாழும். தாமரைகளை எதிரிகள் தீண்ட வரும்போது தமது சக்திக்கேற்ப தாக்குதல்களைச் செய்யும். தம்மை நோக்கி ஆபத்துக்கள் வரும்போது, ஓடிச்சென்று தாமரைக்குள் தற்காப்பாகப் பதுங்கிக் கொள்ளும்.

நாவட்டப் பாறையைச் சூழவும் இடையிடையே பெருமணற் பரப்புகளும், பசுந்தாவர வரப்புகளும், பூண்டிக்கற் செடிகளும், சிறுமுருகைக் கொத்தைகளும் காட்சிருசி தருவனவாய் நந்தவனமாகவே இருக்கும்.

இங்கேதான், இந்த நாவட்டப்பாறையின் மேற்பரப்பில்தான் இவர்கள் ஏழுபேரும் வந்து தஞ்சமாகியிருக்கின்றார்கள்.

ஓம்.
ஏழு பெண்களும் நாவட்டப் பாறையின் மேல் அமர்ந்திருக்கிறார்கள். ஒருவரோடொருவர் எதுவுமே பேசிக் கொள்ளாமல் மவுனமாகவே உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஆளுக்கொரு திசையாக ஏழு திசைகளை நோக்கிப் பார்த்தபடி இருக்கிறார்கள். தாங்கள் வாழ்ந்திருந்து, விட்டுவந்த தத்தமது திசைகளையே பார்த்தபடி இருக்கிறார்கள். பெருந்துயர் இவர்களது முகங்களில் அப்பியிருக்கிறது. இவர்களது விழிகளால் சோகம் இடைவிடாது ஒழுகிக் கொண்டேயிருக்கிறது.

எழுவரும் சொல்லிமாளாத் துன்பக் கனலில் துவண்டு போயிருக்கிறார்கள். கிழிக்கப்பட்ட காயங்களிலிருந்து வீசும் இரத்த வாடை எல்லாத் தீவுகளின் கரையோர அடவிப் பாறைகளையும் கவிந்து படர்ந்து, அவற்றை உருக்கிக் கடலோடு கடலாய்க் கரைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனித்தூக்க பருவ காலங்களில் கவுதாரிமுனை வெண்மணல் நிலத்தின் தெளிந்த கடல்போல் பளிங்கென மின்னியவர்களின் முகங்கள் கந்தகம் விழுந்து வெடித்த கட்டிடச் சுவர்கள்போல் கரும்புகை படிந்திருக்கின்றன.

ஓம்.
இவர்களை நான் முன்பும் பல தடவைகள் சந்தித்திருக்கிறேன். சிரித்துப்பேசிக் கும்மாளமிட்டுக் குதூகலித்திருக்கிறேன். இவர்களைச் சந்திக்கும் கணங்களிலெல்லாம் வரத்துக்கள் வாங்கியிருக்கிறேன். இவர்களால் வாழ்ந்திருக்கிறேன். மிகக் கொடூரமான பஞ்சக் காலங்களில்கூட இவர்கள் என்னை அள்ளி அணைத்து பட்டினி கலைத்து, பசியாற்றி காத்திருக்கிறார்கள்.

ஆறாம் புயலடித்து கடலிலே கவிழ்ந்திட்ட கப்பல்களைக் காத்த மீட்பர்களாக இருந்திருக்கிறார்கள். என்னையும் எனது சனத்தாரையும் பகை அணுகாதபடியும், இயற்கைச் சீற்றங்களால் பழுதாகாதபடியும் காலகாலமாகக் காத்து வந்திருக்கிறார்கள்.

அப்போதைய காலங்களில் நான் இவர்களைப் பார்த்தபோது இவர்களது ஒவ்வொருவரின் வதன ரூபங்களையும் மனதுக்குள் வர்ணிக்கவே மொழி தெரியாது திணறியிருக்கிறேன். என்வசப்பட்ட மொழியில் ஒரு சொல்தானுங்கூட இல்லை இந்த சுந்தர சொரூபிகளை எடுத்தியம்ப. இவர்கள் வயதுகளில் மூத்தவர்கள், மூப்புக்கும் மூத்தவர்களாகவும், இளையவர்கள், அதனிலும் இளையவர்கள் என இருந்தபோதும், எத்தகைய மாறுபாடுகளுமற்று எழுவருமே அச்சுக் குலையா அழகோடும், இளமையோடும் தேவதைகளாகக் காணப் பட்டார்கள்.

ஓம். தேவதைகள்தான்.
இவர்கள் ஒவ்வொருவரும் என்னை அள்ளியெடுத்து மடியில் வைத்துப் பாலூட்டியிருக்கிறார்கள். கன்னங்கள் வருடி, ஆர அணைத்து முத்தங்கள் வாரிக்கொட்டி, காதலோடு கரம் பற்றி இந்த ஏழாற்றுத் திடல் பூராவும் உலா வந்திருக்கிறார்கள். நாங்கள் எண்மரும் சுதந்திரிகளாக, அனைத்துலக சுகங்களையும் சப்பித் துப்பியவர்களாக கோலாகலமாய் அலைகளின் மேற்பரப்பிலும், கடலடியிலும் பாடித் திரிந்திருக்கின்றோம்.

ஓம்.
எனது பாட்டனுக்கும் பாட்டனையும் இவர்கள் அறிவார்கள்.
அவர்களுக்கும் தாய்களாய் இருந்து பாலூட்டி, காதலிகளாய் இருந்து சரசமாடியவர்கள்தான் இவர்கள். ஆனாலும், 'ஏழாத்துக் கன்னிகள்' என்ற பொதுமைப் பெயரைத் தவிர இவர்களுக்குத் தனித் தனியாகப் பெயர்கள் எதுவும் இருந்ததில்லை. இருந்திருக்கக்கூடும், நான் அறிந்திலேன். இருந்ததாக இற்றைவரை அறிகிலேன்.

இந்த ஏழு தேவதைகளையும் முதன்முதலில் நான் சந்தித்த சம்பவம் மிகவும் அவலச் சுவையானது. இப்பொழுது நினைத்தால் என்னாலும் நம்புதற்கரியது.

1978ம் வருடம், சித்திரை மாதம் 2ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை மாலை. சிதறியடித்த சோளகப் பருவம். எமது கரையிலிருந்து புறப்பட்டு, அனலைதீவுத் தென்முனையும், புளியந்தீவு வடமுனையும் இணையும் மூக்கறுத்தான் குடாவில் அப்புவும் நானும் ஒருவார தாணையம் இட்டிருந்தோம். இந்தக் குடாக் கரையில்தான் லோஞ்சிக்கார விநாயகமூர்த்தியரின் வீடு இருக்கிறது. பத்து

பன்னிரண்டு தென்னைகளுடன் கூடிய அகண்ட வளவு. கிழுவையும் பூவரசும் நிரைத்த வேலி கொண்ட வளவு.

ஓஹோ எனச் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு பெரிய வீடு அல்ல. திண்ணை வைத்துக் கட்டிய அளவான கல்வீடு.வளவுக்குள் வடக்குப்பக்க வேலியோரமாக லோஞ்சிக் கயிறுகண்ணி, கொடிதடி, நங்கூரம் என லோஞ்சி வள்ளத்தின் தளபாடங்களைப் போட்டுவைக்கவென ஒரு திறந்த கொட்டகை.

எங்கள் கரையிலிருந்து தோணிகள் இந்தத் தீவுக்கு தொழிலுக்கு வரும் தருணங்களில் இந்தக் கொட்டகையில்தான் தங்குவார்கள். ஒவ்வொரு நாளும் கறிமீன் கொடுத்தால் போதும் விநாயகமூர்த்தியர் பரம திருப்தி கொள்வார். சும்மா கிடக்கிற கொட்டகைதானே, தொழிலாளிகள் வந்து தங்கிச் செல்லலாம் என்று  விநாயகமூர்த்தியர் தானாகவே முன்வந்து அனுமதி தந்திருந்தார்.

அனலைதீவு வடக்குமுனையில் ராசேந்திரம் அப்புவின் குடிசையிலும், இறங்குதுறையான மடத்தடியிலும், விநாயகமூர்த்தியரின் இந்தக் கொட்டகையிலும் என தங்குதொழிலாளர் வந்து தங்கிப் போவார்கள். இந்தத் தங்கிச் செல்லும் தொழில் அடிசோளகக் காலங்கள் நான்கில் இருந்து ஆறு வாரங்களுக்கு மட்டும்தான்.

பன்னிரண்டு அறக்கொட்டியான் வலைகள். எங்களுக்குச் சொந்தமான அந்த ஒரு துவர்ப்பாய் கொண்ட சிறகுகட்டித் தோணி. இருவரின் சமையலுக்கும் அளவான நாலைந்து பாத்திரங்கள், உப்பு, புளி, மிளகாய், வெங்காயம், அரிசி இவைகள் ஒரு உரப்பையில். விநாயகமூர்த்தியரின் லோஞ்சிக் கொட்டகையில் தங்குதாணையம் போட்டுக் கொண்டோம் அப்புவும் நானும்.

ஞாயிறு மாலை கடலில் விரித்த வலைகளை திங்கள் காலைதான் தோணியில் ஏற்றுவோம். எங்கள் தொழிலும், வரும்படியும் திங்களில் இருந்து சனி வரைதான். திங்களில் இருந்து வெள்ளி வரை கிடைக்கும் பிடிபாடுகளை அனலைதீவு இறங்குதுறையில் சனங்களுக்கு விற்றுக் காசாக்கி விடுவோம். அப்பு ஊருக்குள் சென்று கள்ளடித்துவிட்டு, எனக்கும் தின்பண்டங்கள் ஏதாவதும் வாங்கிக் கொண்டு வருவார். வெந்தது பாதி, வேகாதது பாதியாக சாப்பிட்டுமுடித்து, வலைகளைச் செப்பனிடத் தொடங்கிவிடுவோம். மாலையாகிவிடும். மீண்டும் வலை படுப்பு.

இப்படியே வெள்ளிக்கிழமைவரை நகர்ந்து போம். இறுதி நாளான சனிக்கிழமை காலை வலைகளையும் ஏற்றிக்கொண்டு கிடைக்கும் பிடிபாட்டோடு கரை திரும்பி விடுவோம். ஞாயிறு ஓய்வு நாள்.

சனிக்கிழமை 8ம் திகதியும் வந்தது. கடலிலிருந்து தொழிலை ஏற்றிக்கொண்டு கரை திரும்பும் நாள். எனக்கோ பெரும் மகிழ்ச்சி. ஒரு வாரமாக உப்புக் கடலிலும், காற்றிலும் உலைந்து விட்டு, வீடு திரும்பும் நாள் யாருக்குத்தான் மகிழ்வைத் தராது.

பிடிபாடும் மோசமில்லை. மற்றைய நாட்களை விடவும் இன்று அதிகம்தான். அதிலும் இன்று விலை போகக்கூடிய பருமனான ஆண் விளைமீன்கள் ஐந்தும், மூன்று பெரும் பாற்சுறாக்களும். தவிரவும் கண்டதும் கடியதுமாக ஒரு வங்கு நிறைந்த மீனும், நண்டுகள் ஒரு பறியும். மோசமில்லை என்று சொல்வதைவிட, நல்ல பிடிபாடு என்றே சொல்லிக் கொள்ளலாம்.

தலைவலைக் கல்லைத் தூக்கி அணியத்துக்குள் வைத்துவிட்டு, பாய்மரத்தைப் போடும்போது அப்பு சொன்னார் ‘பாலத்தடிக்கு விடு மகனே’ என்று. ஏனென்று நான் கோட்கவில்லை.

அனலைதீவு இறங்குதுறையில் தோணியை அணைய விட்டதும் மீன் வாங்குவதற்கென நிறையச் சனக் கூட்டம். காரணம் எங்களைப்போலவே ஏனைய தோணிக் காரர்களும் அப்படியே கடலில் இருந்து வலைகளை ஏற்றிக்கொண்டு தத்தமது கரைகளுக்குத் திரும்பி விடுவார்கள். இக்கரைக்கு வர மாட்டார்கள். அனலைதீவு மக்களின் அன்றாடத் தேவைக்கேற்ற மீன்கள் எப்போதுமே கிடைப்பதில்லை. சூழவும் கடல்படு திரவியங்களைத் தன்னகத்தே கொண்ட இந்தத் தீவு மக்களின் அன்றாட உணவுக்கான மீன்கள் எப்போதும் நிறைவாய்க் கிடைத்ததில்லை.

*****

நான் எதிர்பார்த்ததை விடவும் அதிக விலைக்கே முழு மீன்களும் விற்றுத் தீர்ந்தன. ஒரு நண்டுகூட இல்லை. எல்லாம் விற்றுத் தீர்ந்து விட்டன.
இனி எமது கரைக்குத்தானே திரும்பப் போகிறோம் என நினைத்திருந்த எனக்கு முன்னால் அப்பு ஒரு பெரும் குண்டைத் தூக்கிப் போட்டார்.

‘இன்னும் ரெண்டு நாள் கடலப் பாத்துக்கொண்டு போவம் தம்பி’ என்றார்.
எனக்கோ அப்புமீது பெருங் கடுப்பு ஏறியது. கோபித்துக்கொண்டு அப்படியே பாலத்தடியில் லோஞ்சிகள் கட்டும் ஒரு கட்டையில் அமர்ந்து கொண்டேன்.
அப்புவுக்கு விளங்கி விட்டது. ‘இல்லயடா தம்பி. பிடிபாடு பறுவாயில்லாமக் கிடக்கு, இந்தக் காத்து ரெண்டு மூணு நாளால விழுந்திடும். பிடிபாடு குறஞ்சு போயிடும். பல்லக் கடிச்சுக்கொண்டு இன்னும் ரெண்டு கடல் பாத்தமெண்டால்

ஒரு பீசு வல வாங்கிப் போடலாம்'
அப்பு இதைச் சொன்னதும் மறுத்துப் பேச என்னிடம் ஒருதுளி நியாயமும் இல்லாமல்ப் போயிற்று.
'சரியெண, கறிக்கு ஒண்டும் எடுக்காமல் எல்லாத்தையும் வித்துப்போட்டம்?'
'ரெண்டு வலய அவிழ்த்து ஒரு பாடு போட்டமெண்டால் கறிக்குப் பிடிச்சுப் போடலாம்' எனது சம்மதம் கிடைத்ததையிட்டு அப்பு பெருமகிழ்வோடு பாலத்தடியிலிருந்து தோணியை அவிழ்த்து அகலத் தள்ளினார்.

அப்பு தோணியை தெற்கு நோக்கிச் செலுத்திக் கொண்டிருக்கும்போதே மூன்று வலைகளை அவிழ்த்து தெரிவாக்கி வைத்துக் கொண்டேன். தென்முனைக் குடாவுக்கு வந்ததும் வலைகளை கடலில் இறக்கும்படி அப்பு அணியத்தில் நின்றபடி திறவு சொன்னார்.
'குடாவை வளயிறதுக்கு மூணு வல காணதணெ' என்றேன்.
'அது போதும். கறிக்குத்தானே?' என்றார் அப்பு.

மூன்று வலைகளையும் கடலில் இறக்கியபின் தோணியை குடாவுக்குள் செலுத்திச் சென்றார். மரக்கோலால் தண்ணீரின் மேற்பரப்பில் தொம் தொம் என்று அடித்தார். பின்பு வலையின் வடக்குத் தலைப்புக்கு வந்ததும் வலைகளை தோணியில் ஏற்றச் சொன்னார்.

மூன்று காடன் சிறையாக்களும், ஒரு அளவான கருங்கண்ணிப் பாரையும். எனக்கோ பெரும் பரபரப்பும், பெரும் மகிழ்வும்.
ஓம்.
தோணியைத் தெற்கு நோக்கிச் செலுத்திக்கொண்டு தூரத்தில் வரும்போதே இந்தக் குடாவுக்குள் இரைப் பிடித்துக்கொண்டு திரிந்த கருங்கண்ணியைக் கண்டிருக்கிறார் அப்பு.
'மானயும் மீனயும் கண்டமாத்திரத்தில கொல்லுறவன்தான் சரியான வேட்டக்காறன்' என்று அப்பு அடிக்கடி சொல்வார். அப்பு சரியான வேட்டைக்காரன் தான். அப்பு பதமான வேட்டைக்காரன் மட்டுமல்ல, அநியாயத்துக்கு நியாயக்காரன், அள்ளுகொள்ளை இரக்க உயிரி. கொல்வதும் வெல்வதும் மட்டுமல்ல வீரம். காப்பதும் வீரம்தான். மாவீரம். அப்பு ஓர் அப்பழுக்கற்ற மாவீரன்

ஒருமுறை படுப்புவலைக்கு இருவரும் போயிருந்தபோது எதுவுமே அகப்படவில்லை. இறுதி வலையின் தலைப்பில் ஒரு மட்டான சுறா பட்டிருந்தது. ஏமாற்றத்தில் வாடிக்கிடந்த நான் சுறாவைப் பிடித்துத் தோணிக்குள் போட்டுவிட்டு மகிழ்ச்சியில் துள்ளியபோது 'தம்பி, அது சாகமுன்னம் கடல்ல விடு மோனே...' என்றார். நிமிர்ந்து பார்த்தேன் அவரை.

‘ஓம்ராசா கடல்ல விடு மோனே....’ என்று கெஞ்சுவதுபோல் சொன்னார்.
‘கிழவனுக்கென்ன விசரோ....?’ என எண்ணிக்கொண்டு வாரிப் பலகையில் அமர்ந்தபடியே அவரைப் பார்த்தேன்.
‘அது குட்டித்தாச்சி மோனே விடு ஆறேழு குட்டி இருக்கும்போல’
உண்மையில் திகைத்தேதான் போனேன். எவ்வித மறு பேச்சும் பேசவில்லை நான். சுறாவை பவ்வியமாகத் தூக்கி கடலில் விட்டேன். மெல்ல அசைந்தபடி நீருக்கடியில் சென்று மறைந்து கொண்டது. இதுவும் ஒரு சரியான வேட்டைக்காரனுக்கான அழகுதான் என்பதை அன்று படித்தேன். இப்போ இந்தப் பெரிய கருங்கண்ணிப் பாரையை என்ன செய்வது...? நேரம் பதினோரு மணியையும் நெருங்கி விட்டது. மீன் வாங்க மடத்தடிக்கு யாருமே வர மாட்டார்கள்.

‘வடக்கமுனைக்குப் போவம்’ என்று சொல்லிக்கொண்டு அப்பு பாயை வலித்தார். புரியாமல் நின்றேன் நான். அனலைதீவின் வடக்கு முனையில் ராசேந்திரம் அப்புவின் குடிசை இருக்கிறது. கெட்டிலில் இருந்து குடி பெயர்ந்து நீண்ட காலமாக அவர் அங்கு குடும்பத்தோடு வாழ்கிறார்.

வடக்குக் கரைக்குச் சென்று சேர்ந்தோம். ராசேந்திரம் அப்புவுக்கு மெத்தப் பெரிய சந்தோசம். இப்படி எப்போவாவதுதான் யாராவது அவரைத் தேடி வருவார்கள்.
ராசேந்திரம் அப்பு தனக்கென சுரைக்காய் முட்டியில் வாங்கி வைத்திருந்த இரண்டு போத்தல் கள்ளை இருவரும் ஆளுக்குப் பாதியாய் சுவைக்கத் தொடங்கினார்கள்.

கடற்கரை மணலில் பலையோலைகளைப் பரப்பிவைத்து இருவரும் கருங்கண்ணிப் பாரையை வெட்டிப் பங்கு பிரித்தார்கள். பன்னிரண்டு பங்குகள். இரண்டு பங்கை கறிக்கு எடுத்துக்கொண்டு, மீதி பத்துப் பங்கையும் வடலியில் குருத்தோலைகளை வெட்டி பத்துக் குடலைகள் கட்டிக் கொண்டார்கள். பின்னேரத் தவறணையில் விற்கத் திட்டம் போட்டுக் கொண்டார்கள் என்பது விளங்கிப் போயிற்று.

ராசேந்திரம் ஆச்சியின் கையால் கம கமவென்று சிறையாப் பொரியலும், கருங்கண்ணிப்பாரைக் குழம்பும் என நல்ல வேட்டை. ஒரு கிழமையாக செத்துக்கிடந்த நாக்கு வீட்டுச் சமையலின் சுவையில் உயிர்த்தெழுந்து கொண்டது.

** ** ** **

மாலை ஐந்து மணியாகியும் தவறணைக்குப் போன அப்புவையும், ராசேந்திரம் அப்புவையும் காணவில்லை. அவர்கள் இன்னமும் வீடு திரும்பவில்லை. பொழுது சாய்வதற்குள் கடலில் பாடு பிடித்து வலைகளை இறக்கியாக வேண்டும். அப்போதான் இரவு எட்டு மணிக்காவது கரை திரும்பி வர முடியும். மணி ஐந்தரை. அப்புவைக் காத்திருந்து பயனில்லை என்பது நன்றாகவே விளங்கி விட்டது. அப்படி அவர் வந்தாலும் கருங்கண்ணி விற்ற காசில் வஞ்சகமில்லாமல் ஏற்றியிருப்பார். நல்ல வெறியில்தான் வருவார் என்பதும் தெட்டத் தெளிவு.

தாணியை கரையை விட்டு நகர்த்தினேன்.
'கவனமடா மோனே.... பாத்துப் போயிட்டு வா ராசா...' கரையில் நின்றபடி ராசேந்திரம் ஆச்சி பவுத்திரம் சொன்னார். உண்மையிலேயே நான் தனியனாகப் போவது ஆச்சிக்கு விருப்பமில்லை என்றாலும், கடலுக்குப் போகிறவர்களை பின்னால் அழைக்கவோ, தடுக்கவோ மாட்டார்கள் மீனவப் பெண்கள்.

அதிக தூரமும் செல்லவில்லை. கிழக்கு நோக்கி அரைமணி நேரம் தோணியைச் செலுத்தி பாடு பிடித்து வலைகளை கடலில் இறக்கத் தொடங்கினேன். பன்னிரண்டாவது வலையையும் இறக்கி முடித்து தலைப்புக் கொடியைக் கடலில் எறியும்போது கடையால் பகுதியில் படார் என்ற பெருஞ் சத்தம். தோணி அல்லோலகல்லோலப் பட்டது.

மாலை ஆறு மணிக்கு காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து நயினாதீவுக்கு ரோந்து வரும் அவர்களது இரும்புப்படகு தோணியின் கடையால் பகுதியில் மோதிக்கொண்டு சென்றது. இருளத் தொடங்கியதாலும், சோளகக் காற்றின் இரைச்சல் அதிகமாயிருந்ததாலும் அவர்களது ரோந்துப் படகு வந்ததை நான் அவதானிக்கவில்லை.

இந்தப் பாதை அவர்களின் சுதந்திரமான ஓடுபாதை. குறுக்கே எது வந்தாலும், யார் வந்தாலும் இடித்து மோதித் தள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். இவர்களின் இந்த அடாவடித் தனங்களை எக்காலத்திலும் தட்டிக் கேட்க நாதியற்று இருந்தார்கள் இந்தப் பகுதி கடலோடிகள்.
அவர்களது பாதையில் நாமேன் குறுக்கே போவான் என்ற முடிவாக யாருமே இந்தப் பகுதியில் பாடுகள் பிடிப்பதுமில்லை, நீண்ட நேரம் தோணிகள் செலுத்தி நடமாடுவதும் இல்லை.

'எங்கட சிறகுகட்டியாள் வலும் வைரிதான்... இரும்புக்கப்பல் மோதிக்கூட சிதறாமல் இருக்கிறாள் சிங்காரி' என எனக்குள் எண்ணியபடி, படபடத்த நெஞ்சுக்கு ஆறுதல் சொல்லி அமைதியாக்கிக் கொண்டேன். கடையால்

பகுதிக்கு ஓடிவந்தேன். உச்சந்தலையில் இடி விழுந்ததாயிற்று. கடையால் ஏராப்பகுதியின் உட்பலகை விலகி தண்ணீர் பொசுபொசுவென உள்ளே புகுந்துகொண்டிருந்தது. அணிந்திருந்த பெனியனை, சாரத்தைக் கொண்டு பலகையின் நீக்கலை அடைக்க முயற்சித்தேன். முடியவில்லை. முயற்சிகள் படு தோல்வியில் முடிந்தன.

தோணிக்குள் நீர் நிறைவதற்குள் கரை சேர்ந்துவிட எடுத்த முயற்சிகளும் தோற்றுவிட்டன. சோளகக்காற்று அதற்கு அனுமதி தரவில்லை. மரக்கோலும் கைதவறி அலையில் அடிபட்டுப் போய்விட்டது. தோணி முற்றுமுழுதாக மூழ்கி விட்டது. தோணியை கைவிட்டு கரையை நோக்கி நீந்தத் தொடங்கினேன். அலையின் கடுமையும், ஆற்று வாயின் நீரோட்டமும் வடதிசை நோக்கி இழுத்துச் சென்றது. ஆயினும் முயற்சியைக் கைவிடாது மேற்கு நோக்கி நீந்திக்கொண்டே இருந்தேன்.

பருத்தீவும் தாண்டி, எழுவைதீவு தெற்கு முனையும் கடந்து போனது. நயினாதீவு ரோந்து போன அவர்களின் இரும்புப் படகு மீண்டும் காரைநகர் நோக்கித் திரும்பிப் போய்க் கொண்டிருந்தது. மிக அருகாமையாலேயே அவர்கள் என்னைக் கடந்து போனார்கள்.

எழுவைதீவு வடக்கு முனையும் தாண்டி விட்டது. ஆற்றுவாய் நீரோட்டமும், அலைகளின் வேகமும் வடக்கு நோக்கி என்னை இழுத்துக்கொண்டு போனதே தவிர எந்தக் கரையையும் அண்ட விடவில்லை. கை கால்கள் விறைத்து அசைக்க முடியாதபடி போயின. மெல்ல மெல்ல விழிகள் சொருகிக் கொண்டன.

*****

அதிகாலைப் பறவைகளின் ஒலிகளும், கடலின் இரைச்சலும் காதுகளுக்குள் நுழைந்தன. மேனி கதகதப்பாக இருந்தது. மிகவும் பிரயத்தனப்பட்டு விழிகளைத் திறந்தேன். அழகான ஓவியமாக கிழக்கில் வெள்ளாப்புக் கீற்றுக்கள். பனை மட்டைகளையும், ஊமல்களையும், சுள்ளிகளையும் இட்டு மூட்டிய நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. சூழவும் ஐந்து பெண்கள் நெருப்பு அணைந்துவிடாமல் சுள்ளிகளை முறித்து முறித்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். நிமிர்ந்து பார்த்தேன். எனது தலையைத் தன்மடி கிடத்தி, முடியை வருடிக் கொண்டிருந்தாள் ஒருத்தி. இன்னொருத்தியோ தனது மடியில் எனது கால்களைத் தூக்கி வைத்து, பாதங்களைத் தேய்த்து சூடேற்றிக் கொண்டிருந்தாள்.

கழுத்திலிருந்து பாதங்கள் வரை தையலற்று நெய்யப்பட்ட சாம்பல்நிற

அங்கிகள். அதில் இளநீலம், இளம்பச்சை நிறங்களில் சிறு சிறு கடற்பூக்கள் வேலைப்பாடுகள். எழுவரும் ஒரேமாதிரியான உடைகளை அணிந்திருந்தார்கள். ஆனால் கடற்பூக்களின் வேலைப்பாடுகள் மட்டும் வெவ்வேறானவையாக இருந்தன.

‘செத்துப்போய் சொர்க்கம் வந்து விட்டேனோ?, இல்லையே அதற்கு சாத்தியமே இல்லையே?’ இன்னமும் சாகவில்லை என்பதையும், எழுவைதீவு வடக்கு முனையில் இருக்கிறேன் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

எழுந்து நிற்க முயற்சித்தேன். அவர்கள் தடுக்கவில்லை. மாறாக நான் எழுந்து நிற்க ஒத்தாசை செய்தார்கள். சுட்டெரிக்கும் சூரியனைக்கூட நேர்கொண்டு பார்த்துவிடலாம். ஆனால் இந்த தேவதைகள் ஒவ்வொருவரும் ஆயிரம் சூரியாள்களாய் இருந்தார்கள்.

கண்களில் நீர் சொரிந்தோட அவர்களை நன்றியோடு பார்த்தேன். கலகலவெனச் சிரித்தபடி எழுவரும் என்னை இறுக அணைத்து முத்தமிட்டுவிட்டு கடலில் குதித்து மறைந்து கொண்டார்கள்.

ஓம்.
இந்த ஏழாற்றுப் பிரிவுத் திடலின் ஏழு சமுத்திரங்களின் அரசிகள் இவர்கள். இவர்களுடனான எனது முதற் சந்திப்பு இப்படித்தானே நிகழ்ந்தேறிற்று. அந்த முதற் சந்திப்பின் பின்னாக பல தடவைகள், பலவேறு சந்தர்ப்பங்களில் இவர்களைத் தனியாகவும், ஒன்றாகவும் சந்தித்திருக்கிறேன். நிறையவே பேசியிருக்கிறோம். இவர்களிடமிருந்து காலாதிகாலக் கதைகளெல்லாம் கேட்டறிந்திருக்கிறேன்.
ஏழு தேவதைகளுக்கும் நானே பெயர்களை இட்டுக் கொள்ளும் ஆசையைச் சொன்னேன். அகமகிழ்ந்து ஒப்புக் கொண்டார்கள்.

வடக்காள், வடமேற்காள், மேற்காள், தென்மேற்காள், தெற்காள், தென்கிழக்காள், கிழக்காள் எனப் பெயர்களைச் சூட்டினேன். நானிட்ட பெயர்களைக் கொண்டே எழுவரையும் அழைத்து வந்தேன்.

*******

ஆனால் இன்று இவர்கள் எழுவரும் படுகாயங்கள் பட்ட, கீலங்கீலமாகக் கிழித்தெறியப்பட்ட இறைச்சித் துண்டங்களாக இந்த ஒதுக்குப்புறத்தில் நாவட்டப் பாறையின்மேல் வந்து ஒதுங்கிக் கிடக்கிறார்கள்.
யார் இவர்களை வேரறுத்துச் சீரழித்தார்?

இவர்களை வேரறுத்துச் சீரழித்தவர் யார்?

ஓம்.
ஏழு பெண்களும் நாவட்டப் பாறையின் மேல் அமர்ந்திருக்கிறார்கள். ஒருவரோடொருவர் எதுவுமே பேசிக் கொள்ளாமல் மவுனமாகவே உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஆளுக்கொரு திசையாக ஏழு திசைகளை நோக்கிப் பார்த்தபடி இருக்கிறார்கள். தாங்கள் வாழ்ந்திருந்து, விட்டுவந்த தத்தமது திசைகளையே பார்த்தபடி இருக்கிறார்கள். பெருந்துயர் இவர்களது முகங்களில் அப்பியிருக்கிறது. இவர்களது விழிகளால் சோகம் இடைவிடாது ஒழுகிக் கொண்டிருக்கிறது.

எழுவரும் சொல்லிமாளாத் துன்பக் கனலில் துவண்டுபோயிருக்கிறார்கள். அடிபட்ட காயங்களிலிருந்து வீசும் இரத்த வாடை எல்லாத் தீவுகளின் கரையோர அடவிப் பாறைகளையும் கவிந்து படர்ந்து, அவற்றை உருக்கிக் கடலோடு கடலாய்க் கரைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு வார்த்தை தனும் இவர்களை நோக்கிக் கேட்க முடியாதிருக்கிறதே என்னால்.... ஐயோ எனக் கதறி அழவும் ஒருதுளி வல்லமையும் என்வசப் படாமல் இருக்கிறதே.

முகங்கள் சிதைந்தவர்களாக, முலைகள் அறுந்து தொங்கியவர்களாக, பிறப்புறுப்புக்கள் குதறப் பட்டவர்களாக, மேனி சர்வாங்கமும் வார்கசையால் அடித்துக் கிழிக்கப் பட்டவர்களாக.. ஐயோ எனக் கதறி அழவும் ஒருதுளி வல்லமையும் என்வசப் படாமல் இருக்கிறதே என் செய்வேன்?

ஒவ்வொருவராய் ஓடிச்சென்று அணைத்து முத்தமிடுகின்றேன். காயம்பட்ட மேனி வலியால் முனகுகிறார்கள். எனது கண்களிலிருந்து ஒழுகும் நீரைத் துடைக்கிறார்கள். அவர்களது கரங்கள் சிவந்து போகின்றன. ஓம். இரத்தக் கண்ணீர்.

★★★★★★★

'ஆரு.....? இந்தக் கொடும செய்தது ஆரு....?'

'யாருமல்ல மகனே! அவர்களும் எமது முலைகளை அருந்தி வளர்ந்த மகன்கள்தான்....'
வடமேற்காள் அனுங்கிய குரலில் சொன்னாள். அவளது கன்னங்கள் இரண்டும் தாறுமாறாய்க் கிழிக்கப் பட்டிருந்தன. முள்ளுக் கம்பிகளால் அடித்துக்

கிழித்ததுபோல் அவளது முதுகுப்பரப்பு கிழிந்து தொங்கியது.

'பெரும்புயற் காற்றிலும், பேரலை அனர்த்தங்களிலும் நாம் காத்த அந்த மகன்கள்தான் இந்த ஆக்கினை செய்தார்கள் மகனே' மேற்காள் விசும்பலிடையே சொன்னாள். அவளது வலதுகண் ஈட்டியால் குத்திப் பிடுங்கப் பட்டது போலிருந்தது. பிடரி மண்டை பிளக்கப்பட்டு மூளை சொட்டுச் சொட்டாய் ஒழுகிக்கொண்டிருந்தது. நெஞ்சிலிருந்து தொப்புள்வரை கூரிய கட்டாரியால் தாறுமாறாய்க் கிழித்தது போலிருந்தது.

'காலகாலமாய் அவர்களது சந்ததிகளை வளர்க்க, எமது மடியிலிருந்து அள்ளியள்ளிக் கொடுத்தோம். அதே மகன்கள்தான்' தென்மேற்காள் பொலபொலவெனக் கண்ணீர் சிந்தியபடி சொன்னாள். அவளது வலதுபக்க மார்பகம் முற்றாக அறுக்கப்பட்டு ஒற்றைத் தோலில் தொங்கிக்கொண்டிருந்தது. மேனி முழுவதும் திருக்கைவாலாய் அடித்துக் கிழித்ததுபோல் வெடிப்புகள்.

'தினமும் ஆயிரமாயிரமாய்ப் படையெடுத்து வந்து இரும்புக் கரங்களால் எமது மேனிகளை உழுது, சிதைத்து சீரழித்துப் போகிறார்கள்....' தெற்காள் குலுங்கிக் குலுங்கி அழுதபடி சொன்னாள். அவளது இரு பாதங்களும் வெட்டியெடுக்கப் பட்டிருந்தன. உச்சந்தலை உலக்கையால் அடித்துப் பிளந்தது போலிருந்தது. உடல் பூராவும் கண்டல் காயங்கள்.

'ஆரச் சொல்லுறீங்க....? எங்களின்ர கர்ப்பக் கொடிகளையா தாயே...?'

'ஆமாம். அவை கர்ப்பக் கொடிகளல்ல, சர்ப்பக்கொடிகள். பாரிய இரும்புப் பலகைகளை கட்டியிழுத்து வரும் நச்சுக்கொடிச் சங்கிலிகள்' மேனியின் வலி தாங்கமுடியா வேதனையின் இடையிலும் கோபமாகச் சொன்னாள் தென்கிழக்காள். அவளது முள்ளந்தண்டு முழுவதுமாக உருவி எடுக்கப் பட்டிருந்தது. முகம் சிதிலமாகிக் காணப்பட்டது. இரண்டு மார்புகளும் வெறித்தனமாகக் குத்திக் கிழிக்கப் பட்டிருந்தன.

'தமிழச்சிகள் மானபங்கம் செய்யப் பட்டு விட்டார்கள் என்று கெம்புகிறார்களாமே...? உண்மையாகவா...?' கிழக்காள் கேட்டாள் என்னிடம்.

'ஓம்...' என்றேன்.
மாறுகால் மாறுகை வெட்டப்பட்டதுபோல் அவளது இடதுகாலும், வலது கையும் வெட்டியெடுக்கப் பட்டிருந்தன. மேனி பூராவும் சல்லடையாக்கப்

பட்டிருந்தது.

‘தினம் தினம் ஆயிரமாயிரமாய்ப் படையெடுத்து வந்து அவர்கள் எம்மை என்ன செய்துவிட்டுப் போகிறார்களாம்....?’வடக்காள் குருதியோடிய விழிகளில் கோபக்கனல் கொப்பளிக்க எழுந்து நின்று கேட்டாள். தோலுரித்த உடும்புபோல் மேனியின் தோல் பூராவும் உரித்தெடுக்கப் பட்டிருந்தாள். வடக்காள் தொடர்ந்தாள் ‘தெற்கிலிருந்து வந்தவர்கள் நிலத்தில் நின்று முடித்துப் போன நிட்டூரங்களை, வடக்கிலிருந்து இவர்கள் வந்து சமுத்திரத்தில் தொடர்கிறார்கள். அவர்களைவிடவும் இவர்களே கொடியவர்கள்’ மூச்சிரைத்து அமர்ந்து கொண்டாள்.

இளநீலம், இளம்பச்சை நிறங்களில் சிறு சிறு கடற்பூக்கள் வேலைப்பாடுகள் கொண்ட, வெண்ணிற, தையலற்று நெய்யப்பட்ட அவர்களது ஆடைகளை இழந்தவர்களாக இருந்தார்கள். எழுவரும் ஆடைகளற்றே இருந்தார்கள்.

வானம் இடிந்து உதிர்ந்து என் தலைமேல் கொட்டுண்ணுவதுபோல் இடி இடித்தது. பெருமழை, பேய்மழை பொழியத் தொடங்கியது இரத்தமாகவும், நெருப்பாகவும். நாவட்டப் பாறையில் அமர்ந்திருந்த எழுவரும் கண்களை இறுக மூடி ஒரே குரலில் எதையோ பாடத் தொடங்கினார்கள்.

அது ஒரு கல்லறைக் கண்ணீரோ, புலம்பலோ, அறம்பாடலோ அல்ல.
கல்வெட்டுச் சிந்து.

★★★★★

**(ஆக்காட்டி இதழ்–11)**

# நாச்சிக்குடா எழுபத்தேழு

முபாரக் அலி நானாவின் சேவலுக்கு திறந்த தொண்டை. விடிவெள்ளி உதயமாகும்போதே அதுவும் விழித்து எழுந்துவிடும். ஊரையும் எழுப்பிவிடும். குடாவிலிருக்கும் வீடுகளுக்குள் நானாவின் வீடுதான் பெரியது. வீட்டை அண்டியே அவரது சிறிய கடையும் அமைந்திருந்தது. தகரக் கூரையிட்ட கடை. குடாவில் குடியிருக்கும் அன்றாடம் காய்ச்சிகளும், பருவகால கடல்த்தொழிலுக்காக இங்கு வந்து தாணையம் வைத்திருக்கும் மீனவர்களுக்கும் முபாரக் அலி நானாவின் கடைதான் பெரும் பேறும், பாக்கியமும். அன்றாட உணவுப் பொருட்களையும், தலையிடி காய்ச்சல் மருந்து மாத்திரைகளையும், மண்ணெண்ணை, தகரக் கைவிளக்கு, தோடம்பழ இனிப்பு என சனத்தின் வல்லமைக்கேற்ப பொருட்கள் கிடைக்கக் கூடிய கடை.

முபாரக் அலி நானா மிகவும் மரியாதைக்கு உரியவராய், நியாயவானாய், மனிதப் பட்சம் நிறைந்தவராய் குடாவில் மதிக்கப்பட்டு வந்தார். குடாவில் நிரந்தரக் குடிகளாய் இருப்போராலும், பருவகால கடல்த் தொழிலுக்காக நாச்சிக்குடாவுக்கு வந்து தற்காலிக தங்கு தாணையம் வைத்திருப்போராலும் குடாவின் தலைச்சன் மனிதராகவும், பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் மத்தியஸ்தராகவும் மதிப்பளிக்கப்பட்டு வந்தார். நானாவுக்கு தூண்டிவலைப் படகு ஒன்றும், மீன்வாடி ஒன்றும் சொந்தமாக இருந்தது. அதுதான் அவரது பிரதான வருமானத்துக்குரிய நிரந்தரத் தொழில்.

கடைக்கூரையின் இடுக்கில்தான் முபாரக் அலி நானாவின் சேவலின் உறைவிடம். குடாக்கரையில் தாணையம் வைத்திருக்கும் தொழிலாளிகள் எல்லோரையும் விடிவெள்ளி முளைக்கும்போதே துயிலெழுப்பும் மண்டாடியார் பணியை நானாவின் சேவல்தான் செய்து வந்தது. குடாக்கரைத் தாணையக்காரரும் நானாவின் சேவல்மீது நம்பிக்கையை வைத்துவிட்டு

அயர்ந்து தூங்கி விடுவார்கள். யாகப்பர் ஆலயத்தின் சக்கிடுத்தாரையும் அதுதான் துயிலெழுப்பும். அதன்பின்பே சக்கிடுத்தார் திருந்தாதி மணியை அடிப்பார். தினமும் வெள்ளாப்பின் முன்னும், மதியமும், மாலைக் கருக்கலும் என மூன்று முறைகள்தான் முபாரக் அலி நானாவின் சேவல் கூவும். இந்த மூன்று வேளையிலும் நானாவின் சேவல் கூவிய பின்பே யாகப்பர் கோயில் மணியையும் அடிப்பார் கோயில்ச் சக்கிடுத்தார்.

பெரிய முனங்கு.
நாச்சிக்குடாவின் தென்மேற்குத் திசையாய் அமைந்துள்ள களங்கண்டிப் பாடு. முனங்கின் வடகரையோரமாய் ராயப்பனின் களங்கண்டிவலை நிமிர்ந்து நின்றது. நானாவின் சேவல் துயிலெழுப்பி வைக்க, தனது பத்து வயது மகன் துரையனோடு சிறகுகட்டித் தோணியை குடாவிலிருந்து தாங்கத் தொடங்கியவன் கிழக்கில் வெள்ளாப்பு வெளிக்கத் தொடங்கிய போதுதான் களங்கண்டியை வந்து சேர்ந்தான். துரையன் தோணியின் கடையாற்குட்டைக்குள் குறண்டியபடி தூங்கிக் கிடந்தான். நான்கு பெண்களுக்கு அடுத்ததாக பிறந்தவன் தான் துரை. இவன் பிறந்த சில தினங்களிலேயே தாய் திரேசம்மா செத்துப் போனாள்.

பிள்ளைகள் எல்லோரையும் உயிரைக் கொடுத்தாவது படிக்க வைக்க வேண்டுமென்ற ராயப்பனின் ஓர்மம் கடந்த இரண்டு வருடங்களாக பலமிழந்து போயிற்று. எந்தவித ஆளணி உதவிகளும் இல்லாமல் உப்புக் கடலின் அலைகளோடு தன்னந்தனியனாய் போராட முடியாததால் மகன் துரையை மூன்றாம் வகுப்போடு பள்ளியை விட்டு நிறுத்தி விட்டான் ராயப்பன்.

இப்போது பெண் பிள்ளைகளையாவது படிக்க வைக்க முடிகிறதே என்ற திருப்தி ராயப்பனுக்கு. உள்ளூர்க் கடலில் எப்படித்தான் அடியனடித்தாலும் அன்றாடச் சீவியத்துடனேயே முடிந்து விடும். வன்னித் தாணையம்தான் எதையாவது மீதப்படுத்த வாய்ப்பாயிருக்கும். தாயில்லாப் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் ஏதாவது வழி பிறக்கும் என எண்ணியவனாய் தனது தீவுக் கரையிலிருந்து தாணையம் கொண்டு நாச்சிக்குடாவை வந்து சேர்ந்தான் ராயப்பன்.

கடந்த மூன்று மாதங்கள் குமுளமுனைப் பாடுகள் கை விடவில்லை. கொடிவாளையும், செங்கடாப் பாரையும், கணவாயும் என கை கொடுத்தன. தீவுக் கரையிலிருக்கும் மகள்களுக்கு மூன்று மாதமும் செலவுக்கு அனுப்பியதுபோக, முபாரக் அலி நானாவிடம் சிறிதளவு சேமிப்பை விட்டு வைத்திருந்தான். குமுளமுனைப் பாடு கடந்த ஒரு வாரமாக குறைப்புக் கண்டதால் நேற்று முதல்நாள்த்தான் பெரியமுனங்குப் பக்கம் தொழிலைக் கொண்டு வந்தான். இன்று முதல்நாள், முதல் இழுப்பு.

பட்டிவலைக்கு அருகாக தோணியை அணையவிட்ட ராயப்பனின் விழிகள் மகிழ்ச்சியில் சிரித்தன. வெள்ளாப்பு வானத்தின் மென்னொளிக் கீற்றுகள் அவனது பார்வையில் தங்கப் பாளங்கள் கைக்கெட்டும் தொலைவில் கிடப்பதாய்த் தெரிந்தன. பட்டி வலையிலிருந்து அடையும் கலங்கிய வெப்பலும், வாசமும் அவனை ஆனந்தத்தில் துள்ளத் தூண்டின.

ராயப்பன் தனது கடல் அனுபவங்களையும், மீன்வள அறிவு நுட்பங்களையும் கொண்டு நேற்று முதல்நாள் அடைமழையில் இந்தப் புதிய பாட்டைக் கண்டுபிடித்தான். நேற்று துரையனுடன் தன்னந்தனியனாய் வலை பாய்ந்து முடிக்கப் பட்ட இடர்கள் கொஞ்சமல்ல. குளிரில் நடுங்கியபடியே குழந்தை துரையன் நூற்றியெண்பத்தியாறு பாய்ச்சுக் கம்புகளையும் தந்தைக்கு ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்கும்போது பட்ட இன்னல்களை நினைத்து வாழ்தலையே வெறுத்துக் கடிந்தவன். இன்று அந்தப் பெரும்பாடுகளுக்கான ஊதியத்தை பட்டிவலை தனது மடியில் நிறைத்து வைத்திருப்பதைக் கண்டு அழுதே விட்டான்.

ராயப்பனின் கண்கள் உதிர்க்கும் நீர்த்துழிகளில் ஏகப்பட்ட அர்த்தங்கள் நிரவிக் கிடந்தன. உழைப்பு மீதான விருப்பு வியாபித்துக் கிடந்தது. வாழ்க்கைப் பாதையில் இடறல் தரும் தடைகளைத் தகர்த்தெறியும் வலிமை பொதிந்து கிடந்தது. இயலாமையின் வெளிப்பாடாய் அல்ல, இயலும் என்பதன் புறப்பாடாய் அவனது விழிநீர் கடலில் விழுந்து வெப்பலோடியது.

துரையன் இன்னமும் தூக்கம் கலைந்தெழவில்லை. மகனை எழுப்ப விருப்பமில்லாதபோதும், பொழுது வெளிச்சம் போடுவதற்கிடையில் பட்டிவலையை இழுத்தொதுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ‘தம்பி’ என்று மெல்லக் குரல் கொடுத்தான் ராயப்பன். தந்தையின் குரல் கேட்டவுடன் தூக்கம் கலைத்து எழுந்துகொண்டான் துரையன்.

கடிப்புவலை நிறைந்த மீன்கள். தோணியில் இழுத்து ஏற்ற முடியாமலிருந்தது. அணியக் கயிற்றை எடுத்து கடிப்புத்தூரின் அடியிலிட்டு, தூரை இரண்டாகப் பிரித்தும் மீன்களைத் தோணியில் ஏற்றுவதற்கு மிகுந்த பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. இரண்டாம் இழுப்பும் அதேயளவு மீன்கள். தோணிக்குள் இழுத்து ஏற்றியதைவிட பட்டிவலையில் இன்னும் அதிகமான மீன்கள் இருந்தன. முழுவதும் வெள்ளோரா. அணியத்திலிருந்து கடையால்வரையும் குவிந்து துடித்துக் கிடந்தது வெள்ளோராப் பட்டாளம்.

காலைப்பொழுது மெல்ல வெளிச்சம் போட்டபடி எழுந்துகொண்டிருந்தது. தோணிக்குள் கால் வைத்து நிற்க முடியாதபடி மீன்கள் நிறைந்து கிடந்ததால்

கடையாற் பலகையின்மேல் ஏறி நின்ற துரையனை ராயப்பன் கவனித்தான். இன்ப அதிர்ச்சிக்குள் அவன் மூழ்கி நின்றான். துரையன் தொழிலாளியாகிப்போன இந்த மூன்று வருடத்துக்குள் இப்போதுதான் இவ்வளவு தொகையான மீன்களைப் பார்க்கிறான். எழுந்துவரும் இளஞ் சூரியனார் விட்டெறியும் கதிரொளியை விஞ்சியதாய் தன் மகனின் கண்களில் பிரகாசத்தைக் கண்டான் ராயப்பன்.

அலி நானாவின் வாடியின் முன்னால் ராயப்பனின் சிறகுகட்டித் தோணி வந்து தரித்து நங்கூரமிட்டது. முபாரக் அலி நானா தோணியை எட்டிப் பார்த்தார். ராயப்பனை விடவும், துரையனை விடவும் நானாவுக்கு அதீத மகிழ்ச்சி. மட்டக்களப்பு சாரத்தை மடித்துக் கட்டியபடி உண்மையிலேயே அலி நானா ஒரு துள்ளுத் துள்ளித்தான் விட்டார்.

நானா தனது வேலையாட்களை உசார்ப்படுத்தி ராயப்பனின் சிறகுகட்டித் தோணிக்குள்ளிருந்து மீன்களைக் கூடைகளில் நிறைத்து கரை சேர்த்துக் கொண்டு பரபரப்பாக நின்றார். நிறுவைக் கம்படியில் வெள்ளோரா மீன் குவியல். முதலாவது நிறுவைக் கூடையை தராசில் கொழுவுவதற்காக அலி நானாவும், ராயப்பனும் தூக்கினர்.
'மீன் நிறுக்கப் படாது' குரல் வந்த திசையில் எல்லோரின் பார்வையும். வடக்கிலிருந்து பாக்கியராசா வந்துகொண்டிருந்தான். குடாவின் மீன்பிடிச் சங்கத் தலைவர் பாக்கியராசாதான். நிறுவைக் கம்படிக்கு வந்த பாக்கியராசா 'இது என்ர மீன். நிறுக்கப்படாது சொல்லிப்போட்டன்' என்றான் மீண்டும் கோபமாக. 'நீ இன்னா சொல்றே?' தூக்கிய நிறுவைக் கூடையை தொப்பென்று நிலத்தில் போட்டபடி அலி நானாவும் கோபமாய்க் கத்தினார். ராயப்பனும் அதிர்ந்துபோய் நின்றான்.

'ஒரு கிழமயா என்ர பாட்டால ஏறின மீனிது. ராயப்பன் கொண்டுவந்து என்ர வலைக்கு மறிப்பாக் கட்டினதால இண்டைக்கு என்ர பட்டியில ஏறவேண்டிய ஓரா ராயப்பன்ர பட்டியில ஏறியிருக்கு. இது என்ர மீன். முடிவு காணாம மீன நிறுக்கப்படாது சொல்லிப்போட்டன்' சொல்லியபடியே பாக்கியராசா மீன்கள் நிரப்பப்பட்டிருந்த நிறுவைக் கூடையைக் காலால் எட்டி உதைத்தான்.
'ஒத்தா மவனே... நிறுவக்கோடய ஒதச்சியா...? வாடிய விட்டுப் போடா மொதல்ல நாயட மவனே...' அலி நானா தனது தொழிற்சாதனங்களில் மிகுந்த பக்தியும், மரியாதையும் உடையவர். பாக்கியராசா செய்த செயலைக் கண்டதும் அவரால் தாங்க முடியவில்லை. கோபத்தின் உச்சிக்கே சென்று கத்தத் தொடங்கினார். விபரீதத்தை உணர்ந்த பாக்கியராசா அவ்விடத்தை விட்டு மெல்ல அகன்றான்.

பாக்கியராசாவும் பருவகாலத் தொழில் செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து

தாணையம் கொண்டு நாச்சிக்குடா வந்து போனவன்தான். காலப்போக்கில் இங்கேயே குடும்பத்தோடு நிரந்தரமாகத் தங்கி விட்டான். முபாரக் அலி நானா தனது ஒரு சிறுதுண்டுக் காணியை பாக்கியராசனுக்கு இனாமாகவே கொடுத்திருந்தார். பாக்கியராசன் குடாவுக்குக் குடியேறியபின் மெல்ல மெல்ல சிறிது சிறிதாக தொழில்க் களவுகள் நடக்கத் தொடங்கின. பாக்கியராசாவின் நடவடிக்கைகள் பற்றி அலி நானாவிடம் நிறையப் புகார்கள் சென்றன. முபாரக் அலி நானா தான் வகித்து வந்த மீன்பிடிச் சங்க தலைவர் பொறுப்பை, கள்ளனுக்கு விதானைவேலை கொடுத்ததுபோல் பாக்கியராசாவுக்குக் கொடுத்தார். அதன்பின் முற்றுமுழுதாக இல்லையெனினும் களவுகள் சற்றுக் குறைந்திருந்தன.

அன்று மாலை ஐந்து மணி. நாச்சிக்குடா மீன்பிடிச் சங்கக் கட்டிடம். ராயப்பன் கூறிய விளக்கத்தை தலைவர் பாக்கியராசாவைத் தவிர ஏனைய நிர்வாகிகளும் பொதுச்சபையினரும் சரியானதுதானெனச் சம்மதித்து ஏற்றுக் கொண்டனர். முனங்கின் தென் கரையில் உள்ள பாக்கியராசாவின் பட்டிவலையில் சாயும் மீனுக்கு முனங்கின் வடகரையில் உள்ள ராயப்பனின் பட்டிவலை எந்த வகையிலும் மறிப்போ, இடைஞ்சலோ இல்லை. கடந்த ஒரு கிழமையாக அமாவாசை அவதிக்கு பாக்கியராசாவின் பட்டியில் ஏறிப் பட்ட மீன், வளர்பிறை வெள்ளத்தோடு இப்போ பாடு குறைந்துள்ளது என்பது சாதாரணமாகவே தொழிலாளர்களுக்குத் தெரிந்துகொள்ளக் கூடிய உண்மை. அதுவுமல்லாமல் பாக்கியராசாவின் பட்டியில் பட்டவை பொடி வெள்ளொட்டி, ராயப்பனின் பட்டியில் ஏறியிருப்பது பாட்டோரா. சங்கத்தின் ஏகோபித்த முடிவின் பிரகாரம் ராயப்பனின் பட்டிவலை நிற்கும் பாடு, பாக்கியராசாவின் பாட்டுக்கு மறிப்பானதல்ல" குடா மீனவர்களுக்குள்ளேயே அதிகம் படித்த இளைஞனான இரணைதீவுப் பர்னாந்து செயலாளராய் தனது அறிக்கையை வாசித்தான். முபாரக் அலி நானா முதலாம் ஆளாக அதனை ஆமோதித்துக் கையெழுத்திட்டார். ஏனைய தொழிலாளர் அனைவரும் வழிமொழிந்து கையெழுத்திட்டனர். தலையைக் குனிந்தபடியே இருந்த பாக்கியராசன் கோபமாக எழுந்து வேகவேகமாக வெளியேறினான்.

விடிவெள்ளி முகம் காட்டுவதற்கு முன்னால் தகரக் கூரைமீதிருந்து முபாரக் அலி நானாவின் சேவல் சிறகடித்துக் கூவியது. ராயப்பனின் சிறகுகட்டித் தோணி குடாக் கரையை விட்டு பெரிய முனங்கைத் தேடி கம்பீரமாய் நகர்ந்தது. துரையன் இன்று கடையாலுக்குள் தூங்கவில்லை. சுக்கான் பிடித்துக்கொண்டு கடையாற் பலகையில் உற்சாகமாக அமர்ந்திருந்தான். பலவேறான அழகிய கற்பனைகள் அவனுக்குள். வெள்ளோரா நிறைந்த பட்டியில் கடிப்பிழுப்பது, கடிப்புவலை நிறைந்த மீன்களை தோணியில் இழுத்து மாட்டுவது, மீன்கள் நிறைந்த தோணியின் அணியத்தில் ஏறி நிற்பது, நானாவின் வாடிக்கு முன்னால்

கரை தட்டி நங்கூரமிட்டிருக்கும் சிறகுகட்டித் தோணியிலிருந்து கரைக்கு எடுத்துச் செல்லப்படும் மீன்களால் நிரப்பப் பட்ட கூடைகளை அணியத்தில் இருந்தபடியே கணக்கெடுப்பது, அலி நானாவின் தராசில் நிறுக்கப்படும் மீன்களை எத்தனை றாத்தல் என மனக்கணக்கில் கூட்டிப் பார்ப்பது, கறிக்கு பெரிய கொழுத்த மீன்களாய் எடுத்து பக்கத்து வாடிகளுக்கும் பிரித்துக் கொடுப்பது, பெரியமுனங்கின் வெள்ளோரா பற்றி ஊருக்குப் போனபின் தமக்கைமாருக்கு விபரித்துக் கதை சொல்வது போன்ற நினைவுகளுடன் இருந்த துரையனுக்கு தோணி முனங்குப்பாடு வந்து சேர்ந்ததே தெரியவில்லை.

'தம்பி' என்ற தந்தையின் குரல் கேட்டு மீண்டான்.
'இடி விழுந்துபோச்சு ராசா நம்மட வயித்தில' நடுங்கும் குரலில் சொல்லியபடியே மரக்கோலை தொப்பென்று போட்டுவிட்டு, தலையிற் கை வைத்தபடியே வாரிப் பலகையில் அமர்ந்துகொண்டான் ராயப்பன். முனங்குப்பாடு வெறுமையாய்க் கிடந்தது. பட்டி நிறைந்த பாட்டோரா மீன்களோடு முனங்கால் நேற்று விட்டுப்போன பட்டிவலை இன்று இல்லை. போர் வீரர்களைப்போல் நிமிர்ந்தபடி பட்டிவலையைத் தாங்கி நின்ற பாய்ச்சுக் கம்புகள் சில மட்டும் சரிந்தபடி, தோற்றுப்போன வீரர்களைப்போல தலை தொக்கி நின்றன. அநாதரவாய் அடைந்துவந்த ஒரு பாய்ச்சுக்கம்பு தோணியின் முதுகில் முட்டி முட்டி ஆறுதல் வேண்டியது. பட்டி நிறைந்த பெருமீன்களின் ஒருமித்த உறுமலுக்கு கொஞ்சம்கூட வளையாமல் நிமிர்ந்து நின்ற மூலைத்தடி இன்று அலைகளிடை அநாதரவாய் மிதந்து கிடந்தது.

மேற்கு நோக்கி அவன் சென்று கொண்டிருந்தான். பூமிக்கு வெய்யிலைப் பிச்சை போட்டது போதும் என்பதுபோல அவனது பயணம் மேற்குக் கடலை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

முபாரக் அலி நானா எவ்வளவு சொல்லியும் ராயப்பன் கேட்கவில்லை. கடலில் பகையென ஒன்று வந்தபின் இங்கு தாணையத்தைத் தொடர்ந்து வைத்திருக்க ராயப்பன் விரும்பவில்லை. கலைத்த தாணையம் ஏற்றப்பட்ட சிறகுகட்டித் தோணி சூரியன் செல்லும் திசையை நோக்கிச் செல்லத் தயாராக மிதந்து நின்றது. முனங்கு வெள்ளோரா சிலவற்றைத் தமக்கைமாருக்காக நேற்றுக் கருவாடு போட்டு வைத்திருந்தான் துரையன். அரைகுறை காய்ந்தும் காயாததுமாக இருந்த அவற்றைத் தண்ணீர் படாதபடி சோற்றுப்பானைக்குள் பக்குவமாய் வைத்து மூடிக் கடையாலுக்குள் வைத்தான்.

துரையனை இறுக அணைத்து முத்தமிட்டார் முபாரக் அலி நானா. ராயப்பனைக் கட்டிப்பிடித்து முத்தமிடும்போது அலி நானாவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. கடலில் வழியனுப்பும்போது கண்ணீர் விடக்கூடாது என்பதற்காக

அவர் கண்ணீர் சிந்தவில்லை.

பாய் வலித்த சிறகுகட்டித் தோணி சூரியன் செல்லும் திசையை நோக்கி அணியம் வைத்து நகரலானது. முபாரக் அலி நானா இடுப்பளவு தண்ணீர்வரை இறங்கிவந்து வழியனுப்பி வைத்தார்.

யாகப்பர் கோயிலின் மணி மாலைத் திருந்தாதி அடித்து ஓய்ந்த பின்பே இன்று அலி நானாவின் சேவல் மூன்றாம் முறை குரலறுந்து கூவியது. ராயப்பனின் சிறகுகட்டித் தோணி சூரியனைத் துரத்திச் செல்வதையே பார்த்தபடி கரையில் கண்கள் கலங்க நின்றார் முபாரக் அலி நானா.

அந்த மேற்குவானச் செக்கலின் காட்சியானது, ராயப்பனை மறுதலித்துவிட்டு சூரியன் ஓடி மறைவதாகத் தென்பட்டது முபாரக் அலி நானாவுக்கு.

★★★★

# அப்பு

என்ன சனியனோதெரியா இண்டைக்கிக் காலமவெள்ளண விடிஞ் செழும்பினதிலேருந்து ஒரே பிடுங்குப்பாடாதான் கிடக்கு. இந்தமாசச் சம்பளத்தின்ர காவாசியக் கழிச்சுப் போட்டங்கள். சம்பளம் கணக்குப் பாக்கிறவளட்டப் போய் ஏனெண்டு விசாரிச்சால், அவள் சொன்னாள் பீங்கான் கணக்கெண்டு. போனகிழம கொட்டேல்ல கழுவேக்க தட்டுப்பட்டு அஞ்சாறு பீங்கான் நொருங்கிப்போச்சு. ஆனயின்ர விலபோட்டு அவ்வளவு பீங்கானுக்கும் பெரிய தொகயொண்டச் சம்பளத்தில வெட்டிப்போட்டாள். இப்படியே உழைப்பைத் தாரவாத்துக் குடுக்கிறதாப்போச்சுச் சீவியம். இந்தமாசப் பஜ்சட்டில கட்டாயம் இடி விழத்தான்போகுது. சம்பளக்காறியோட கதச்சுப்போட்டு வீட்ட வந்தா, வீட்டயொரு புதுப் பிரச்சன. சித்தப்பற்ர மகன் தருமு ஒரு புதுச்சோலிய விலைக்கி வாங்கிக்கொண்டு வந்து நிண்டான்.

தமிழர் கலாச்சாரச் சங்கத்தலைவர் சிவக்கொழுந்தன்ர தங்கச்சியார்பெட்ட கமலவாணிக்கு இண்டைக்குப் பிறந்தநாளெண்டு சொல்லி சித்தப்பற்ர மகன் தருமுவையும் மத்தியானச் சாப்பாட்டுக்கு பொடிச்சி வீட்ட வரச்சொல்லியிருக்கிறாள். தருமுவும் அந்தப் பொடிச்சியும் ஒண்டாத்தான் கொம்பனியொண்டில கழுவிற வேல செய்யினம். அந்தச் சினேகிதத்தில பொடிச்சி கூப்பிட்டுப் போட்டாளெண்டு இவனும் போயிக்கிறான். சாப்பாட்டுக்க கைவைக்கிற நேரம்பாத்து சிவக்கொழுந்தன் நல்ல தண்ணி-யில வந்திருக்கிறான். இவனக் கண்ட உடன முறுக்கியடிச்சிருக்கிறான். 'கண்ட எளியன்சாதியளயும் வீட்டுக்க கொண்ணந்தனியோடி' எண்டு தங்கச்சியார்க்காறிக்கு பத்துப்பதினைஞ்சு சனத்துக்கு முன்னால அடிச்சுப்போட்டான். இந்த வெங்கணாத்தியும் அவன்ர வீட்டுக்குள்ள வச்சே சோத்துக்கையால விளாசு விளாசெண்டு விளாசிப்போட்டான். சிவக்கொழுந்தனுக்குப் பல்லுக்கில்லெல்லாம் நொருங்கிப்போச்சு. மனிசிக்காறியும் பொலிசுக்குப் போன் பண்ணிப்போட்டாள். இவனக் கொண்டேய் மூண்டு மணித்தியானம் விளக்கமறியல்ல வச்சுப்போட்டாங்கள். ஒருமாதிரி இவன வெளியில எடுத்துக்கொண்டு வீட்ட வந்தா, வீட்டில திரும்பயொரு புதுப்பிரச்சன.

மூத்த தங்கச்சியட புருசன் ஜேர்மனிக்குப் போகப்போறானெண்டு கொழும்பில

ஏஜென்சியொண்டப் பிடிச்சு திடீரெண்டு மொஸ்கோவில வந்திறங்கி ரெலிபோனுக்குள்ளால என்னத்தேடிக் குண்டெறிஞ்சு கிட்டத்தட்ட எட்டு மணித்தியானமாகுது. மொஸ்கோவிலிருந்து அந்த ரெலிபோன் வந்தப்பிறகு நித்திரயே வரமாட்டனெண்டிட்டுது. சாமம் ஒரு மணிக்கு மேலாப் போயும் படுக்கேலாமல் உழண்டுகொண்டு திரிஞ்சன். திடீர்த் தாக்குதல் எண்டிறது இதத்தான் போல கிடக்கு. இவ்வளவு காலமும் தங்கச்சி, தங்கச்சியின்ர புருசன் கொழும்பில அல்லாட்டி மன்னாரில வந்து நிண்டுதான் வாங்கிக்கொண்டு போவினம். இவர வெளிநாட்டுக்கு எடுத்துவிடச்சொல்லி எத்தினயோதரம் தங்கச்சி, பத்தாததுக்கு அம்மாவும் மாறி மாறிக் கேட்டுப்பாத்தினம். நான் சம்மதிக்கேல்ல. காதில போட்டிருந்த வளயத்தோடயும் ஒத்தப்பட்டுச் சங்கிலியோடயுந்தான் பிள்ளய அப்பி வச்சவயளெண்டு சம்பந்தி எல்லா இடதிலயுஞ் சொல்லித் திரியிறேராம். பரிசுகேடாக் கிடக்காம் எண்டெல்லாஞ் சொல்லிப் பாத்து தலையாலும் வாலாலும் ஓடிப்பாத்தா அம்மா. 'ஐயா உன்னக் கட்டினதுக்கு எவ்வளவம்மா வாங்கினவர்?' எண்டு கேட்டு அம்மாண்ட வாய அடிச்சு மூடி, ஏலாதெண்டு சொல்லிப்போட்டன்.

தங்கச்சியின்ர மனுசன் மொஸ்கோவில வந்து நிக்கிறதப்பற்றி யேமனியிலயிருக்கிற அக்காட்டச் சொன்னன். 'ஏனாம் வந்தவர்? இங்கயென்ன அள்ளிக் கொட்டப் போறாராக்கும். இங்க உழாத மாடு வன்னியில உழுத கததான் அவற்ற கத. உனக்கெங்க போச்சுது மூள? அதுசரி, நீயுஞ் சேந்து ஏத்தி விட்டிருப்பாய் அக்கா உதவி செய்வாளெண்டு. தாயாண என்னால ஒண்டுஞ் செய்யேலாது ஆளத் திரும்பிப் போகச் சொல்லு, இல்லயண்டா உன்னட்டயிருந்தா நீகுடு. என்ன வச்சு வதைக்காத. உனக்கு காசுமாறித் தந்தாக்கள் இங்க அத்தான நெருக்கிப் பிடிக்கினம், கொஞ்சம் அதயொருக்காப்பாத்து அனுப்பி விடடா. பிள்ளயளக் கேட்டேண்டு சொல்லு. உனக்கும் ரெலிபோன் ஓடுது நான் வைக்கிறன்' சொடக்கெண்டு அக்கா ரெலிபோண வச்சிற்றாள். தங்கச்சியின்ர புருசனுக்கு உதவி செய்யடியப்பா எண்டு கேக்கப்போய் இப்ப என்ர கடன்காசுக்கு கழுத்தில கத்திய வாங்கிக்கொண்டன்.

ஒரு தம் அடிப்பமெண்டு யோசிச்சு தேத்தண்ணியப் போட்டன். இந்தக் குளிருக்க இனி ஜக்கெற்ரயும் போட்டுக்கொண்டு வெளியில போகவேணும். மூத்தவன் பிறக்கிறதுக்கு முந்தி ரொய்லற்ருக்குள்ளதான் என்ர தம்மடி. மூத்தவன் பிறந்தேப்பிறகு 'வீட்டுக்கு வெளியதான்' எண்டு கட்டாயச் சட்டமாப் போட்டிட்டாள் என்ர நாச்சியார். மெல்லமா எழும்பிப் பூனமாதிரிப்போய் குசினிக் கதவச் சாத்திக்கொண்டன். யன்னல நல்லாத் திறந்துவிட்டன். சுடுதேத்தண்ணியும் சுறுள்ப் புகயும் சுகமாயிருந்துது. திடீரெண்டு ஆரோ வாசல்க்கதவு பெல்லடிச்சுக் கேட்டுது. 'இந்தநேரத்தில ஆற்ரா' எண்ட குழப்பம் எனக்கு. கடகடவெண்டு சிகரட்ட நாலிழுவ இழுத்துப்போட்டு யன்னலுக்கால

தூக்கி எறிஞ்சிற்று, போய்க் கதவத் திறந்தன். அப்பு. என்ர அப்பு. பதினொரு வருசத்துக்குமுந்திச் செத்துப்போன என்ர அப்பு. என்ர அம்மான்ர தேப்பன். அந்த மட்டக்கிளப்புச் சாறமும், வெறும்மேலோட தோளில சாயம்போன அந்த துவாயுமா, கையில அழுத்தமாச் சீவின அவற்ர அந்தக் காட்டு மல்லிகத் தடியோட வந்து நிண்டேர். எனக்குப் பக்கெண்டு ஆகிப்போச்சு. எனக்கென்ன செய்யிறெண்டே தெரியேல்ல. 'அப்பு வாண' எண்டு உள்ள கூப்பிட்டன். அந்தக் கொடுப்புச் சிரிப்போட உள்ள வந்தேர். சப்பாத்துகள் கழட்டி வைக்கிற அந்த மூலைக்குள்ள மல்லியத்தடியப் பக்குவமாய்ச் சாத்தி வச்சேர். எப்பவுமே மனுசன் அந்தத் தடியில கவனந்தான். ஆளக் குசினீக்க கூட்டிக்கொண்டு போய் இருக்க வச்சன்.

அப்பு...., என்னணே...? அதுகும் இந்தச் சாமத்தில....? என்ர கேள்வியள் அறுந்தறுந்து, துண்டுதுண்டா, உள்ளயுமில்லாமல் வெளியயுமில்லாமல் அந்தரிச்சிது. 'சும்மா உன்னயும் பிள்ளயளயும் பாத்திட்டுப் போவம்மெண்டு வந்தனான் ராசா. போனகிழம உன்ர கொக்காளாட்டத்தான் போனனான். அவள்புள்ள விடிய எழும்பி அப்பு வந்திட்டுப்போறேர் ஏதோ கெட்டது நடக்கப் போகுதெண்டு புருசன் காரனயும் பயமுறுத்தி, வீட்டக் கழுவித்துடச்சு, கொத்தாருக்குத் தெரிஞ்சொரு ஐயரக் கூப்பிடுவிச்சு ஏதோவெல்லாஞ் செய்தாள் எனக்கொண்டும் விளங்கேல. இல்லாதது பொல்லாததெல்லாஞ் சொல்லி ஐயர் பேக்கிலவாண்டிப் பெட்டய ஏமாத்திக் காசு புடுங்கிக்கொண்டு போட்டான். பிறகிட்டுப் பாத்தா கனடாக்கு ஏதோ காரியமெண்டு போய்நிண்ட குணசேகரஞ் சுவாமியக் கூப்பிடுவிச்சு ஆசிநீரெல்லாம் வீடுமுழுக்கத் தெளிச்சு, செபஞ் சொன்னாளவய. அந்தக் கள்ளச்சுவாமிக்கு அண்டைக்கங்க நல்ல விருந்தும் தண்ணியும். ஏந்தான் இப்பிடிப் புத்திகெட்ட சீவியஞ் சீவிக்கிதுகளோ தெரியாது. அது சரி நீ எப்பிடி ராசா இருக்கிறாய்? உன்ர பெண்சாதி பிள்ளயளப் பாக்கவேணும் நான்' அப்பு சரியான ஆசயாக் கேட்டார்.

எண்பத்திமூணில முதல்முதல் நான் இந்தியாவுக்கு வெளிக்கிட்டேக்க அப்புவட்டச் சொல்லிப்போட்டுத்தான் வெளிக்கிட்டனான். எந்தப் பாதயெண்டு கேட்டேர். மாதகல் எண்டு சொன்னன். பாதகமில்ல எண்டு மட்டுஞ் சொன்னேர். அதுக்குப் பிறகும் எண்பத்தாறில இந்தியாவுக்கு வெளிக்கிட்டனான். அப்புவட்ட எதுகுமே சொல்லாமல்க் கொள்ளாமல்த்தான் போனனான். நாச்சிக்குடா முபாரக் அலி நானாவின்ர தயவால இரணதீவுக்குள்ளால நைலோன் போட்டில இந்தியாவுக்குப் போன்னான். ரெண்டுமே கடல்ப்பயணம்தான் எண்டாலும், ரெண்டுமே வித்தியாசமானதுகள். வெவ்வேற கணக்குகள். மொத்தத்தில எல்லாக் கணக்கும் எங்கயோ இடிக்கிறமாதிரித்தான் கிடக்கு.

பெரியவன்ர கட்டிலடிக்குக் கூட்டிக்கொண்டு போனன். 'இதுதானா உன்ர

மூத்தது?' எண்டு கேட்டபடியே கொஞ்சநேரம் அப்பிடியே நிண்டு பாத்தேர். பிறகு குனிஞ்சு அவன்ர நெத்தியில இறுக்கிக் கொஞ்சினேர். மனிசன் நிமிந்தொரு பெருமூச்சு விட்டிது கண்ணெல்லங் கலங்கிப்போச்சு. ஏனணயப்பு அழுகிறாயெண்டு கேட்டன். ஒண்டுமில்லயண்ட மாதிரி தலயாட்டினேர். நிமிர்தென்ன ஒருக்காப் பாத்தேர். ஆளக் கூட்டிக்கொண்டு மற்ற அறைக்குள்ள போனன். கொஞ்சநேரம் அப்பிடியே நிண்டு தாயயும் மகளயும் ரசிச்சு ரசிச்சுப் பாத்தேர். பிறகு கட்டிலுக்கருகிலபோய்க் குனிஞ்சு சின்னவளட நெத்தியில கொஞ்சினேர். கொஞ்ச நேரம் நிண்டு ரெண்டுபேரயும் பாத்தேர். மனிசன்ர முகத்தில சரியான சந்தோசத்தப் பாத்தன். இறுக்கிக் கடிப்பிடிச்சு என்னயுங் கொஞ்சினேர். மனுசன்ர கண்ணால கண்ணீரோடிச்சுது. எனக்கும் அழுகயழுகயா வந்துது. ஆளக் கூட்டிக்கொண்டு திரும்பயும் குசினிக்குள்ள போய் இருக்க வச்சன்.

'பிள்ள எத்தின மாசமாயிருக்கிறாள்?' எண்டு கேட்டேர். எட்டு எண்டன். வேடிவாக் கவனியடா மோனே கஸ்ரப்படுத்தாத. தின்னக் குடிக்க 'கக்கிறத வாங்கிக்குடு. பிள்ளயில பட்சமாயிரு. பாவம் நல்லவள் மனம் நோகச்செய்யாத. உன்ர ஆச்சி வந்து எல்லாஞ் சொன்னாள். பிள்ள இஞ்ச உன்னட்ட வாறத்துக்குமுதல் தன்ன வந்து கண்டதாம். குணமான பிள்ளயெண்டு சொன்னாள்பாவி. உன்ர சின்னமாமி 'இந்த ஒட்டலுக்கோ கிழவா இத்தூரம் போனியோடோ கிழவா' எண்டு நையாண்டி சொன்னாளாம். உன்ர பெரியமாமி சாதிவச சொல்லி பிள்ளய மண்ணள்ளித் திட்டினாளாம். அதுகள் புத்தியில்லாத சனங்கள் ராசா. அதயெல்லாம் மனசில வச்சிராத. பாவங்கள். தங்கட பிள்ளயள்ள ஒருத்தரக் கட்டயில்லயெண்ட ஆத்திரமதுகளுக்கு. ஏதோ ஆத்தாக்கேட்டில பேசிப்போட்டுதுகள். அதெல்லாத்தயும் நீ பெருசா எடுக்காத. ஏதோ கெஞ்சிறமாதிரிக் கேட்டார். எனக்குச் சரியான அந்தரமாப்போச்சு. இல்லயணயப்பு நானொண்டும் பெரிசா நினைக்கேல்ல. அதெல்லாத்தயும் விட்டிட்டன். எண்டு சொன்னன்.

பசிக்கிதெண்டேர். சோறு சாப்பிடணை எண்டன். பழஞ்சோறோ எண்டு கேட்டேர். இல்ல நேற்றுத்தான் காச்சினது எண்டன். சிரிச்சுக்கொண்டு என்னப் பாத்தேர். எனக்கு விளங்கீற்றுது. இங்கயப்பு ரெண்டு மூணுநாள்ச் செண்டாலும் பழஞ்சோறாகாது எண்டன். என்ன கறியெண்டு கேட்டேர். கணவாக்காறி எண்டன். கனகாலம் மோனே. கொஞ்சமாப்போடு எண்டேர்.

அப்புவுக்குப் பழஞ்சோறெண்டால்ச் சரியான விருப்பம். காலமயில அவருக்குக் கட்டாயம் பழஞ்சோறு தேவ. முந்தியெல்லாம் வீட்டில எல்லாரும் சாப்பிட்டு ராத்திரியோடயே சோறு முடிஞ்சு போச்சுதெண்டால் அப்புக்கும் ஆச்சிக்கும் இடயில காலமயில சண்ட நடக்கும். ஆச்சி நெடுக

மனிசனோட சண்ட பிடிப்பா. 'பகல்ச் சோத்துக்கே வழியக் காணயில்லயாம், இதில போக்கத்த மனிசனுக்குப் பாழஞ்சோத்துவிடாய் பெரும் விடாயாக் கிடக்குது' எண்டு புறுபுறுத்துக்கொண்டே இருப்பா. இதுமட்டுமில்ல, அப்புவுக்குக் கட்டாயம் தேத்தண்ணிக்குச் சீனி வேணும். சிறிமா காலத்தில பேரிச்சம்பழத்தோட, இல்லயண்டால் தோடம்பழ இனிப்போடதான் வீட்டில கனகாலம் நாங்கெல்லாம் தேத்தண்ணி விடாயத் தணிப்பம். ஆனா ஆச்சி எப்பாடு பட்டாவுதல் அப்புவுக்குக் கொஞ்சச்சீனி எங்கயாவது சுழிச்சுக் கொண்டந்திருவா. எல்லாத்தயும் நினைச்சு சிரிச்சன். ஏன் சிரிக்கிறாயெண்டு கேட்டேர். ஒண்டுமில்லயெண்டன். 'எனக்குத் தெரியும் கள்ளபடவா ஆச்சியும் நானும் பட்ட அல்லோல கல்லோலத்த நினச்சிச் சிரிக்கிறாயென்ன?' எண்டேர். உண்மைதான்மோனே. அந்தச் சோக்கான காலத்த இப்ப நினச்சாலும் வாய்க்குள்ள இனிப்பாத்தான் கிடக்குது எண்டேர் ஏதோ பறிகுடுத்தாள் மாதிரி.

கணவாக்கறிச் சட்டிய எடுத்து அடுப்பில சூடாகிறதுக்கு வச்சுப்போட்டு, பிறிச்சுக்குள்ளயிருந்து ஒரு பியர்ப்போத்தில எடுத்து உடச்சு அவருக்கு முன்னால வச்சன். என்னயிது? எண்டேர். பியரணயப்பு எண்டன். கொஞ்சங் குடிச்சுப் பாத்தேர். 'பச்சக்கச்சல்' எண்டேர். ஒரு பெருமூச்சு விட்டேர். என்னத்த நினச்சுப் பெருமூச்சு விட்டவரெண்டத விளங்கிக் கொண்டன்.

அப்பு நல்லாக் கள்ளடிப்பேர். காலமயும் பின்னேரமும் கட்டாகட்டியா ரெண்டு ரெண்டு போத்தில் கள்ளு வேணும் மனிசனுக்கு. ஒவ்வொருநாளும் பிறஞ் சிக்கிழவன் காலமயும் பின்னேரமும் கொண்ணந்து குடுத்துப் போட்டுப்போகும். பிறஞ்சிக்கிழவன் 'கும்பா கும்பா'எண்டு அப்புவோட நல்ல வாரப்பாடு. அப்புவும் அப்பிடித்தான். ஒருக்காவும் ரெண்டுபேரும் பேர் சொல்லிக் கூப்பிட்டத நான் காணேல்ல. கும்பா போட்டு வலும் மரியாதயாத்தான் புளங்கிச்சினம். அம்மாவுக்கு பிறஞ்சிக்கிழவன்தான் தல தொட்டது. அந்தச் சொந்தந்தான் இந்தக் கும்பாச் சொந்தம். பிறஞ்சியக்கொண்டு அம்மாக்குத் தல தொட்டதுக்கு அப்புவின்ரயாக்கள் சரியான எதிர்ப்பாம் 'நளவனக்கொண்டு தல தொடுகிறதோ?' எண்டு அப்புவின்ர ஆக்கள் அம்மான்ர ஞானஸ்தானத்துக்கே வாரயில்லயாம். அப்பு நெடுகச் சொல்லுவேர். எல்லாத்துக்குஞ்சேத்து தன்ர சகோதிரங்களுகு நல்ல பாடம் படிப்பிக்க நினச்சு அப்பு ஒரு மணி வேலயும் பாத்துவிட்டேர். பிறஞ்சிக்கிழவன்ர மூத்த மகளயும், அப்புவின்ர கடக்குட்டித் தம்பிக்காரனயும் சினேகிதம் புடிக்கச்செய்து, ரெண்டுபேரயும் எழுதுமட்டுவாளுக்கு ஓடச்செய்து, சடங்குகட்டி வச்சேர். அதுக்குப்பிறகு அப்புவின்ர சகோதிரங்களெல்லாம் கப்சிப். ஆனா, 'உன்ர புரியன்தானேயடி எங்கட வம்சத்தக் கொண்டேக் கள்ளுக்கு வித்தவன்' எண்டு அப்புவின்ர ரெண்டு பொம்பிளச் சகோதிரங்களும் ஆச்சியோட நெடுக ராத்திக்கொண்டேயிரந்தினம். 'அடியோமடி போங்கடி, அந்தளவுக்காவுதல் உங்கட உழுத்தல்ப் பரம்பரய

என்ர புருசன் பெறுமானமாக்கிப் போட்டானேயெண்டு சந்தோசப்படுங்கடி' எண்டு ஆச்சி சொல்லிப்போடுவா.

அப்புவுக்குச் சோத்தப்போட்டு, நிறயக் கணவாக்கறியும் வச்சுக் குடுத்தன். ஒருதுண்டுக் கணவாய எடுத்து வாயில வச்சேர், ம்.. ஆணத்தில நல்ல கைப்பக்குவந் தெரியுது. 'புள்ளயா சமச்சவள்?' எண்டு கேட்டேர் . இல்ல 'நான்தான்' எண்டன். நிமிந்தென்ன ஒருக்காப்பாத்து முழுமுகத்தாலயுஞ் சிரிச்சேர். பிறகு ரெண்டுவாய் சாப்பிட்டேர். 'எண்டாலும் எங்கட கடலுக் காணவாயின்ர ருசி இல்லத்தான்' எண்டேர். 'இங்க ஒண்டிலயும் எங்கட ஊர்ச்சுவ இல்லயணயப்பு' எண்டன். 'கடலால வந்தோண்ண உன்ர ஆச்சி குஞ்சுக்கணவாயில எடுத்து மைக்கூடும் போட்டு ஒரு புளியவியல் வைப்பாள் நாச்சியார்.. ம். அந்தக்காலம் மலயேறிப்போச்சு மோனே' எண்டு சொல்லியொரு பெருமூச்சு விட்டேர். எனக்கும் வாயூறிச்சுது.

முந்தி ஊரில இருக்கேக்க அப்புவோட கொய் வீசப்போனா, ரெண்டுபாடு வீசிப்போட்டு, அப்பிடியே நரயாம்பிட்டியில தோணிய விடுவேர். நல்ல பெரிய கொய்யா நாலெடுத்து காஞ்ச மணலுக்க தாட்டுப்போட்டு மேல நெருப்பக் கொழுத்தி விடுவேர். கொஞ்ச நேரத்தால நெருப்ப நூத்துப்போட்டு மண்ணக்கிளறி மீன எடுத்தேரண்டால், ஒரு கருக்கலில்லாமல் கொய் வெந்திருக்கும். அப்பிடியே தோல உரிச்சு எண்ண பிறக்க எனக்கொரு கொய்யத் தருவேர்.. அதின்ர சுவையே தனிதான். பாதி மீனே என்னால சாப்பிடேலாமல் போயிரும்.

இண்டைக்கு காலமயிலேருந்து நடந்ததெல்லாத்தயும் அப்புவுக்குச் சொன்னன். எல்லாத்தயும் வடிவாக் கேட்டேர். இடைக்கிட சிரிச்சேர். கோபப்பட்டேர். யோசிச்சேர். அனுதாபப்பட்டேர். சிவக்கொழுந்தனுக்கு சித்தப்பற்ர மகன் தருமு அடிச்சது சரிதானெண்டார். 'இப்படியான ஆக்கள் வச்சு நடத்திற சங்கங்கள கொழுத்த வேணும்' எண்டேர்.

'மாமியாக்கள் சாதி சொல்லிப் பேசினவயள் எண்டத, புத்தி கெட்டதுகள் அத விடு எண்டு சொல்லிப்போட்டு, இதமட்டும் கொழுத்தவேணுமெண்டு சொல்லுறாயெண இதெந்த ஞாயம்' எண்டு அப்புவிட்டக் கேட்டன். அப்பு ஒரு சிரிப்புச் சிரிச்சுப்போட்டு சொன்னேர், 'அது விக்கினமில்லாததெடா மோனே. இது விசம். ரெண்டயும் ஒண்டாச் சேர்க்காத. அதுக்கா உன்ர மாமிமார் சாதிசொல்லிப் பேசினதச் சரியெண்டு சொல்லேல்ல. ஆனா, ரெண்டுக்கும் கனக்க வித்தியாசங் கிடக்கு. அது அறியாத்தனம். இது அப்பிடியில்ல. நீ வடிவா யோசி' எண்டேர்.

அப்பு சொல்லுறதோட என்னால ஒத்துப்போகேலாமல்க்கிடந்துது. 'ஒரு விதத்தில இதுகும் அறியாத் தனந்தானணயப்பு, பொதுவா ரெண்டும் ஒண்டுதானே?' எண்டன். 'ஓம்ராசா. ரெண்டுமே நல்லதில்லத்தான். மொத்தமா இல்லாமல்ப் போனாத்தான் மனிசன்ர சீவியம் நடக்கும். இல்லயண்டால் மனிசன்ர சீவியத்த கடல்ல சாம்பல் காடாத்திறமாதிரிக் காடாத்த வேண்டியதுதான்' எண்டார். 'அதுக்கு வெட்டுறதும், கொழுத்திறதுந்தான் சரியான காரியமாண அப்பு?' எண்டு கேட்டன். 'வேற வழியிருந்தாச் சொல்லுபாப்பம்' எண்டு என்னட்டத் திரும்பிக் கேட்டேர். எனக்கெண்டால் இவர் சொல்லுறது சரியாப் படேல்ல.

சிங்களவனோட சண்டை பிடிக்கிறியள். ஏன் பிடிக்கிறியள்? தாயாப் புள்ளயா, ஒண்டடி மண்டடியா எங்களோட இருந்த சோனகச்சனத்த ஏன் கலைச்சனீங்கள்? இப்பிடி அப்பு ஏதோ அரசியல் கதைக்க வெளிக்கிட்டேர். எனக்கெண்டால் அப்புவுக்குச் சம்பந்தமில்லாத அரசியல் கதைக்கிறாரெண்டு ஆச்சரியமாத்தான் கிடந்துது.

அப்புவின்ர கண் ரெண்டும் கலங்கிப்போச்சு. அப்புவின்ர நல்ல சினேகிதன் நாச்சிக்குடா முபாரக் அலி நானா. அப்புவோட முந்தி கொழும்பு ஹாபறில ஒண்டா வேல செய்தவர். அவர் குடும்பத்தோடயே இல்ல. கலைச்சுப் போட்டாங்கள். இப்ப எங்க இருக்கிறேர் எண்டதே தெரியாது. அப்புவும் புத்தளம்மட்டுக்கு போய்த் தேடிப் பாத்தேர். அலி நானா அம்பிடேல்ல. மசனுக்கு அது சரியான கவல.

அப்பு சாப்பிட்டு முடிச்சு போறதுக்கு எழும்பினேர். எனக்கெண்டால் மனிசன அனுப்பிறதுக்கு மனமில்ல. 'இன்னொரு சமயம் வாறன்' எண்டுபோட்டுப் போட்டார். என்ர நாச்சியார் விடிஞ்செழும்பின உடன ராத்திரி நடந்ததெல்லாத்தயுஞ் சொன்னன். அவள் சிரிச்சுப்போட்டு 'வெளிக்கிடுங்கோ டொக்டரட்டப் போவம்' எண்டாள். ஏனெண்டு கேட்டன். முத்தமுன்னம் போறது நல்லம் எண்டாள். ஆறு மாசத்திற்கு முந்தி நான் வேலயில விழுந்து தலயில அடிபட்டேப்பிறகு சின்னச் சந்தேகமொண்டு இவளுக்கு இருந்தொண்டுதானிருக்கு.

அப்பு வந்திட்டுப்போனத ஒரு அஞ்சாறு பக்கத்தில ஒரு குறிப்புமாதிரி எழுதினன். அத வாசிச்சுப்பாத்துப்போட்டு 'கொஞ்ச நாளைக்கு எழுதாமல் ரெஸ்ற்ரெடுங்கோவன் குஞ்சு' எண்டாள். இதுக்குமேல நான் என்னத்தக் கதைக்கல்லாம். அப்பு வந்திட்டுப் போனத அம்மாக்கு அனுப்பினாச் சந்தோசப்படுவா எண்டு சொல்லி அத அனுப்பினன். அம்மா மருமகள்காரிக்கு ரகசிமாக் கடிதம் போட்டா 'உன்ர மனிசங்காரன எங்கயாவது காட்டுபிள்ள' எண்டு.

*தலயில அடிபட்டதால எனக்கு ஒண்டும் நடக்கேல்ல எண்டத என்ர நாச்சியாருக்கு நிரூபிக்கிற காரியத்தில இப்ப நான் மும்மரமாயிருக்கிறன்.*

★★★★★

**(அம்மா–சிறுகதை இதழ் பிரான்ஸ், வைகாசி 1997)**

# தொள்ளாயிரம் சரிகளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான காயங்களும்

*எந்நாளும் கடவுளாம் உம்மை நினைத்துப் பெருமை கொண்டோம். என்றென்றும் உமது பெயருக்கு நன்றி செலுத்தி வந்தோம். ஆயினும் இப்போது நீர் எங்களை ஒதுக்கித் தள்ளி விட்டீர். இழிவு படுத்தி விட்டீர். எங்கள் படைகளுடன் நீர் செல்லாதிருக்கின்றீர். எங்கள் பகைவருக்கு நாங்கள் புறங்காட்டி ஓடும்படி செய்தீர். எங்களைப் பகைப்போர் எங்களைக் கொள்ளையிட்டனர்.*
*உணவுக்காக வெட்டப்படும் ஆடுகளைப்போல் எங்களை ஆக்கி விட்டீர். வேற்றினத்தாரிடையே எங்களைச் சிதறியோடச் செய்தீர். நீர் உம் மக்களை அற்ப விலைக்கு விற்று விட்டீர். அவர்கள் மதிப்பை மிகவும் குறைத்து விட்டீர். எங்களை அடுத்து வாழ்வோரின் பழிப்புக்கு எங்களை ஆளாக்கினீர். எங்கள் சுற்றுப்புறத்தாரின் ஏளனத்துக்கும் இகழ்ச்சிக்கும் உள்ளாக்கினீர். வேற்றினத்தாரிடையே எங்களை ஒரு பழிச்சொல்லாக்கினீர் ஏனைய மக்கள் எங்களைப் பார்த்து தலையசைத்து நகைக்கின்றனர் (திருப்பாடல்கள்; 44: 8-14)*

*சித்திரையைச் சுட்டெரிக்கும் கத்திரி வெய்யிலில். கெட்டில் குஞ்சுக்கண்டி முனங்கின் கரும்பாறைகள் அரக்கிட்டுக் கொழுத்திய அடுப்பாய் கொதித்துக் கிடக்கும். சொந்தமாயொரு வள்ளம் வைத்திருக்க வக்கற்றதோர் கடலவன் அலைவாய்க் கரையில் இறங்கிப் பட்டியிழுத்து, முனங்கில் கடிப்புத் தட்டி, துடிப்பானதை பறியெடுத்துப்போக, சீண்டவோர் காகம்கூட இல்லாத சாபக்கேடாய் சாதாளைகளும் காரற்குஞ்சுகளும் முனங்குப் பாறையில் பொரிந்து கிடக்கும்.*

எனது மண்டையோட்டினுள் கிடக்கும் தேய்ந்துபோன மூளையுமதுபோல் காரற் கருவாடாய் காய்ந்து கனக்கும். மூக்குத்துவாரங்களுள் மூளைப்புழுதி மணக்கும். ஆயினும் என்னுடல்மீது எண்ணையை ஊற்றி கொளுத்துமளவிற்கு எந்தச் சலவையும் இன்னமும் எனது மண்டையை ஆளுமை கொள்ளவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

இருபகுதியும் போர் புரிய, அவர்களும் இவர்களும் சொற்பம் சொற்பமாய் சாகிறார்கள். இரு பகுதியருக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்ட எனது சனங்களோ அவர்களையும் இவர்களையும் விட அதிகமாகவே சாகிறார்கள். என்ன நடக்கிறது, ஏன் சாகிறோம் என்பதெதுவும் தெரியாமலே சிதறிச் சாகிறார்கள்.

இந்த உத்தரிப்பு ஸ்தலத்துக்குள் எப்படி மேய்த்து வரப்பட்டார்கள் என்ற சூட்சுமத்தைக்கூட இந்த நொடிவரை அறிந்திலர். யாழ்ப்பாண வெளியேற்றத்தின் போதிலிருந்தே இது இவர்களுக்குப் புரியாத புதிர் மட்டுமல்ல இவர்களது வாழ்வுக்கும் தொழிலுக்கும் எந்தக் காலத்திலும் சம்பந்தமில்லாத நிலமும்தான். சிங்கமும் புலியும் இவர்களுக்கான வாழ்வை வைத்திருக்கிறார்களோ இல்லையோ, ஆனால் உப்புச்சோளகத்தில் கறுப்பும் சிவப்புமாய் கொப்பு மொய்த்துக்கிடக்கும் ஈச்சம் பழங்களைப்போல் மடிநிறைய மரணங்களை வைத்திருந்து நேரகாலபேதமின்றி அள்ளியள்ளியே வழங்குகிறார்கள்.

‘ஐயோ என் சனமே! இந்த ஈனக்கொலைச் சாதியால் கொத்தும் குலையுமாய் கொல்லப்படவோ கொண்டு செல்லப்பட்டீர்?’ என ஒவ்வொரு கணமும் மனம் ஒப்பாரியிட்டுக் கொண்டிருக்கும். வன்னிக்காட்டில் மிருகங்களின் மத்தியில் சாவைச் சுமந்தலையும் என் சனங்களோடு கொஞ்சம் என்னைப் பேச விடுங்கள். நாளை அவர்கள் இருக்கமாட்டார்கள் என்றென் புத்தி சொல்கிறது. அதற்குள் அவர்களது நினைவுகளோடு சற்று நான் பேசியாக வேண்டும்.!

அல்போன்ஸா. நல்ல வடிவான கறுப்பி. என்ர அம்மாவின்ர ஒண்டுவிட்ட அண்ணன் யோசேப்ராசாவின்ர மூணாவது மகள். எனக்கு மச்சாள். என்னைவிட ரெண்டு வயசு மூத்தவள். ஆனால் என்னோடதான் அஞ்சாம் வகுப்பு மட்டும் படிச்சுப் போட்டு பாதியிலயே நிண்டிட்டாள். என்னைவிட கெட்டிக் காரியெண்டுஞ் சொல்லலாம். எண்டாலும் அவள் பாதியிலயே பள்ளியால நிண்டிட்டாள். ஏனென்டு கேட்டால் பேரன் பேத்தி வயசானதுகளாம், தனிய ஒரு கொட்டிலில இருக்குதுகளாம், அதுகளுக்குத் தோதா உதவிக்கிருக்கச் சொல்லி யோசேப்ராசா மாமா அவளப் பள்ளிக்கூடத்தால மறிச்சுப் போட்டார்.

என்னில சரியான நேசமானவள். பவுண் மச்சான், பவுண் மச்சான் எண்டு அவள் என்னக் கூப்பிடேக்கயெல்லாம் எனக்கெண்டால் சரியான வெக்கமாயுங் கூச்சமாயிமிருக்கும். அதோட பயமாயுங் கிடக்கும். ஏனெண்டால் ஈஸ்வரதாஸ், எட்வின் எண்டு ரெண்டு வளந்த மாடுகளும் எங்களோட படிச்சவங்கள். ரெண்டும் சரியான அம்மண முத்தையாக்கள். 'மச்சான், மச்சான்' எண்டு இவள் என்னக் கூப்பிடுகிறதக் கவனிச்சாங்களெண்டால் அவ்வளவுதான். என்னையும் அல்போன்ஸாவையும் ஒண்டாக்கிப் பட்டந் தெரிப்பாங்கள். இதில ஈஸ்வரதாஸ் கொஞ்சம் பரவாயில்ல. தூசணம் சொல்லுவானே தவிர குரங்கு வேலயள் காட்டமாட்டான். எட்வின் பொல்லாதவன். அடிப்பான். கண்டதுக்கெல்லாம் சும்மா நொட்டுவான். சுவருகளிலயெல்லாம் கரியால, செங்கட்டியால தூசணம் எழுதி வைப்பான். மாஸ்ரர்மார் உடனயே கண்டுபுடிச்சுப் போடுவினம். செவுள் அடியும் வாங்குவான். பள்ளிக்கூடம் முழுக்க இவங்கள் ரெண்டு பேற்ற ஆட்சிதான்.

எங்கட பள்ளிக்கூடத்துக்கு வாற மாஸ்ரர் டீச்சர்மார் எங்கட கிணத்துத் தண்ணி குடிக்க மாட்டினம். இவயளுக்கு தண்ணி எடுத்துக்கொண்டு வாறதுக்கெண்டே மூண்டு சாராயப் போத்தல் பள்ளிக்கூடத்தில இருக்கு. ஒண்டரக் கட்டைக்கு நடந்துபோய் பறையன்கேணி ஒழுங்கைக்குள்ள இருக்கிற ஆசைமுத்து எண்ட வெள்ளாளவீட்டுப் பைப்பிலதான் தண்ணி எடுத்துக்கொண்டு வரவேணும். இவங்கள் ரெண்டு பேருந்தான் அதுக்கும் போவாங்கள். மாரிகாலத்தில தண்ணிக்குப் போயிற்று வாற வழியில எல்லாப் போத்திலுகளிலயும் ரெண்டு ரெண்டு மிடறு தண்ணி குடிச்சுப் போட்டு, வழியில தொட்டந் தொட்டமாக் கிடக்கிற மழத் தண்ணியில கையால தெளிச்சு அள்ளி போத்தலுகளுக்க விட்டுக்கொண்டு வருவாங்கள். சிலவேளயில எச்சில் துப்பிக்கொண்டு வருவாங்கள். இவங்கள் தண்ணியெடுத்துக் கொண்டு வாறதுக்குள்ள சமயபாடம் முடிஞ்சு, தமிழும் பாதி முடிஞ்சு போயிரும். எட்வின் எல்லாப் பாடத்துக்கும் அடி வாங்குவான். விழுகிற அடி நோகாமலிருக்கிறதுக்காக ஒவ்வொருநாளும் காற் சட்டைக்குமேல இன்னொரு காற்சட்டை போட்டுக் கொண்டு வருவான். இன்ரேவல்ல கிளித்தட்டு விளையாடேக்க இவங்கள ஒருத்தரும் அவுட்டாக்கக் கூடாது. அப்பிடி ஆராவது அவுட்டாக்கினால் அடிப்பாங்கள். சரியான அட்டூழியம் புடிச்சவங்கள்.

எனக்கு வெல்லக்கட்டியெண்டால் சரியான விருப்பம். அப்பயெல்லாம் எங்கட இடங்களில இந்த அச்சுவெல்லம் லேசில கிடைக்காது. இது இந்தியாவிலயிருந்து வல்வெட்டித் துறையாற்ற கள்ளக்கடத்தல்ப் போட்டுகளிலதான் வரும். இடைக்கிடை யோசேப்ராசா மாமா வல்வெட்டித் துறை ஆரோய்க்கியசாமியின்ர போட்டில ஓட்டியாப் போய் வருவேர். யோசேப்ராசா மாமா வீட்டில எந்த நேரமும் அச்சு வெல்லம் இருக்கும். எனக்கு வெல்லக் கட்டியெண்டால்

விருப்பமெண்டு தெரிஞ்சு பள்ளிக்கூடத்துக்கு வரேக்க அல்போன்ஸா மச்சாள் நெடுகக் கொண்டு வருவாள். வெல்லம் மட்டுமில்ல ஒவ்வொரு நாளும் ஏதெண்டாலும் கள்ளத்தீன் கொண்டுதான் வருவாள். ஊர்நெல்லிக்காய், கறுவாப் பட்டை, மாங்காய், இலந்தப்பழம், பால்ரொட்டி… இப்பிடி. இன்ரேவல் நேரத்தில ஈஸ்வரதாஸுக்கும் எட்வினுக்கும் தெரியாமல் ரெண்டுபேரும் பங்கு போட்டுத் தின்னுவம்.
அல்போன்ஸா. நல்ல வடிவான கறுப்பி.

ஒருநாள் ராஜகுமாரி கூத்து ஒத்திகய எங்கட அண்ணாவியார் வாசகசாலைக்குள்ள நடத்திக் கொண்டிருந்தேர். அதில பொம்பிளத் தளபதி வேசம் எனக்கு. ஊரை விட்டு நான் வெளிக்கிடுகிற வரைக்கும் எனக்குப் பொம்பிள வேசம்தான் கிடைக்கிறது. ஒத்திக முடிய இருட்டாகீற்று. இண்டைக்குவர கரண்ட் இல்லாத ஊர்தான் எங்கட ஊர். காப்போரெத்தினம் எலக்சனுக்காக ரெண்டு கரண்டுக் கட்டயக் கொண்டு வந்து ஊர் வாசலில நட்டதோட சரி. அவருக்கு எங்கட சனம் வோட் பண்ணயில்ல எண்டதுக்காக இண்டைக்கு வரைக்கும் கரண்ட் கனைக்சனே இல்ல. தமிழரசுக் கட்சிக்கோ இல்லாட்டிக்கு கூட்டணிக்கோ இந்த ஊரச்சனம் வோட்டுப் போட்டு நானறியன். ஏனெண்டு சொன்னால் இவங்கள் வந்து ‘கிழக்கு மேற்கு, சூரியன் உதயம், ரெத்தத்திலகம் தனிராச்சியம்’ இப்பிடிச் சொல்லுற ஒரு தாலியறயும் சனத்துக்கு விளங்கிறதுமில்ல, தேவயுமில்ல. கடலையும் கரையயும் விட்டா அதுகளுக்கு வேறையொரு புருவத்தோரியும் தெரியாது. இதெல்லாந் தேவயுமில்ல, என்ன சவத்துக்கு இதெல்லாத்தயும் நமக்கு எண்ட எண்ணம் சனத்துக்கு.

தங்களுக்கு வோட் போடுறதில்லயெண்டு இந்தக் கிராமத்த கூட்டணிக்காரர் எவ்வளவு பழி வாங்கினாங்களெண்டது ஊர்ச்சனம் எல்லாத்துக்கும் தெரியும். குடி தண்ணிக்கே சனத்தத் தவிக்க விட்டவங்கள். உப்புத் தண்ணியக் குடிச்சுத்தான் முழுக் கிராமமுமே உயிர் வாழ்ந்ததுகள் எண்டால் நம்ப மாட்டீங்க.

வாசகசாலயிலயிருந்து எங்கட வீடு கொஞ்சம் தூரம். அல்போன்ஸா வீடு பக்கத்தில. அவள் எந்த ஏமஞ் சாமமெண்டாலும் பயப்பிடமாட்டாள். தனியத் திரிவாள். பேய்க்குப் பயப்பிடயே மாட்டாள். அல்போன்ஸா வீட்ட போனால் அவளயும் துணைக்குக் கூட்டிக்கொண்டு எங்கட வீட்ட போகல்லாம் எண்ட ஐடியாவில அங்க போக வெளிக்கிட்டன். கச இருட்டு. வாசகசாலயிலயிருந்து அல்போன்ஸா வீட்ட சரியா லெக்குப்பாத்து மண்டேக்குள்ள பதிச்சுப்போட்டு, கண்ண இறுக்கி மூடிக்கொண்டு ஓடினன். லெக்கு கொஞ்சம் கணக்குப் பிசகி டேவிற் பெரியையா வீட்டு முள்ளுக்கம்பி வேலிக்குள்ள நேர போய்ச் சொருகீற்றன். முள்முடி அறைஞ்ச யேசுநாதர் மாதிரி முகமெல்லாம் ஒரே

ரெத்தக்காடு. கைவிளக்கு வெளிச்சத்தில என்ர கோலத்தப் பாத்திற்று அல்போன்ஸா கத்த வெளிக்கிட்டாள். சரியாத்தான் பதகளிச்சுப் போயிட்டாள். அயலட்டமெல்லாங் கூடிப் போச்சு. அப்பதான் தெரிஞ்சுகொண்டன் அல்போன்ஸா மச்சாள் என்னில சரியான பாசமெண்டு. அவள் அண்டைக்குக் கத்தின கத்தும் துடிச்ச துடிப்பும் இப்பவும் என்ர மண்டேக்குள்ள வலிச்சுக் கொண்டுதான் கிடக்கு.

*ஆண்டு:1980*
*மாதம்: மார்கழி*
*திகதி: 3*
*கிழமை: புதன்*
*நேரம்: 7.15 காலை*
*காலநிலை: மெல்லிய மப்புமந்தாரம்*
*மழையின் அறிகுறியாய் வாயூறியபடி*

களங்கண்டி வலையிழுக்கப் போன ஐயா கடலாலை வந்திருவேர். வாறதுக்குள்ள புட்டவிச்சு கறியையுங் கூட்டி முடிச்சிட்டால் ஐயா கடலால வந்தோண்ண அடுப்பில வச்சிரலாம். ஐயா களங்கண்டியிழுத்து துடிக்கத்துடிக்கக் கொண்டுவாற குஞ்சுக் கணவாயில எடுத்து மைக்கூடும் போட்டு அம்மா அல்லது ஆச்சி புளியவியல் வச்சினமெண்டால் ஒரு தூக்குத் தூக்கி சிரசில அடிக்கும்.

'பவளம் மாமாவின்ர கடைக்கு ஓடிப்போய் தேங்காய், வெங்காயம், செத்தல்மிளகாய், புளி வாங்கிக்கொண்டு கெதியா ஓடிவா ராசா' எண்டு அஞ்சுரூவாயத் தந்து அம்மா அனுப்பி வச்சா. சட்டெண்டு மூளையில ஒரு பொறி தட்டிச்சுது. சரியா ரெண்டுவருசக் கனவு. இவ்வளவுகாலமும் வீட்டுக்குத் தெரியாமல் இயக்கத்தின்ர கல்வி வட்டத்துக்குப் போய் வந்து கொண்டிருந்த நான், வீட்டவிட்டு வெளிக்கிட்டுப் போறதுக்கு நல்ல வளம் பாத்துக் கொண்டிருந்தன். 'இது தான் தரணம் வெளிக்கிடடா சிங்கா' எண்டு அம்மா தந்த அஞ்சு ரூவா என்ர கையிலயிருந்து கரண்ட் அடிக்கிற மாதிரி நல்லொரு மணம் மணந்து சுரண்டிச் சுரண்டிச் சிக்னல் குடுத்துது. அதோட மழ வாறதுக்கு அறிகுறியா புழுதியும் நாசிக்குள்ள அடிச்சுது. தேகமும் ஒருமாதிரியாக் குளுந்துகொண்டு வந்துது. அதொரு பயமில்லாப் பதட்டமாயும், நல்லாயுமிருந்துது. மசிரவிட்டான் சிங்கன். தங்கச்சியின்ர மொனிட்டர் கொப்பியில ஒரு ஒற்றயக் கிழிச்சு 'நான் நாட்டுக்கு சேவை செய்யப் போகிறேன் தேடவேண்டாம்' எண்டமாதிரித்தான் ஏதோ சரியா ஞாபகமில்ல, எழுதி கொடியில கிடந்த ஐயாவின்ர சேட்டுப் பையுக்குள்ள வச்சுப் போட்டு உடுத்தியிருந்த சாரத்தோடயே 180ம் நம்பர் 8மணி பஸ் எடுத்து

யாழ்ப்பாணம் போனனான்தான், (அப்ப எனக்கு 18வயசும், 7மாசமும், 24 நாளும், 9மணித்தியாலமும் முடிஞ்சிருந்துது. எண்ட மட்டில நான் குழந்தப் போராளியில சேர்த்தியில்ல)

இயக்கத்துக்கு நான் ஓடிப்போய் 56நாளுக்குப் பிறகிட்டு 28.01.1981 புதன்கிழம காலம்பிற பத்தேமுக்கால்போல ரெண்டு தோழர்மாரயுங் கூட்டிக்கொண்டு எங்கட கிராமத்துக்குள்ள வந்துகொண்டிருக்கிறன். லவுட்ஸ்பீக்கர் பாடிக் கேட்டுது. நாங்கள் வாறது தெரிஞ்சு கொஞ்சச் சனம் எங்களத் தேடி ஓடி வந்திச்சினம். தவமண்ணன், ரெத்தினமண்ணன், துரையண்ணன், பூவானத்தான், சில்வேஸ்ரர் சின்னையா, கிறிஸ்தோப்பு மாமா, முத்துக்கிளி மச்சாள், ராசமணியக்கா, தங்கச்சி யூடித் இப்பிடிக் கனக்கச் சனம். எல்லாம் சொந்தக் காரச்சனம்தான். என்ர கிராமத்தில இருக்கிற எல்லாச் சனமுமே எப்பிடித்தான் சுத்திச் சுத்திப் பாத்தாலும் எனக்கு ரெத்த உருத்துகள்தான். குய்யோ முறையோ எண்டு கத்திக்கொண்டு ஓடிவந்த சனங்கள் என்னையும் ரெண்டு தோழர்மாரயுந் தூக்கித் தலைக்கு மேல வச்சு சுற்றுப்பிரகாரமாக யோசேப்ராசா மாமாவின்ர வீட்டுப் பக்கம் கொண்டு போச்சினம். ஊர்ச்சனம் முழுக்க யோசேப்ராசா மாமா வீட்டைதான். யோசேப்ராசா மாமா வீடு பந்தல் போட்டு வடிவாச் சோடிச்சிருந்துது. அல்போன்ஸாவுக்குக் கலியாணம். இருபது வயசிலயே அவளுக்குக் கலியாணம் முடிஞ்சுப்போச்சு. எங்கட ஊரப் பொறுத்த மட்டில பொம்பிளைக்கு இருபது வயசு பக்குவத்தோதான வயசுதான். முந்தியெல்லாம் அப்பிடியில்ல. பன்ரெண்டு பதின்மூணு வயசிலயே கலியாணங் கட்டி வச்சிருவினம். ஆம்பிளப் பிள்ளயளண்டால் பதினாறு பதினேழு வயசே போதுமெண்டிருந்துது. ஏனெண்டால் அந்த வயசிலயே அவர் ஒரு முழுத் தொழிலாளியாப் போயிருவேர். இப்ப சரியான மாற்றம். சின்ன வயசிலயே கடல்தொழிலுக்கு அனுப்பாமல் தங்கட பிள்ளயளயும் படிப்பிக்க வேணுமெண்ட கொள்க சனத்துக்கு வந்திட்டுது. இப்ப இருபது இருபத்தஞ்சு வயசு வந்தேப்பிறகிட்டுத்தான் கலியாணம்.

பந்தலுக்குள்ள நான் போகமுதலே கலியாணப் பொம்பிள, அவளொரு தேவதை மாதிரியே அச்சொட்டாய் ஓடிவந்தாள். ஆக்களுக்கு முன்னாலயே கட்டிப்புடிச்சுக் கொஞ்சினாள். ‘என்ர ஆசமச்சான், என்ர பவுண் மச்சான், நீ கட்டாயம் என்ர கலியாணத்துக்கு வருவாயெண்டு எனக்குத் தெரியுமடா’ எண்டு அவள் சொல்லிக்கொண்டே கண்ணெல்லாங் கலங்கிப்போனாள். எனக்கும் சரியான சங்கடமாயிருந்துது. பாதங்கள் ரெண்டும் வேர்த்துக் கசிஞ்சு பாட்டாச் செருப்பு வழுக்கிறமாதிரி வந்திற்றுது.

கலியாணச்சாப்பாடு. நினைச்சால் இப்பவும் வாயூறுது. நல்ல கொழுத்த மாட்டிறைச்சிக்கறி. அல்போன்ஸா மச்சாள் என்னயுந் தோழர்களயும் பக்கத்தில

இருந்து விழுந்து விழுந்து கவனிச்சாள். இதை எழுதிறபோதுதான் கிட்டடியில நடந்த ஒரு விசயம் நினைவுக்கு வருகுது. தோழர் ஒருத்தரோட ஒருநாள் கதைச்சுக்கெண்டிருக்கேக்க சொன்னன் 'எங்கட கிராமத்தில கலியாண வீடுகளில கட்டாயம் மாடு வெட்டுவம் தோழர்' எண்டு. அவரால நம்பவே ஏலாமல்ப் போச்சு. அவருக்கெண்டால் பெரிய ஆச்சரியமாத்தான் இருந்துது. இப்பவுந்தான் வெளிநாடு வந்ததுக்குப் பிறகும் எங்கட ஊர்ச்சனங்களின்ர கலியாணங் கொண்டாட்டங்களில கட்டாயம் மாட்டுக்கறி காய்ச்சுவம். இங்க வெளிநாடு வந்ததிலயிருந்து வேற ஊராக்களின்ர கனக்கக் கலியாணங்களுக்குப் போயிருக்கிறன். வெறும் மரக்கறிதான். இங்க இருக்கிற தமிழரும் சொல்லுகினம் 'சீ... கொண்டாட்டங்களுக்கு மாட்டுக்கறியா...' எண்டு. எனக்கு ஒரே சிரிப்பாத்தான் வரும். இங்க வெள்ளயளின்ர கலியாண வீடுகளுக்குப் போற எங்கடயாக்கள், அவன் அரையவியலாக் குடுக்கிற மாட்டுச் சீவல அள்ளிவச்சு கழுத்துமுட்டக் கட்டுவினம். ஆனால் வெளியால வந்து ஒண்டுந் தெரியாத ஆக்கள் மாதிரி 'சீ... மாட்டுக்கறியா...?' எண்டு தாளம் போடுவினம். அதென்னவோ எனக்குத் தெரியாது மாட்டுக்கறி இல்லையெண்டால் அது கலியாணம் மாதிரியே எனக்குப் படுகிறதில்ல. கொஞ்சம் பொறுங்கோ வெளியால வாறன். பொறுத்த, முக்கியமான விசயங்களக் கதைக்கேக்க பாசை விளங்கயில்ல எண்டு சொல்லிப் போடுவியள்.

இன்று 27.02.2009.
'அவர்களின் வாய் பேசுவதும், நா உரைப்பதும் பாவமே.
அவர்கள் தற்பெருமை அவர்களைச் சிக்க வைப்பதாக.
அவர்கள் சபிக்கின்றனர்.
அடுக்கடுக்காய் பொய் பேசுகின்றனர்.'
(திருப்பாடல்கள்; 59:12)

உக்கிரமடைகின்றது வன்னிப்போர். முன்னேற முடியாமல் சிங்களப்படைகள் முடக்கம். 3நாட்களில் தொள்ளாயிரம் படையினர் பலி. இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் காயம். (தமிழ்வின்- வெள்ளிக்கிழமை, 27பெப்ரவரி 2009, 03:47.55பி.எம்) போன்ற செய்திகளையும், இன்னும் இதேபோல் இன்று இங்கெல்லாம் மனித மூளைகளை மண்டையோட்டினுள்ளிருந்து நாயிழுவை பேயிழுவையாக இழுத்து வெளியில் போட்டு மேய்ந்து கொண்டிருக்கும் இணையத் தளங்கள் சிலவற்றோடும் மாரடித்தோய்ந்து, பிடரிவலி தொடங்குவதையுணர்ந்து எழுந்திருக்க எண்ணிய போதுதான்; அந்தக் காட்சி பார்வையில் கிடைத்தது. கைதேர்ந்த ஒளிப்பதிவாளரின் கேமராமொழி கச்சிதமாயும், மிக நிதானமாயுமிருந்தது.

உக்கிரப் போர் நிலம் என்கிறார்களே...?

*மக்கள் அவலத்தோடு கொந்தளிக்கிறார்கள் என்கிறார்களே...?*
*பதுங்கு குழிகளை விட்டு வெளியே வந்தால் மக்கள் கொத்துக் கொத்தாய் கொல்லப்படுகிறார்கள் என்கிறார்களே...?*
*படம் பிடிப்போர் மட்டும் எப்படி நிதானமாய் தங்கள் பணியில் முனைப்போடு இயங்குகிறார்கள்? ஒரு கேமராக்காரனாய், ஒரு போர்ப் படப்பிடிப்பாளனாய் இருந்துகூட யோசித்துப் பார்க்கிறேன். முடியவில்லை. குஞ்சுகுருமான்கள், கிழடுகட்டைகள் முதற்கொண்டு எலும்பும் தோலுமான மக்கள், கும்பல் கும்பலாய் பிணங்களை விலத்தி குடி தண்ணீருக்கும், ஒரு குவளை கஞ்சிக்கும் ஆலாய்ப் பறக்கிறார்கள், ஆனால் இந்த களப்படப் பிடிப்பாளர்கள் எந்த பலத்தின் பின்னணியில் நின்று சூட்டிங் நடத்துகிறார்கள் என்ற கேள்வி எழுமிடத்து: கொழுப்பெடுத்து, கொலைத் தினவெடுத்துத் திரிந்துவிட்டு, பஞ்சப்பட்ட சனங்களை பலியாடுகளாய் கந்தகத்தீயில் தள்ளிவிட்டு ஓடி ஒளிந்துகொண்ட தலைவனையும், தளபதிகளையும் எண்ணி, கொல்லும் கோபம்தான் எழுகிறது.*

*ஊர்களில் அவர்கள் ஒளிந்து காத்திருக்கின்றனர்.*
*சூதறியாதவர்களை மறைவான இடங்களில் கொலை செய்கின்றனர்.*
*திக்கற்றவர்களைப் பிடிப்பதிலேயே அவர்கள் கண்ணாயிருக்கின்றனர்.*
*குகையிலிருக்கும் சிங்கம்போல் அவர்கள் மறைவில் பதுங்கியிருக்கின்றனர்.*
*எளியோரைப் பிடிப்பதற்காகவே அவர்கள் பதுங்கியிருக்கின்றனர். தம் வலையில் சிக்க வைத்து இழுத்துச் செல்கின்றனர். அவர்கள் எளியோரை நலிவுறச் செய்து நசுக்குகின்றனர். அவர்களது கொடிய வலிமையால் ஏழைகள் வீழ்த்தப் படுகின்றனர்.*

*(திருப்பாடல்கள் 10: 8-10)*

**Title:** *The Life and distress of the displaced people in Mullaitivu district.Date filmed: 24.02.2009, Date uploaded: 25.02.2009*

*கேமரா ஊர்ந்து செல்கிறது. ஒரு தற்காலிக கொட்டகை போடப்பட்ட இடத்தில் கஞ்சி கொடுக்கிறார்கள். சிறுவர்கள், முதியவர்கள், பெண்களென்று பலநாள் பட்டினியில் வாடிப்போன உடலங்களாய் மக்கள் கூட்டம் ஒரு குவளை கஞ்சிக்காக கையில் கிடைத்த தட்டுகள், கோப்பைகள், செம்பு, குவளை என்று ஆளுக்கொன்றை ஏந்திப் பெறுகிறார்கள். அந்த மக்களின் முகங்களைத் தேடி இடையிடையே காமெரா குளோஸ்-அப்பில் செல்லும்போது முகங்களால் வழிந்தோடும் அவமானங்களையும் துடைத்துக்கொண்டு, எஞ்சியிருக்கும் குழந்தை குட்டிகளின் உயிர்களைக் காத்தால் போதும் என்பதாய் ஒரு குவளை கஞ்சியைக் கையேந்திச் செல்கிறார்கள். கட்.*

*'பால்குடி மறவாத மழலைகளின் நாவு தாகத்தால் அண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும்! பச்சிளம் குழந்தைகள் கெஞ்சுகின்ற உணவுதனை அளித்திடுவார்*

*யாருமிலர்' (புலம்பல் 4:4)*

*68-70 வயது மதிக்கத்தக்க, ஒட்டியுலர்ந்த, ஒரு துணிக்கையளவேயான உயிரைச் சுமந்த ஒரு பெண்ணிடம் கேமரா செல்கிறது. நிலத்தில் குந்தியிருந்தபடியே ஒப்பாரியிட்டு அழுகிறாள். அந்த முதியவளின் ஒப்பாரிகளுக்கிடையில் கொட்டுண்டு சிதறும் வார்த்தைகளையும், அவளையும் ஆடாமல் அசையாமல் கேமரா நிதானமாய் பதிப்பித்துத் தருகிறது.*

*'மருமகனுக்குப் பேர் செல்லத்துரை. அவருக்கு ஒரே வருத்தமும் காச்சலும்... சுருண்டு கிடந்தவர். என்ர பேத்தி, பன்ரெண்டு வயசு... அதுகளுக்குத் தண்ணி எடுப்பமெண்டு வந்தன்... தண்ணிக்குப்போனா தண்ணி தர மாட்டனெண்டுட்டுதுகள்.. அதோட இங்க நல்ல தண்ணிக் கிணறிருக்காம் எண்டு சொல்லிச்சுதுகள்..... ஒட்டவாளியால உரஞ்சி உரஞ்சிக் கொஞ்சத் தண்ணி..... ஒரு வாளிக்க நிறயக் கொண்ணந்தன்.. ஒரு கடயில கொண்ணந்து வச்சிற்று... என்னால தாங்கேலாமல்ப் போச்சு நெஞ்சுக்குத்து... இந்தத் தேச மெல்லாம் போனன்.... தெரியாது எண்டிட்டினம்.... பேந்து அங்கால இருக்காமெண்டு போக.... அதுக்க கடல்..... ஐயோ...கடல் கடல் கடல்......'*
*'அம்மா அவயளக் காணயில்லயா....?' (மிகத் தெளிவான ஒலிப்பதிவில் இது ஒரு உசாரான இளம் பெண்குரல்)*
*'இல்லே... என்ர புள்ளயளக் காணே...ன். இந்தத் தேசமெல்லாந் திரியிறேன்... ஒரு கொட்டில் மாதிரி தறப்பாள் போட்டு... செல்லடிக்கு பயத்தில பங்கர் வெட்ட ஏலா தெண்டு... மருமகனுங் குந்திக்கொண்டிருக்கிறேர்... தண்ணி விடாயில வந்தனான்... சமைக்கவுமில்ல, ராத்திரியும் சாப்பாடில்ல, ஒண்டுமேயில்ல அரிசி சாமான் ஒண்டுமேயில்ல ஐயோ.... என்ர பிள்ளயளுக்கு தண்ணி குடுப்பார் ஆருமில்லயே... அந்தக் குஞ்சு... சின்னப் பேரப் பிள்ளக் குஞ்சும் அதுக்க.... ஐயோ.... எல்லாரட்டயுங் கேட்டுட்டே..ன்....'*
*'உங்கட சொந்தக்காரர் ஒருத்தரயுங் காணயில்லயா....?' (அந்த இளம்பெண்).*
*'ஐயோ... இல்ல..., இரணடுமடுவில இருந்தே என்ர சொந்தக்காரரக் காணயில்ல....*
*எல்லாரும் எங்க எவ்விடமெண்டில்ல...'*

*வன்னிச்சண்டை தொடங்கியதிலிருந்து தினமும் ஒப்பாரி களாலும், மனித ஓலங்களாலுமே மலிந்து நிரம்பி வழிகின்றன தமிழ்த் தொலைக்காட்சிகளும், இணையத்தளங்களும். ஆனால் இன்று இந்த முதிய பெண்ணின் அவலக்குரல் எனது அடிவயிற்றை ஏதோ செய்து கொண்டிருந்தது. பிடரி நரம்பில் சுள்ளென வலித்தது. அறிமுகமான சுடுமணலின் வாசம் ஒன்று நாசித் துவாரங்களுக்குள் ஊர்ந்து சென்றது. கேமரா தொடர்ந்து நகர்கிறது. அதே நிதானத்துடன். மேலும் பல மனிதர்களின் அல்லோலகல்லோலமான காட்சிகள்.*

*‘எங்கள் காலடிகள் உம் வழியினின்று பிறழவில்லை.
ஆயினும் நீர் எங்களை கொடிய பாம்புகள் உள்ள இடத்தில் நொறுங்கும்படி விட்டுவிட்டீர்.
சாவின் இருள் எங்களைக் கவ்விக்கொண்டது’ (திருப்பாடல்கள்; 44:19)*

*மீண்டும் மீண்டும் அந்த முதுமையின் அவலமான ஒப்பாரியும் ஓலமும் நெஞ்சைப் பிசைந்தது. இரத்த நாளங்களை விட்டு இதயத்தைத் தனியாக அறுத்தெடுத்து தரையில் போட்டது. மீண்டும் எனது மண்டைக்குள் அதே வலி.*

*‘அவர் என் வலிமையைக் குன்றச் செய்தார்.
நான் எழ இயலாதவாறு என் தலைவர் என்னை அவர்கள் கையில் ஒப்புவித்தார்.
என் தலைவர் என்னிடமுள்ள வலியோர் அனைவரையும் அவமதித்தார்.
என் இளைஞரை அடித்து நொறுக்க அவர் எனக்கு எதிராக ஒரு கூட்டத்தை வரவழைத்தார்.’ (புலம்பல் 1: 14-15)*

*இணையத்தளங்களை நிறுத்திவிட்டு, அறுந்து தொங்கும் நெஞ்சக்கூட்டை புகையால் நிரப்ப ஒரு சிகரட்டை எடுத்து மூட்டிக் கொண்டேன். புகை வளையங்களும் ஒப்பாரியிட்டபடியே காற்றில் கரைந்தன.*

*‘நாங்கள் தரைமட்டும் தாழ்ந்துவிட்டோம்.
எங்கள் உடல் மண்ணோடு ஒட்டிக்கொண்டுள்ளது’ (திருப்பாடல்கள் 44:25)*

*தொலைபேசி மணி. தங்கை யூடித். அழுகை விசும்பலுக்கி டையே ‘அண்ணே… அல்போன்ஸா மச்சாளப் பாத்தனியாண்ணே?’ எனக்கேட்டாள்.
‘எங்கேயடி….?’ என்றேன். நான் பார்த்த அதே வீடியோக் க்ளிப்பைச் சொன்னாள். ‘அதில எங்கயடி….?’ கேட்டேன். ‘அதில கிழவியொண்டு குளறிக் கொண்டிருக்குதண்ணே…, அதுதானண்ணே….’
‘விசர்க் கதை கதைக்காத. உனக்கார் சொன்னது..?’
‘மன்னாரிலயிருந்து ராசுக்குஞ்சியப்பு இப்ப கொஞ்சத்துக்கு முதல்த்தான் எடுத்தவர். அவர்தானண்ணே சொன்னவர். இப்பிடித்தான் சனமெல்லாம் எலும்புந் தோலுமா இருக்காம்… எங்கட கனக்கச் சனம் எங்கெங்க இருக்குதெண்டே தெரியாதாமண்ணே. அந்தக் கவுண்டு போவானுக்கு ஒரு கொள்ளநோயும் வராதா பாலதீவு அந்தோனியாரே? அவன்ர தலயில இடி விழாதா மடுவுமாதாவே…?’ ஒரு கிழவிபோல் திட்டினாள். ஒரு குழந்தைபோல் தேம்பி அழுதாள்.*

*வாயில் எரிந்து கொண்டிருந்த சிகரட் ஆட்லறியாய் வெடித்துச் சிதறியது. சிதறித் தெறித்து சுவரெல்லாம் ஒட்டிக்கொண்ட என் இறைச்சித் துண்டங்களை ஒரு ஒப்பாரி வந்து கூட்டி அள்ளிக் கொண்டிருந்ததை எனது வீட்டுக்கூரையின் மீதிருந்து நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அது அல்போன்ஸா மச்சாளின் ஒப்பாரி. எனது அழகிய கறுப்பியின் ஒப்பாரி.*

*28.02.2009*

*நேரம்: 00:07*

*தொள்ளாயிரம் சரிகளும், இரண்டாயிரத்துக்கும் அதிகமான காயங்களின் சமன்பாடுகளும், என் வாயிலிருந்து வெடித்த ஒரு ஆட்லறியில் சுக்கல் சுக்கலாய் சிதறிப் போயின.*

*'வாரீர்! ஆண்டவரின் செயல்களைக் காணீர்! அவர் உலகில் ஆற்றியுள்ள திகைப்பூட்டும் நிகழ்ச்சிகளைப் பாரீர்!' (திருப்பாடல்கள் 46: 8-9)*

★★★★★

**புதுவிசை**

# மண்டா

*2012 கோடையின் ஆரம்பம். ஸ்லின்னிங்கன் முகத்துவாரம்.*
*மூத்தவள் அணியத்தில் இருந்தாள், இளையவள் கடையாலில், நான் வாரியில் நடுப்படகில்.*

*மார்ட்டீன் அண்டர்சனின் 17அடி தும்புக்கண்ணாடி வள்ளம். அதன் எவன்றூட் வெளியிணைப்பு யந்திரத்தின் ஆடுதண்டு உப்புவரில் துருப் பிடித்ததால் இயக்கம் மறுத்து விட்டது. அதனால் மார்ட்டீன் அண்டர்சன் அதனை திருத்துவோனிடம் செப்பனிடக் கொடுத்துவிட்டார். எனவே இன்று தண்டு வலித்துக்கொண்டுதான் ஸ்லின்னிங்கன் முகத்துவாரம்வரை வந்தோம். போன கோடையில்தான் மார்ட்டீன் அண்டர்சன் புதிதாக வாங்கியிருந்தார் இந்தப் படகை. சில்வர் வைகிங்க் படகு. அவரது தாத்தா அண்டர்சன் ஹாகன் தனது பரம்பரை முதிசமாகக் கொடுத்துச்சென்ற நாட்டு மரப்படகு அடிக்கடி கலப்பத்துக்குள்ளாவதால் அதனை வீட்டுக் கோடிப்புறத்திலேயே கட்டையில் ஏற்றிப் பக்குவமாய் தறப்பாளிட்டு மூடி வைத்துவிட்டார்.*

*நோர்வேயின் பிரதான மீன்பிடி நகரமான இந்த ஒலசுண்ட் நகருக்கு நாம் குடிபெயர்ந்து பதினைந்து வருடங்கள். மார்ட்டீன் அண்டர்சன் கடந்த பதினைந்து வருடங்களாக எமது அயலாளி. அப்போத்திக்கரியாயிருந்து கட்டாய ஓய்வு பெற்றவர். வருடத்தில் வரும் கோடை காலங்களில் சில நாட்கள் வேட்டைக்குப் போவார், மீன் பிடிக்கப் போவார், பழங்கள் பிடுங்கப் போவார், மனைவியையும் அழைத்துக்கொண்டு ஒரு வாரம் மகள் மருமகன் பேரக்குழந்தைகளைக் காண தங்கள் சொந்த இடமான வல்டால் கிராமத்துக்குப் போய்வருவார். அப்பப்போ மான், மரை, மீன், நண்டு, பழங்கள் என மார்ட்டீன் அண்டர்சனின் மனைவி சில்வியா அண்டர்சன் எங்களுக்கும் அனுப்பி வைப்பார். இங்கிருந்து சமைத்த உணவுகள் அங்கு செல்லும். கோடையில் அநேகமாக எங்கள் மூத்தவளையும் இளையவளையும் அழைத்துக் கொண்டுதான் மீன் பிடிக்கச் செல்வார், பழம் பிடுங்கச் செல்வார்.*

இது மார்ட்டீன் அண்டர்சன், சில்வியா அண்டர்சன் பற்றிய கதை இல்லை என்பதால் சுருக்கமாக, கடந்த பதினைந்து வருடங்களாக நல்ல அயலாளி நட்புக்குடும்பங்களாக இருந்து வருகின்றோம் எனக் கூறிவிட்டு கடந்து செல்கிறேன்.

கடந்த மூன்று நாட்களும் வேகமான காற்றும், அலையாட்டமும், நீரோட்டமும் அதிகமாக இருந்ததால் கடல் கலங்கியிருந்தது. மார்ட்டீன் அண்டர்சனின் சிறிய எக்கோசவுண்டர் மீன்வள நோட்டம் பார்ப்பதற்கான குறைந்தபட்ச அனுசரணையைக்கூட எமக்குத் தரவில்லை. எனவே குறைந்தபட்ச அனுபவத்திலிருந்தும், குத்துமதிப்பிலிருந்தும் முகத்துவாரத்தின் தென்கிழக்கில் படகை நங்கூரமிட்டிருந்தோம். ஒன்றும் மோசம் போகவில்லை. மூத்தவள் ஆறு மீன்களும், இளையவள் ஏழு மீன்களும் நான் ஐந்து மீன்களுமாக பதினெட்டு மீன்களை இதுவரை பிடித்திருந்தோம். கிட்டத்தட்ட மூன்றரைக்கிலோ. இது போதுமென்று நான் நினைத்தேன். ஆனால் மூத்தவள் விடுவதாயில்லை. தன்னைவிட ஒரு மீன் இளையவள் அதிகமாய்ப் பிடித்துவிட்டாள் என்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வெளிப்படையாக மூத்தவள் காட்டிக் கொள்ளாவிட்டாலும்கூட அவளால் ஒப்புக்கொள்ள முடியாத தோல்வியாயிருந்தது. சற்று நேரத்தின் பின் கண்மூடி முழிப்பதற்குள் கோர்வைத் தூண்டலில் ஒரே தடவையாக இன்னும் ஐந்து மீன்களை இழுத்துவிட்டாள் இளையவள். இப்போ இளையவள் பிடித்த மீன்களின் எண்ணிக்கை பன்னிரண்டாக உயர்ந்து விட்டது. மூத்தவளைவிட இரட்டிப்பு. இப்போ மூத்தவளைக் கேட்கவும் வேண்டுமா…? தான் அமர்ந்திருக்கும் அணியப்பகுதியுள்ள கடற்பரப்பில் மீன்பாடு இல்லை என்றாள். இளையவள் அமர்ந்திருக்கும் கடையாற் பகுதியுள்ள கடற்பரப்பிலேயே அதிக மீன்பாடு இருக்கிறதென்றாள். இளையவள் வைத்திருக்கும் நெல்சன் சித்தப்பா வாங்கிக்கொடுத்த தூண்டிற்கம்பு தரம் வாய்ந்தது எனவும் தான் வைத்திருப்பது அண்ணா பலகாலம் பாவித்த பழைய, தரம் குறைந்ததும் என்றாள். மூத்தவன் களக்கம்புத் தூண்டிலில் மீன் பிடிப்பதில் வலு விண்ணன். கடந்த வருடம்தான் தனது மேற்படிப்பிற்காக வேறு மாநிலம் போய்விட்டான். மூத்தவள், தனது தூண்டிலில் அகப்படாமல் இளையவளின் தூண்டிலில் அகப்பட்ட அத்தனை மீன்களையும் திட்டினாள், சாபம் கொடுத்தாள். சிறிது நேரத்தில் நீரோட்டம் மாறி நுகைப்பு எடுத்தது. கிட்டத்தட்ட முப்பது கிலோவுக்குமேல் பிடித்து விட்டோம். ஆனால் யார் யார் எத்தனையெத்தனை மீன்கள் பிடித்தோம் என்ற எண்ணுக்கணக்கு மூவருக்குமே தெரியாது. அது தேவையற்றதாகவும், முடியாததாகவும் போய்விட்டது. ஆரம்பத்தில் நான் பிடித்த ஐந்து மீன்களைத் தவிர மேலதிகமாக இன்னும் மூன்று நான்கு மீன்கள்தான் பிடித்திருப்பேன். எனது தூண்டில்தடியை வைத்துவிட்டு, மூத்தவளும் இளையவளும் பிடிக்கும் மீன்களைத் தூண்டிலில் இருந்து கழற்றிப்போடவே சரியாயிருந்தது.

இவை அதிகம். இரண்டு மூன்று கிலோ மீன்களே இன்று எமக்குப் போதுமானது. போனவாரம் மூத்தவளும் இளையவளும் ஐயாவோடு தொலைபேசியில் பேசியபோது அவர் கேட்டிருந்தார் ‘நீங்கள் பிடிக்கிற மீனில அப்பப்பாவுக்கும் பொரிச்சுக்கொண்டு வருவியளோ’ என்று. அதற்காகத்தான் இன்றைய மீன்பிடி. நாளைக் காலை எமது தீவிலிருந்து விமானம் ஏறுகின்றோம். நாளை மறுநாள் சென்னைக்குப் போய்விடுவோம். மூத்தவன் தானிருக்குமிடத்திலிருந்து நேரடியாகவே ஜெர்மனுக்கு வந்து எம்மோடு சென்னை பயணிப்பதாகத் திட்டம்.

எண்பத்தியாறாம் ஆண்டு இயக்க அழிப்புக்களின் அமளிதுமளி. மார்கழி முழுநிலவொளியில் எங்கள் துறைமுகமான பெரியபார் துறைமுகத்திலிருந்து என்னைக் கள்ளத்தோனியில் ஏற்றி ராமேஸ்வரம் அனுப்பிவைத்த ஐயாவை இந்தக் கோடையில்தான் மீண்டும் பார்க்கப் போகிறேன். இருபத்தியாறு வருடங்களுக்கு மேலாகி விட்டது. பெரியபார் துறைமுகத்தில் யந்திரப்படகில் என்னை ஏற்றி அனுப்பியபோது கரையில் நின்ற உறவுகளின் கண்களிலிருந்து ஒழுகிய கண்ணீரில் மார்கழிமாத முழுநிலவின் ஒளிபட்டு மின்மினிப் பூச்சிகளாய்த் தெறித்த அந்தக் கணங்கள் இன்னமும் நெஞ்சைவிட்டகலாத் துன்பமானவை. அத்தனை பேருக்கும் நடுவில் நின்று எல்லோருக்கும் ஆறுதல் சொன்ன விறைச்ச மனுசன் ஐயா, படகின் யந்திரம் இயங்கத் தொடங்கியபோது பெரியபாரின் கரையில் நின்ற ஒற்றைப்பனையில் தலையை மோதி மோதி ஓங்கிய குரலெடுத்துக் கதறிய காட்சி இன்னமும் என் நெஞ்சைத் துளைக்கும் வியாகுலமானது. எத்தனையெத்தனை மாற்றங்கள். யுத்தம் சப்பித் துப்பிய பூமியில் ஓர் குடிகூடப் பாதிக்கப்படாமல் இல்லை. அதில் எனது குடிமட்டுமென்ன விதிவிலக்கா?

தீவுக் கிராமங்கள் பண்ணை வெளியைத் தாண்டி நகர்ந்து யாழ் நகர்ப்பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த தொண்ணூறு. நாவாந்துறையில் ஐயாவும் அம்மாவும் தம்பி தங்கைகளும் தூரத்து உறவினர் வீட்டில் தஞ்சமடைந்திருந்தனர். 91 கோடை முடிந்த கையோடு வந்த தகவல் ஐயாவின் வலதுகால் மிதிவெடியில் போய்விட்டதென்று. ஐயாவும் பெரியையாவும் மாடோடிப்பிட்டி களச்சரிவில் வெள்ளாப்புப்பாடு வலையை விரித்து வைத்துவிட்டு, கொஞ்சம் விறகுக்காகக் கண்ணாச்சுள்ளிகள் எடுக்கலாமென்ற எண்ணத்தில் தோணியை கரையில் விட்டுவிட்டு இறங்கியிருக்கிறார்கள். கரையில் புதைத்து வைத்திருந்த ஜொனிவெடியின்மேல் ஐயா வலதுகாலை வைத்து விட்டார். கதை அவ்வளவுதான். அதன்பின்னும் யுத்தம் அவர்களை சும்மா விட்டு வைக்கவில்லை துரத்து துரத்தென்று துரத்தியது. கண்டு கேட்டிராத தேசாந்திரமெல்லாம் ஒற்றைக்கால் ஐயாவும் அம்மாவும் இரண்டு தம்பிகளும் மூன்று தங்கைகளும்

அலைவாய்ப்பட்டுத் திரிந்தனர். 92இல் மன்னார் வழியாக கள்ளத்தோணியில் தம்பி தங்கைகளை ஏற்றி 'எங்கயாவது தப்பிப்போங்கோ குஞ்சுகளே' என்று தமிழ்நாடு அனுப்பி வைத்து விட்டார் ஐயா. பின் 97இல் ஐயாவும் அம்மாவும் அதே மன்னார் வழியாக தமிழகம் வந்து சேர்ந்தார்கள்.

ஐயா கொழும்புத்துறையில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் தனது காதலியைச் சந்திக்க ஒவ்வொரு ஞாயிறும் தீவுக்கு சைக்கிளில் இருபத்தைந்து கிலோமீற்றர் வருவார். காதலியின் வீட்டைக் கடந்து செல்லும்போது பெல் கொடுப்பார். திரும்பி வரும்போது காதலி கிணற்றடியில் வந்து நிற்பாள். மட்டைவேலியால் எட்டிப் பார்த்து சிரித்துவிட்டு, கை காட்டிவிட்டு, அதே மொழியிலான பதிலைப் பெற்றுக்கொண்டு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு 25 கிலோமீற்றர் சைக்கிலோட்டம். மட்டைவேலிக்கு மேலால் எட்டிப்பார்த்துக் கையை மட்டும் காட்டிவிட்டுச் செல்வதற்காக ஐம்பது கிலோமீற்றர் சைக்கிலோட்டம் வேர்க்க விறுவிறுக்கத் தேவைதானா, என்னவொரு விசர்த்தனம் என்று நாம் கேட்பதுதான் விசர்த்தனம் காதலில்.

ஐயா தனது காதலியைக் கடத்திக்கொண்டு செல்லவேண்டிய கட்டாயமொன்று வந்துவிட்டது. அந்தக் கிராமத்துக்குள் ஐயாவால் போக முடியாத சூழலும் வலுவாயிருந்தது. போவாரானால் மண்டாக்கம்புகள் புடைசூழ பிய்த்தெடுத்து விடுவார்கள். என்ன செய்வது?

ஐயாவின் கூட்டாளிகள். நாரந்தனை கொர்னலியஸ், கருகம்பனை கந்தையா, அல்லைப்பிட்டி தாஸன், கரையூர் பெரியதம்பி, திட்டி பேரின்பநாதன், உரும்பிராய் திருமேனி, கொட்டடி பெரியசெட்டி.

ஐயாவின் காதலியை தீவிலிருந்து எப்படிக் கடத்தி வருவது என்ற திட்டங்களையும் வியூகங்களையும் கரையூர்ப் பெரியதம்பி வீட்டிலிருந்து எட்டுப்பேரும் தீட்டிக்கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை பின்னேரப் பூசைக்கு கரம்பன் செபஸ்தியார் கோயிலுக்கு ஐயாவின் காதலியை வரச்சொல்வது. பூசை முடியப் பொழுது சரிந்துவிடும். அந்த மைம்மலுக்குள் அங்கிருந்து கந்தையா தனது சைக்கிளில் ஏற்றி ஊறாத்துறைக்குக் கொண்டு வருவது. கூடவே பாதுகாப்புக்காக இன்னொரு சைக்கிளில் கொர்னலியஸ். ஊறாத்துறையிலிருந்து அல்லைப்பிட்டிச் சந்திவரை கொர்னலியஸ் தனது சைக்கிளில் கொண்டு செல்வது. அல்லைப்பிட்டிச் சந்தியிலிருந்து கொட்டடிவரை தாஸன் தனது சைக்கிளில் ஏற்றிச் செல்வது. கொட்டடியிலிருந்து கந்தர்மடம்வரை பெரியசெட்டி தனது சைக்கிளிலும், பெரியதம்பியும் பேரின்ப நாதனும் ஒரு சைக்கிளில் பாதுகாப்புக்கும் செல்வது.

கந்தர்மடத்தடியில் ஐயாவும் திருமேனியும் பொறுப்பேற்று உரும்பிராய்வரை. திருமேனி வீடுதான் கடைசி விடந்தை. திட்டம் செகசோதியான வெற்றியைப் பெற்றது.

ஒருவாறாக இரு வீட்டாரும் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி கல்யாணத்தை முடித்து வைத்தார்கள். அம்மாவுக்கும் பெரியம்மாவுக்கும் சிலவேளை தனகல், கொழுவல் வரும்போது நான் அறிந்த காலம்வரை சொல்லியிருக்கிறா 'அடியோய் எட்டுப்பேரோட கிணாய்ச்சுக்கொண்டு ஓடிப்போன வேசதானேயடி நீ' என்று. இதைக் கேட்டால் அம்மாவுக்கும் ஐயாவுக்கும் அடக்கமுடியாத சிரிப்பு வரும். ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொள்வார்கள். அந்தச் சிரிப்புக்குள் மயிர்க்கூச்சறியும் அந்தக் காதல்க் காட்சிகள் சற்றுத் தலையை உயர்த்தி எட்டிப் பார்க்கும்.

படகை கரையே இழுத்து வைப்பதற்கான ஒத்தாசைகளை மார்ட்டீன் அண்டர்சனும், சில்வியா அண்டர்சனும் செய்தார்கள்.

'ஓ.... மக்ரல் முகத்துவாரத்திற்குள் வந்து விட்டதா...? ஒரு வாரம் பத்து நாட்களின் பின்புதான் உட்கடலுக்கு மக்ரல்மீன் வரும் என்று நினைத்திருந்தேன். ம்.... கடந்தசில நாட்களாக பலத்து வீசிய காற்று காரணமாக இருக்கலாம், அடி என் சிறிய அழகுகளே இந்த வருடத்துக்கான முதல் மக்ரலைப் பிடித்து விட்டீர்கள். வாழ்த்துக்கள் என் சின்னப் பெண்களே' மார்ட்டீன் அண்டர்சன் மூத்தவளையும் இளையவளையும் வாழ்த்தினார். பருவகால மீன்களான இந்த மக்ரல் மீனினம் கோடைகால ஆரம்பத்தில் அட்லாண்டிக் கரைகளை அண்டிய குடாக்கடலுக்குள் வரும், கோடை முடிவுறும் காலத்தில் வெளியேறிவிடும். இந்த ஸ்லின்னிங்கன் முகத்துவாரத்துக்குள் வருடாவருடம் உள்ளே அடிக்கும் முதல் மீனை யார் முதலில் பிடிப்பதென்ற போட்டி எனக்கும் மார்ட்டீன் அண்டர்சனுக்கும். போன வருடம் மார்டீன் அண்டர்சன்தான் முதல் மீனைப் பிடித்தார். அதற்கு முதல் வருடம் மூத்தவன். எதிர்பாரா விதமாக அறுபது கிலோவுக்குமேல் பிடித்து விட்டான். மார்ட்டீன் அண்டர்சனும் நானும் திகைத்துப் போனோம். ஏனெனில் இன்னமும் இரண்டுவார காலமாவது இருக்கிறது மக்ரல் குடாவுக்குள் வருவதற்கு என நாங்கள் போட்டு வைத்த கணக்குத் தவறி விட்டது.

எமக்குத் தேவையான பதினைந்து மீன்களை மட்டும் எடுத்துக்கொண்டு மீதியை அப்படியே மார்ட்டீன் அண்டர்ச க்குக் கொடுத்து விட்டு வந்துவிட்டோம். நேரம் மாலை ஆறு மணியைத் தொட்டிருந்தது. சூரியன் வெப்பம் குறையாமல் அடம் பிடித்துக்கொண்டு நின்றான். மீன்பொரியல் வேலைகள் அகோரமாக நடந்துகொண்டிருந்தன. பயணத்துக்கான ஆயத்தங்கள், பெட்டியடுக்குதல்கள்

ஒரு பக்கத்தில் நடந்துகொண்டிருந்தன. தொலைபேசியில் ஐயா. மூத்தவளும் இளையவளும் இன்று மீன்பிடியில் நடந்த அத்தனையும் ஒன்றுவிடாமல் ஐயாவுக்கு ஒப்புவித்துக்கொண்டிருந்தனர். 'தம்பி, பிள்ளயளப் பத்திரமாக் கூட்டிக்கொண்டு வந்து சேர் தம்பி' என என்னோடும் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருந்தார். ஐயாவின் குரலில் மிகுந்த உசார் பளிச்சிட்டது. கடந்த சில வருடங்களாக இவர்களைப் பார்க்காமல் தான் இறந்து போய்விடுவேனோ என்று மிகப் பயந்துபோயிருந்தார்.

நானும் எனது மூத்த தங்கையும் சின்னன்களாக இருந்தபோது ஐயா துரையப்பாவின் காரியதரிசியாக இருந்தார். அப்போ சம்பள உயர்வு கேட்டு ஒரு போராட்டம் நடந்தது. அதில் ஐயாவும் ஐயாவின் சில கூட்டாளிமாரும்தான் முன்னணியில் நின்று போராட்டத்தை நடாத்தினார்கள் என்பதற்காக ஐயாவோடு சேர்த்து ஆறுபேரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்துவிட்டார் துரையப்பா. ஒரு மாதத்தின்பின் தபாலட்டை போட்டு ஐயாவைக் கூப்பிட்டிருந்தார் துரையப்பா. இவர்கள் முன்வைத்த சம்பள உயர்வுக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும் பணியில் வந்து இணைந்துகொள்ளும்படியும் சொன்னார். 'நீங்கள் வாவெண்டால் வாறதுக்கும், போவெண்டால் போறதுக்கும் நானொண்டும் உங்கவீட்டு வாரக்குடி இல்ல சேர். எனக்கு என்ர கடலிருக்கு. அங்க நான்தான் ராசா, நான்தான் முதலாளி. உங்கட வேலய நீங்களே வச்சிருங்கோ குறை நினைக்காதேங்க சேர்' சொல்லிவிட்டு ஊருக்கு வந்தவர்தான். டேவிற் பெரியையாவைக் கொண்டு ஒரு தோணி செய்து இறக்கினார், ஒரு கூட்டம் களங்கண்டி போட்டார், எங்கள் கிராமத்தில் ஒரு கடையைத் திறந்தார். களங்கண்டியும் நன்றாக நடந்தது, கடையும் நன்றாக நடந்தது. கடை பற்றிய ஒரு சுவாரஸ்யம் சொல்லியே ஆகவேண்டும். ஊர்ச் சனங்களுக்கு நிறையக் கடன் கொடுத்து விட்டார். அன்றாடம்காய்ச்சி மீனவக் கிராமத்துச் சனங்களால் அவற்றைத் திருப்பித் தரமுடியாது என்பது ஐயாவுக்கு நன்றாகவே தெரியும். தவிரவும் கிராமத்தார் எல்லோருமே ஒவ்வொரு வகையில் இரத்த உறவினர்கள். ஒரு நாள் நான் படசாலை விட்டு வந்து கடையில் நின்றுகொண்டு ஐயாவை வீட்டுக்குச் சாப்பிடுவதற்காக அனுப்பினேன். சாப்பிட்டுவிட்டு மாலை மீண்டும் கடைக்கு வந்த ஐயா மேசை லாச்சியைத் திறந்தார் நிலுவைக் கணக்குப் புத்தகங்கள் மூன்றையும் எடுத்தார், கடை முற்றத்தில் போட்டார், மண்ணெண்ணைக் கரண்டியால் எண்ணையை நிரப்பி அவற்றின்மேல் ஊற்றினார், நெருப்புக் குச்சியத் தட்டி வாயிலிருந்த த்ரீறோசஸ் சிகரெட்டை மூட்டிவிட்டு கணக்குக் கொப்பிகளின்மேல் போட்டார். ஆட்டம் க்ளோஸ்.

ஐயாவின் கூட்டாளிகள். நாரந்தனை கொர்னலியஸ் மாமா, கருகம்பனை கந்தையா மாமா, அல்லைப்பிட்டி தாஸன் மாமா, கரையூர் பெரியதம்பி மாமா,

திட்டி பேரின்பநாதன் மாமா, உரும்பிராய் திருமேனி மாமா, கொட்டடி பெரியசெட்டி மாமா. வருடத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் எங்கள் வீட்டில் சந்தித்துக் கொள்வார்கள். அது ஒரு நத்தார்தினமாக இருக்கும், அல்லது எங்கள் கோயில் திருவிழாவாக இருக்கும். லயன்ஸ்லாகர் பியர்தான் எடுப்பார்கள். எட்டுப் போத்தல். இப்போ நினைத்தால் சிரிப்பாக வருகிறது. ஆளுக்கு ஒவ்வொரு போத்தல் பியரிலேயே உச்சிவானம் காலுக்கடியில் வீழ்ந்து கிடக்கும் அன்று இவர்களுக்கு.

இப்படித்தான் ஒரு நாள் தாஸன் மாமா ஐயாவைத் தேடி அவசர அவசரமாக வந்தார். தான் யாரோ சிலரோடு ஊரில் சண்டை எனவும் அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாகவும் தனக்கு ஆயுதங்கள் தேவை எனவும் ஐயாவிடம் சொன்னார். ஐயாவும் தனது வள்ளத்தில் இரண்டு மண்டாக்களை ஏற்றிக்கொண்டுபோய் அல்லைப்பிட்டியில் கொடுத்துவிட்டு வந்தார். அதிலிருந்து எதிர்ப்பார்டிக்காரர் தாஸன் மாமாவோடு கொழுவல் போடுவதில்லை. ஊரிலிருக்கும் எல்லா ஆதிக்க சாதியினரும் பார்த்து அச்சப்படும் ஒரு ஆயுதம். இரண்டு இரண்டரைப் பாகம் நீளமான மரக்கோலின் நுனியில் சூலம்போன்ற, ஆனால் சூலத்திற்கு இருப்பதுபோல் மூன்று முனைகள் அல்ல இரண்டு கூரிய முனைகள் மட்டுமே. இது கடல்தொழிலில் பறிக்கூடு கடலில் வைக்கவும் எடுக்கவும், திருக்கை, சுறா போன்ற பெரிய மீன்களை குத்திப் பிடிக்கவும், தோணியில் நின்றபடியே கடலட்டைகளைக் குத்தி எடுக்கவும் பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதம். எங்கள் ஊரில் அப்பப்போ சாதிக்கலவரம் வருவதுண்டு. அவர்களிடம் கமக்காவலுக்கென்று அனுமதி பெற்ற துவக்குகள் இருக்கும். ஆனாலும் எங்கள் கிராமத்தவரின் மண்டாவென்றால் அவர்களுக்கு பீச்சல் பயம். துவக்கையும் போட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். நான் சின்னனாயிருந்தபோது எனக்குத் தெரிய நடந்த ஒரு சாதிச் சண்டைக்கு ஐயாவின் ஏழு கூட்டாளிமாரும் கட்டுத்துவக்கு, நாட்டுவெடிகுண்டு, டைனமட், பாளைக்கத்தி, வாள், சுருள்வாள், திருக்கைவால் என நிறைய ஆயுதங்களோடு வந்து எங்கள் ஊர் எல்லையில் காவல் காத்திருக்கிறார்கள். என்னதான் ஆயுதங்கள் இருந்தாலும் மண்டாக் கம்புடன் எல்லைக் காவல் நின்றால்தான் ஊர்ச்சனங்களுக்கு தமது பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வரும்.

தாஸன் மாமாவுக்கு ஐயா மண்டாக்கள் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்த சில நாட்களில் திருமேனி மாமா வீட்டுக்கு வந்து ஐயாவோடு பெரிய வாய்த் தர்க்கம். ஏனென்றால் தாஸன் மாமாவோடு சண்டை போட்டது திருமேனி மாமாவின் சொந்தக்காரர்களாம். பின்பு இருவரும் சைக்கிள் எடுத்துக்கொண்டு தாஸன் மாமா வீட்டுக்குப் போனார்கள். ஏதோ பலகட்டப் பேச்சுவார்த்தைகள் முடிந்து திருமேனி மாமாவின் உறவினர்களும் தாஸன்

மாமாவும் சமாதானமானார்கள். அந்த வருடம் நாங்கள் எங்கள் தோணியில் துறைமுகத்திலிருந்து குடும்பமாக பாலைதீவு அந்தோனியார் கோயிலுக்குப் பயணமானோம். திருமேனி மாமாவும், பெரியையாவும் (ஐயாவின் அண்ணன் தான் சுக்கானி) எங்களோடு பாலைதீவுக்குப் பயணம் வந்தார்கள். போகும் வழியில் அல்லைப்பிட்டியில் தோணியை நிறுத்தி அங்கேயிருந்த அந்தோனியார் கோயிலில் மெழுகுதிரி கொழுத்திக் கும்பிட்டோம். கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த ஈச்சைமர ஓரத்தில் மூன்று கற்களை வைத்து அம்மா பொங்கல் காய்ச்சினார். ஊருக்குள் போன ஐயாவும், திருமேனி மாமாவும் தாஸன் மாமாவோடு திரும்பி வந்தார்கள். எங்கள் எல்லோரையும் தாஸன் மாமா தனது வீட்டுக்கு அழைத்தார். மாலையில் கொண்டல்காற்று வீசத் தொடங்கிவிடுமானால் குழந்தைகளோடு பாலைதீவுக்குச் சென்று சேர்வது கடினம், மீண்டும் வரும்போது கண்டிப்பாக வருவதாக வாக்குக் கொடுத்தார் ஐயா.

தாஸன் மாமாவோடு ஊருக்குள் போன பெரியையா கள்ளடித்துவிட்டு வந்திருந்தார். அப்புவுக்கு கெட்டகொதி வந்துவிட்டது. குழந்தைகுட்டிகளோடு வெறியோடுள்ள பெரியையாவையும் கொண்டு தொடர்ந்து கடலோடுவதை அப்பு விரும்பவில்லை. இங்கேயே அந்தோனியார் கோயிலிலேயே இரவைக் கழித்துவிட்டு விடிகாலையில் போகலாமென்ற திறவு அப்புவால் மிகத் தீர்மானமாக எடுக்கப்பட்டது. அம்மாவுக்கும் அது சரியென்றுபட்டது. தாஸன் மாமா வீட்டுக்கு அவரோடு ஐயாவும் நானும் போனோம். தாஸன் மாமா வீட்டின் கோடிப்புறத்தில் கிடுகுகளால் மறைத்து கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தன ஐயா கொடுத்த இரண்டு மண்டாக்களும். அன்றிரவு தாஸன் மாமா எங்களுடனேயே அந்தோனியார் கோயிலில் வந்து தங்கினார். அம்மா தயார் செய்துகொண்டுவந்த பயத்தம் அல்வா, பணியார வாளிகள் தோணியிலிருந்து இறக்கப்பட்டன. இரவிரவாக முபாரக் அலி நானாவும், அப்புவும், ஐயாவும் தாஸன் மாமாவும், திருமேனி மாமாவும், பெரியையாவும் பாடிக்கொண்டே இருந்தார்கள். பணியார வாளியில் திருமேனி மாமா மேளம் அடிக்க, கத்தி கரண்டி வைத்து தாஸன் மாமா தாளம் தட்ட, ஐயா பாடினார்.

நீண்ட நேரமாக பல கூத்துப் பாடல்களைப் பாடினார்கள். குதூகலித்தார்கள். இறுதியாக அப்பு தான் கட்டிய ஒரு பாடலைப் பாடினார். அது தங்களது இரத்தத்திலும், வியர்வையிலுமே உருவான அந்தச் செபஸ்தியார் கோயிலை சாதிச் சமரில் பலியிட்டதாக இருந்தது.

அப்பு பாடி முடித்ததும் மேளம் அடிப்பதை நிறுத்திவிட்டு திருமேனி மாமா சிறிது நேரம் யோசித்தார். அமைதி அந்தோனியார் கோயிலடி வெள்ளை மணலை மூடிக் கிடந்தது. ‘ஏன்ரா மச்சான், அந்தச் செபத்தியார் கோயில் உன்ர

அப்பன் பேரன் கட்டினதுதானேயடா, பிறகிட்டு ஏனடா வெள்ளாளருக்கு விட்டுக் குடுத்தனீங்கள்...?' அமைதியைக் கலைத்து திருமேனி மாமா ஐயாவைப் பார்த்துக் கேட்டார்.

'காத்தடி கடலடியில மரக்கல் பிடிச்சு, ரெத்தம் கொட்டி, குருவி சேர்க்கிறது மாதிரிச் சேத்து என்ர சனங்கள் கட்டின கோயில் மச்சான் அது. என்ர சனத்துக்கு நன்ம செய்யிறதெண்டு ஏமாத்தி வெள்ளாளப் பிசப்புகளும் கள்ளச் சுவாமி மாரும் சதி செய்துதான் அந்தக் கோயில வெள்ளாளருக்குச் சொந்தமாக்கினவங்கள். விடு மச்சான் அந்தக் கதய' அந்தக் கோயிலைப் பற்றிய கதைகள் வரும்போதெல்லாம் ஐயா கோபத்தின் உயரத்துக்கே போய்விடுவார். தொடர்ந்து கூத்துப் பாட்டுகளோடு அன்றைய சாமம் கடந்தது.

காலம் செல்லச் செல்ல ஐயாவுக்கும், ஐயாவின் ஏழு கூட்டாளிமாருக்குமான போக்குவரத்துகள் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தே போயின. யுத்தம் எண்பத்திமூன்றிலிருந்து ஐயாவின் கூட்டாளிமாரை ஒவ்வொருவராய்த் தின்னத் தொடங்கியது. எண்பது நடுப்பகுதியில் இயக்கத் தொடுசல்கள் கிடைத்து எண்பத்தியிரண்டு இறுதியில் மொத்தமாகவே வீட்டைவிட்டுப் போய்விட்டேன். அதன்பின் நீண்டகாலம் ஐயா அம்மாவை நான் பார்க்கவில்லை.

கொழும்பில் ஒரு புடவைக் கடையில் வேலை செய்து வந்த கந்தையா மாமாவின் மகன், மகள் இருவரையும் எண்பத்துமூன்று ஆடிக் கலவரத்தில் வெட்டிக் கொன்றுவிட்டார்கள். அந்த அதிர்ச்சி தாங்கமுடியாமல் கந்தையா மாமா நெஞ்சடைப்பால் இறந்து போனார் என்ற தகவலை நான் அறிந்தேன். அதே வருடம் இறுதியில் குருநகர் ராணுவமுகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்ட பேரின்பநாதன் மாமாவும் இன்னமும் வீடு திரும்பவில்லை. எப்போதும் திரும்பப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். 84தொடக்கத்தில் புலிகள் உரும்பிராய்க்குள் கூட்டம் வைக்கப் போன இடத்தில் அந்த ஒடுக்கப்பட்ட சனம் நிறையக் கேள்விகள் கேட்டு கூட்டம் வைக்க விடவில்லை என்ற கொதியில் உரும்பிராயை அண்டிய பலாலிவீதியில் கண்ணி வெடியைப் புதைத்துவைத்து வெடிக்கவைத்து ஓடி விட்டார்கள். வேகரம் கொண்ட ராணுவம் அன்று அந்தப் பகுதியை துவம்சம் செய்தது. கோண்டாவிலில் இருந்து உரும்பிராய் நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்த திருமேனி மாமாவை நெத்திமுட்டாக எதிர்கொண்ட ராணுவம் சுட்டுக் கொன்றது. அந்தத் தாக்குதல் உரும்பிராய்ச் சனத்துக்கு அழிவு வரவேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டதுதான். இந்த வடிவத்திலான தாக்குதல்கள் அவர்களுக்கு ஆதரவு தராத பல இடங்களில் நடந்தன. அதற்கான போர்த்தந்திர விளக்கங்களும் நியாயங்களும் பின்நாளில் அவர்களால் சொல்லப்பட்டது. ஐயாவின் கூட்டாளிமார் ஒவ்வொருவராய்க் குறைந்துகொண்டு போனார்கள். அல்லது

யுத்தம் அவர்களை வாழைக் குலையிலிருந்து ஒவ்வொரு பழமாகப் பிடுங்கிப் போட்டதுபோல் பிய்த்தெறிந்துகொண்டிருந்தது.

முன்பெல்லாம் ஐயாவின் கூட்டாளிமார் எங்கள் வீட்டில் கூடும் காலங்களில் கந்தையா மாமாவுக்கும், பெரியசெட்டி மாமாவுக்குமிடையில் ஒரு செல்லச் சண்டை நடக்கும். அதுவும் என் பொருட்டு. கந்தையா மாமா தனது மகள் சாந்திக்கு என்னைக் கட்டி வைப்பதாகவும், பெரியசெட்டி மாமா தனது மகள் மேகலாவுக்குக் கட்டி வைப்பதாகவும் போட்டி போட்டுக் கொள்வார்கள். அதேபோல் எனது தங்கையின் பொருட்டு, அவளை யார் வீட்டு மருமகளாக்குவது என்பதில் பெரியதம்பி மாமாவுக்கும், பேரின்பநாதன் மாமாவுக்குமிடையில் சண்டை நடக்கும்.

இந்தியன் அமைதிப்படை யாழில் நிலைகொண்டிருந்த காலம். தீவுப்பகுதிக்குள் புகுந்த அமைதிப்படை புளியங்கூடலில் பனையிலிருந்து கள்ளுச் சீவிக்கொண்டிருந்த கொர்னலியஸ் மாமாவை அப்படியே வைத்துச் சுட்டது. அசோகா ஹோட்டலுக்குக் குண்டெறிய வந்தவர்கள் தப்பிப்போக தனது படகைக் கொடுத்து உதவினார் என்ற குற்றம் சுமத்தி பெரியதம்பி மாமாவை ஈபிஆரெலெவ் தூக்கிக்கொண்டுபோய் பட்டப்பகலில் சுட்டது. மரக்கறி வியாபாரம் செய்துவந்த பெரியசெட்டி மாமாவின் சி.90 சைக்கிளை வரதனின் ஆட்கள் எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். அதைக் கேட்டு வாங்குவதற்காக அசோகா ஹோட்டலுக்கு நாயாய்ப் பேயாய் அலைந்தார் பெரியசெட்டி மாமா. இதைத் தீர விசாரிக்காமல் வரதனின் கூலிப்படை என்று சொல்லி கொட்டடியில் வைத்து சுட்டார்கள் புலிகள். ஐயாவின் கூட்டாளிகள் மிகக்குறுகிய காலத்துக்குள் தொலைந்து போனார்கள். தாஸன் மாமா குடும்பம் எங்கே இருக்கிறது, இருக்கிறார்களா இல்லையா என்பதெல்லாம் ஐயாவுக்குத் தெரியாது. நீண்ட காலம் தொடர்புகள் அற்று இருந்ததால் எங்கே யாரிடம் விசாரிப்பதென்பதும் தெரியாது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடியலையும் சீவியம் துரத்திக்கொண்டே இருந்தது.

மூத்தவளும் இளையவளுமாக பொரிச்சமீன் துண்டுகளை மெழுகுப் பையில் போட்டுக் கட்டினார்கள். இரண்டு லீட்டர் ஐஸ்கிறீம் அடைத்துவரும் பிளாஸ்டிக் பெட்டியில் வைத்து பக்குவமாக மூடிக் கொண்டார்கள். பின் அதனையொரு மெழுகு பையிலிட்டுக் கட்டிக் கொண்டார்கள். யாருடைய பயணப் பெட்டிக்குள் அதை வைப்பதென்ற சண்டை அரைமணி நேரமாக நடந்தது. இளையவளின் பெட்டியில் வைப்பதான தீர்மானத்தை இறுதி முடிவாகத் தாங்களே எடுத்துக் கொண்டார்கள். ஐயாவின் செயற்கைக் காலுக்கான காலுறைகளை மூத்தவளின் பெட்டியில் வைத்துக் கொண்டு வருவதாகவும் தீர்மானமானது.

ஐயாவுக்கும் அம்மாவுக்கும் தலைகால் புரியாத மகிழ்ச்சி. பேரனையும், பேத்திமார் இருவரையும் தனது இறகுக்குள்ளேயே வைத்திருந்தார் ஐயா. பொரிச்சமீன் துண்டுகளை சுவைத்துச் சாப்பிட்டார். சாப்பிடும்போது கண்கள் கலங்கினார். அழுதழுது சாப்பிட்டார் பொரிச்சமீன் துண்டுகளை. 'கும்ப்ளா மீன்' என்றார். 'இல்லை அப்பப்பா, இது மக்ரல்' என்றாள் இளைவள். 'அடி போடி மடைச்சி, எனக்கே மீன்வக சொல்லித்தாறியா, இது கும்ப்ளா' ஐயா பிடிவாதமாக நின்றார். 'அப்பப்பா, இது மக்ரல் அப்பப்பா' மூத்தவளும் வாதாடினாள். 'பேந்தும் பாரடா ரெண்டு பொடிச்சியளயும்.... இது கும்ப்ளா. சொன்னாக் கேளுங்கடி' மூத்தவளும் இளையவளும் ஆளையாள் பார்த்து முழிசியடித்தார்கள். இடையில் நான் தலையிட்டேன் 'ஐயா, இது கும்ப்ளா இனம்தான், அண்ணன் தம்பி. ஆனால் கும்ப்ளாவைவிட இது மூணு நாலு மடங்கு பெரிசா வளரும்' எனச் சொல்லிவிட்டு எனது மடிக்கணனியை எடுத்து போன வருடம் மூத்தவனும் மூத்தவளும் மக்ரல்மீன் பிடித்த வீடியோவைக் காட்டினேன். 'ஓமடா தம்பி, இது பெரிசா உருண்டையாத்தான் இருக்கு' என ஏற்றுக் கொண்டார். இப்போ மூத்தவளும் இளையவளும் ஐயாவைக் கிண்டல் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

கானத்தூர் கடற்கரைக்குக் கூட்டிச் சென்றார். மூவரோடும் சேர்ந்து ஐயாவும் ஒற்றைக் காலால் நீச்சலடித்தார். ஐயா ஒற்றைக் காலால் நீச்சலடிப்பதைப் பார்த்து மூத்தவளும் இளையவளும் அதிசயித்தனர்.

தமிழகத்தில் எங்கெங்கு சென்று வருவதென்ற ஒரு முன்னேற்பாட்டோடுதான் இங்கிருந்து புறப்பட்டோம். ஆனால் அத்தனை திட்டங்களையும் ஐயா குலைத்துப் போட்டார். அவரொரு சுற்றுலாத் திட்டத்தை வைத்திருந்தார். எங்களால் எதிர்த்து எதுவும் சொல்ல முடியவில்லை. அன்னை வேளாங்கண்ணி கோயில், வில்லியனூர் மாதாங்கோயில், பூண்டி மாதாங்கோயில், அந்த அந்தோனியார் கோயில், இந்த சவேரியார் கோயில் என எல்லாமே யாத்திரிகப் பயணத் திட்டமாயிருந்தது. தட்ட முடியவில்லை. ஆனால் ஆங்காங்கே தங்கி நிற்கும் நாட்களைக் குறைத்தோம்.

ஐயாவையும் அம்மாவையும் அழைத்துக்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் ஐயா போட்டு வைத்த சுற்றுப் பயணங்களை முடித்துக்கொண்டோம். மீண்டும் கானத்தூர் திரும்பியதும் அந்தச் செய்தி கிடைத்தது. எனது நண்பனும் எழுத்தாள மான சக்திகாளியனின் தந்தை சென்னையில் இறந்து விட்டார் என்றும், அவரது இறுதி விடையங்கள் செய்ய அவன் வந்து நிற்கிறான் என்றும். தேடிப்பிடித்து அவனோடு தொடர்பு கொண்டபோது தகவல் தந்தான் நாளை பிரேத அடக்கம் என்று. மறுநாள் அடக்க நிகழ்வுக்கு நானும் மூத்தவனுமாகப் போய் வந்தோம்.

*நான்கு நாட்களுக்குப்பின் நாம் தங்கியிருந்த ஐயாவின் வீட்டுக்கு கானத்தூரில் வந்து சந்திப்பதாகச் சொல்லி சக்திகாளி விடை தந்தனுப்பினான்.*

*ஐயா கூழ் காய்ச்சி முடிந்திருந்தது. ஒடியற்கூழ் காய்ச்சுவதில் ஐயா வலும் விண்ணன். அவரது கைப்பக்குவம் அம்மாவுக்கும் வராது. அம்மா திறமான சமையற்காரி என்றாலும் ஒடியற்கூழ் காய்ச்சுவதில் ஐயாவை அடிக்க முடியாது. சக்திகாளியும் வந்துவிட்டான். இருவரும் ஆளுக்கொரு போத்தல் பியரைக் குடித்து முடித்தோம். அரைஅண்டா கூழையும் காலி செய்தோம்.*

*கோடிப்புறத்து வேப்பமர நிழலில் அமர்ந்திருந்து ஐயாவும் சக்திகாளியும் பேசிக்கொண்டிருந்தனர். நீண்ட நேரம். ஐயா தான் வாசித்த சக்திகாளியின் கதைகளைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்.*

*நான் இளையவளோடு எட்டுக்கோடு கீறி விளையாடிக்கொண்டு நின்றேன். சடாரெனத் திரும்பிப் பார்க்கையில் வேப்பமரத்தின்கீழ் சக்திகாளி மட்டும் தலையைக் குனிந்தபடி இருந்தான். ஐயாவைக் காணவில்லை. வீட்டின் மறுபக்கம் ஓடிச் சென்று பார்த்தேன். தென்னை மரத்தோடு தலையை மோதியபடி வீச்சுவாங்கலோடு பெருங்குரலில் அழுது கொண்டு நின்றார். கைத்தாங்கலாக ஐயாவைக் கூட்டிவந்து வீட்டுக்குள் உட்காரவைத்துவிட்டு, சக்திகாளியிடம் ஓடிச் சென்று என்ன நடந்தது என்று கேட்டேன்.*

*‘சந்தோசமாப் பலதும் பத்துமெண்டு கதைச்சுக் கொண்டிருந்தவரடாப்பா, இடையில என்ர ஊர் எதெண்டு கேட்டேர், சொன்னன். அங்க தாஸனைத் தெரியுமோ எண்டு கேட்டேர். எந்தத் தாஸன் எண்டு கேட்டன், மண்டா தாஸன் எண்டு சொல்லுவாங்கள்.அவர்தான் எண்டேர். அவர்தான் என்ர ஐயா, இப்ப செத்துப்போனவர் எண்டு சொன்னன். கொஞ்ச நேரம் ஒண்டும் பறயாமல் இருந்தேர். ஓத்துறுச் சண்டைக்கு என்ர கூட்டாளிமாரெல்லாம் பலி போட்டாங்கள், நாங்க ஒண்டர மனிசர் மட்டுந்தானே மிஞ்சியிருந்தம் எண்டு சொல்லிக்கொண்டு எழும்பி போயிட்டேர்’ என்றான் சக்திகாளி.*

*தாஸன் மாமாவின் சாவு வீட்டுக்கா போய்வந்தோம்? ஐயாவின் ஏழாவது கூட்டாளியும் இல்லாமல் ஆகி விட்டார். இது யாரின் கதையுமல்ல, போரின் கதை!*

★★★★★

**(குவர்னிகா 41வது இலக்கியச்சந்திப்பு மலர்)**

# எட்டாம் பிரசங்கம்

**‘ஆறுகள் பெருக்கெடுத்து நீர்கொள்ளாப் பெருங்கடல் கொந்தளித்ததுபோல, தேவதைகளின் துக்க சமுத்திரம் மட்டில்லாததாய்ப் போயிற்றே’**

*-1-*

கோடைத் தூக்கத்தின் குட்டியலைகளின் மெல்லிய சிணுங்கல் இசையின் பின்னணியில் தேவதைகளும், துறவிகளும் நிறைந்திருந்த இரவு முடிந்து, விடிந்து காலை நான்கு மணியாகியிருந்தது. பெப்பேனியன் அம்மான் செத்துப்போன எட்டாம் நாளினதும், முபாரக் அலி நானா மவுத்தான இருபத்தியோராம் நாளினதும், அனலைதீவு லோஞ்சிக்கார விநாயகமூர்த்தியர் மாரடைப்பால் இறந்துபோன ஒரு வருட நிறைவு நாளினதும் காலை இது.

கடந்த பல காலங்கள்போல் மல்லுக்கட்டும் கனவுகளும், அவற்றின் துரத்துதல்களில் சிக்குண்டு காலோடு கால் பின்னி, ஓரடிகூட எடுத்துவைத்து ஓடமுடியாமல் படுக்கையில் அவதிப்பட்ட நிலையெல்லாம் விடுபட்ட இரவுகள்தான் இப்போதெல்லாம். ஆனாலும் அதெற்கெல்லாம் மாறாகவும் ஈடாகவும் தேவதைகளாலும், இளம், கிழத் துறவிகளாலும் இட்டு நிரப்பப் பட்டுக் கொண்டிருந்தன அவனுடைய கனவுகள். கனவின் காட்சிகளை காண்பதற்கு கட்புலன் அவசிய மற்றதுதாயிருப்பினும், கனவில் வாசனைகளை முகர்ந்துகொள்ள முடிகிறதாக நம்பி வருகிறான். வரண்ட நிலத்தின் புழுதி மணமும், பிரண்டைக் கொடிகள் படர்ந்த தெருக்களில் கரட்டி ஓணான் புற்றுகளுக்குள்ளிருந்து புறப்படும் விரியன் பாம்புகளின் கொட்டாவி மணமும், ஊருக்குள்ளேயே வேர் கொண்டெழுந்த காட்டுமல்லிகையின் மென்மணமும், தெற்குக் கடற்கரையில் கரையொதுங்கிய சாதாளை, வாட்டாளைகளின் அழுகிய மணமும், கரையோர முள்ளிக்கொடி, இசங்குச்செடி, கிளாச்சி, கண்ணா, குண்டுமணி, வீளி, வீச்சுளாத்தி, புங்கை மரங்களின் வாசனைகளும் உடலுக்குள் பலநூறு முட்களால் குத்தும். வலிக்கும். போதாக்குறைக்கு

அமைதியை விதைக்கவென்று கங்கணங் கட்டிக்கொண்டு வந்தவர்கள் விதைத்துவிட்டுப்போன நச்சுக் கொடிசெடி மரங்களின் பயமுறுத்தல்கள்.

முருகைக் கற்களைப் புரட்டி அதன் பள்ளத்தில் குறுனிக் கற்களை இட்டு நிரப்பி, நொந்துவிடாமல் முட்டைகளை வைத்துக் காத்திருக்கும் ஆக்காட்டிகளின் கீச்சுக் குரல்களும், கப்பல் காத்த கன்னிமாதா கோயிலின் அறுந்து வீழ்ந்து மல்லாந்து கிடக்கும் மணியும், உடைந்து சிதறுண்டு நிலத்தில் விதைந்துகிடக்கும் முகப்பும், ஆவென்றபடிக்குத் திறந்து கிடக்கும் வெற்றுச் சற்பிரசாதக்கூடும், கிழிந்து காற்றில் படபடக்கும் மாதாவின் வானவண்ணக் கொடியும், ஆக்கிரமிப்பான்கள் வந்து கொட்டிவிட்டுப்போன இனந்தெரியா முள்மரப் பறுகுகளும் ஏழு வாள்கள் கொண்டு நெஞ்சை ஊடுருவும்.
பெப்பேனியன் அம்மான் செத்துப்போன எட்டாம் நாளினதும், முபாரக் அலி நானா மவுத்தான இருபத்தியோராம் நாளினதும், அனலைதீவு லோஞ்சிக்கார விநாயகமூர்த்தியர் மாரடைப்பால் இறந்துபோன ஒரு வருட நிறைவு நாளினதும் காலை இது.

காப்டன் லிங்கேஸ் தெரு ஒன்பதாம் இலக்கம், ஆறாயிரத்தியாறு-ஓலசுண்ட். விடியற்புறம் நான்கு மணிதான் ஆனாலும் லூர்த்துராசன் எழுவதற்கு மூன்றுமணி நேரத்துக்கு முன்பே தூக்கம் தொலைத்த வடதுருவத்து கோடைச்சூரியன் மேய்ச்சல்த்தறைக்கு வந்து விட்டான். கத்தரிக்கப்பட்டு அக்கினியில் எறியப்படாத பின்காணிக் காட்டுச் செடிகளின் பூக்களில் கிணுகிணுத்த மென்குரலில் பேச்சுவார்த்தைப் பட்டுக்கொண்டு, தேன்முட்டைகளைக் கொத்தித் தின்றபடி, தாவித் தாவி சிறகடித்துத் திரிந்தன வண்ணம் வடிவமான சிறுகுருவிகள். அவைகளின் அள்ளி மாளாக் காட்சிகளின் அருமையை திறந்த சாளர இடுக்கினூடாக வெட்டி மூடாத விழிகள் கொண்டு லூர்த்துராசன் பருகிக் கொண்டு நின்றான். கனவின் முட்களால் குத்தப்பட்டு ஏற்பட்ட வலி மெல்ல மெல்லக் குறைவதையும் அவன் உணர்ந்தான்.

கனவுகளுக்குள் தொலைந்துபோன தேவதைகளின் ஓர் தொடர்ச்சியாகவே இந்தக் சிறு குருவிகளின் காட்சிகள் அவனுக்கு இருந்தன. தேவதைகளின் பொருட்டு மனதுக்குள் எவ்வளவு இதம் உள்ளதோ அதைவிட அதிகமாய் இளம், கிழத் துறவிகளின் பொருட்டான வெறுப்பும் அவனிடமிருந்தது. அவர்கள் தம்பொருட்டு நியாய அநியாயங்களையெல்லாம் ஆடி முடித்துவிட்டு துறவு அரிதாரத்தைப் பூசிக்கொண்டாலும், தேவதைகள் மட்டில் என்றும் அநியாயக் காரர்களாகவே இருந்தார்கள் என்பதில் மிகத் திண்ணமாயிருந்தான்.

துறவிகள். அவர்கள் எல்லா நகரங்களையும், எல்லா ஊர்களையும், எல்லாக் கிராமங்களையும், எல்லா கரையோரங்களையும் ஆக்கிரமித்திருந்தார்கள்.

அவர்களின் பொருட்டு தேவதைகள் என்றென்றைக்கும் அச்சம் நிறைந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால் லூர்த்துராசனின் கனவுகளில் எப்போதும் தேவதைகள் தமது துயரங்களை வெளிப்படுத்தியது கிடையாது. தேன் முட்டைகளைக் கொத்தித் தின்னும் குருவிகளைப்போல் மகிழ்வுற்றிருந்தார்கள். அவர்களின் வருகைக்காக லூர்த்துராசன் காத்துக் கிடப்பதைப் போலவே, அவர்களும் தன்னிடம் வருவதற்கான கணங்களை அதிகளவில் விரும்புபவர்களாகவே அவன் நம்பினான்.

ஒவ்வொரு தேவதைகளையும் லூர்த்துராசன் அடையாளம் காணும்படிக்காய் இருந்தது. துறவிகளின் வருகையை அவன் விரும்பாதபோதும் வலுக் கட்டாயமாக அவனது கனவில் அவர்களும் வந்து போனார்கள். அவர்களின் வருகையைத் தடை செய்வதற்கான எந்தவித திராணியுமற்றிருந்தான். அவனை அவனே தீர்மானித்துக்கொள்ளும் சுய உரிமங்களுக்கும் அதிகாரங்களுக்கும் சற்றுத் தள்ளியே வைத்திருந்தார்கள் துறவிகள். .

இரண்டு சிறங்கை குத்தரிசியை அள்ளி குருவிகளுக்காக விசிறிவிட்டு, தேனீர் தயாரிப்பதற்காக கேத்தலில் தண்ணீரை எடுத்து அடுப்பில் ஏற்றினான். தூண்டில்த் தடிகளை எடுத்து ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது வாயிற்கதவு தட்டப்படும் சத்தம்.

இந்த வீட்டுக்குக் குடிவந்து பன்னிரண்டு வருடங்கள். குடிவந்த அன்று வாசல் நிலையின் உட்பக்கத்தில் ஒரு எட்டுக்கால் பூச்சி. லூர்த்துராசனின் ஐந்தே வயதான இளையவள் அதனைக் கண்டுவிட்டு கீச்சிட்டுக் கத்தினாள். அடித்துக் கொல்லும்படிக்கு தகப்பனிடம் உத்தரவிட்டாள். அந்த அவசரத்துக்குக் அவனது கையில் எதுவும் கிடைக்கவில்லை. கதவு மூலையில் சாத்தப்பட்டிருந்த செடிகள் கவ்வாத்துச் செய்யும் மாண்டான் கத்திரியை எடுத்து அந்த எட்டுக்கால் பூச்சியை ஓங்கி அடித்தான். பூச்சி எங்கோ பாய்ந்து தலைமறைவாகி விட்டது. ஆனால் கதவு நிலையோடு ஒட்டியபடி இருந்த அழைப்புமணியின் மின்கயிற்றின் இணைப்பு அறுந்து துண்டானது. அன்றிலிருந்து இன்றுவரை அழைப்புமணி பாவனையில் இல்லை. அதைத் திருத்தும் முயற்சியையும் லூர்த்துராசன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இவனது வாசல்வரை தேடி வருவோரின் எண்ணிக்கைகளும், தேவைகளும் மிக மிகக் குறைவாயிருந்ததும் அதற்கொரு காரணம். இரண்டாம் தடவையும் வாசற்கதவு தட்டப்படும் சத்தம். இந்த நேரத்தில ஆரடா என்று யோசித்தபடி தூண்டிற்கம்பை ஒரு ஓரத்தில் வைத்துவிட்டுச் சென்று கதவைத் திறந்தான். திறந்தால், அப்பு. அவனது அப்பு. அருளப்பன் பிலிப்பன். லூர்த்துராசனின் தாயின் தகப்பன். அவர் தனியாக வரவில்லை. கூடவே பவுல் ப்ரூனோவும் வந்திருந்தான்.

அப்பு. லூர்த்து ராசனின் அப்பு நீண்ட காலத்தின் பின் இவனைத் தேடி வந்திருந்தார். அதே மட்டக்களப்பு சாரமும், தோளில் அதே துவாய்த்துண்டும், கையில் அதே காட்டுமல்லிகைத் தடியும், கழுத்தில் கறுப்புக்கயிற்றில் சூசையப்பர் பரவணிக்கமுமாய் முகம் நிறையச் சோகத்தை அப்பிக் கொண்டவராய் நின்றிருந்தார். பவுல் புரூனோவும் அதே இளமையுடனும் மிடுக்குடனும். திகைத்து நின்றவனுக்கு பவுல் புரூனோவின் வழக்கம்போலான அதே அழகான, அளவான முத்தம்.

நீண்டகாலப் பிரிவின்பின் சந்திக்கிறோமல்லவா சற்றுக் கூடுதலான முத்தங்களைப் பரிமாறலாமே என்ற எந்தவித சம்பிரதாயங்களுக்கும் இடங்கொடாதவன் பவுல் ப்ரூனோ. லூர்துராசனை எட்டிக் கொஞ்சிய பவுல் ப்ரூனோ எந்தக் கேள்வி நியாயமுமின்றி வீட்டுக்குள் நுழைந்து ஷோபாவில் ஏறி அமர்ந்து கொண்டான்.

'உள்ள வாண அப்பு' என்று அப்புவை அழைத்தான் லூர்த்துராசன். காட்டுமல்லிகைத் தடியை மூலையில் சாத்தி வைத்துவிட்டு அவனை இறுகக் கட்டித்தழுவி முகம், கழுத்து என மாறிமாறிக் கொஞ்சினார். குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதார். 97ம் ஆண்டும் ஒருதடவை இவனிடம் வந்திருந்தார். அப்போது பவுல் ப்ரூனோ வரவில்லை. தனியாகத்தான் வந்தார். ஆனால் முகம் நிறைய மலர்ச்சியோடும், இன்பக் களிப்போடும் இருந்தார். ஆனால் இன்று அந்த சோக்கான வருகைக்கு நேரெதிர் மாறாகக் காணப்பட்டார். பெப்பேனியன் அம்மானின் சாவை அறிந்து, இருக்கப் பொறுக்காமல் புறப்பட்டு வந்து விட்டார்போலும் என நினைத்துக் கொண்டான் லூர்த்துராசன்.

உள்ளே அழைத்து இருக்க வைத்துவிட்டு, அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த நீரில் தேயிலையைப் போட்டு இரு கோப்பைகளில் தேனீரைத் தயாரித்து அவருக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டு அருகில் அமர்ந்து கொண்டான். பவுல் ப்ரூனோ தேனீர் குடிக்கமாட்டான். எப்போவாவது இவனுக்காக ஆச்சி பால் காய்ச்சிக் கொடுப்பா. அவ்வளவுதான். நீண்ட நேரம் அப்பு எதுவும் பேசவில்லை. ஷோபாவில் அமர்ந்திருந்தபடிக்கு சுவரையே வெறித்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இடையிடையே லூர்துராசனையும் பார்த்தார். கண்களில் நீர் முட்டி நின்றது.

'என்ன அப்பிடி அவசரம் மொக்குப்புள்ள பெப்பேனியனுக்கு? காக்காவின்ர நிலவரமும் இப்பிடியா போகவேணும்? இருக்கப் பொறுக்காமல்தான் விநாயக மூத்தியரும் அப்பவே போயிட்டாரோ?' அப்புவின் ஆரம்ப வார்த்தைகள் கேள்விகளாகக் குதித்தபோது அவரது கண்களின் நீர் இருபக்க நரைத்த மீசைத் தலைப்புக்களையும் நனைத்தது. அவரது இந்தக் கேள்விக்கு லூர்த்துராசனிடம் இருக்கவேயில்லை எந்தப் பதிலும். 'தேத்தண்ணியக் குடியணை பிறகிட்டு

ஆறுதலாக் கதைப்பம்' என்றான். இன்று பெப்பேனியன் அம்மானின் எட்டுச்செலவு வீட்டுக்குக்கூடப் போகாமல் இங்கே வந்திருக்கிறாரென்றால் நிறையப் பாரச்சுமைகளை மனம் நிறைய, மடி நிறைய அள்ளிக் கட்டிக்கொண்டுதான் வந்திருக்கிறார் என்பது லூர்துராசனுக்குத் தெரியும்.

அப்பு இரண்டு கண்களாலும் வழிந்த நீரை இரு கைகளாலும் துடைத்துவிட்டு தேனீர்க்கோப்பையை எடுத்து ஒரு மிடறு குடித்துவிட்டு அவனைப் பார்த்துக் கேட்டார் 'அதுசரி மோனே இந்த வெள்ளண எழும்பியிருக்கிறியே நான் வருவனெண்டு தெரியுமோ, அல்லாட்டி எங்கயாவது வெளிக்கிடுறியோ...?'
'இல்லயண அப்பு, அஞ்சுமணிக்கு கடல் நுகைப்பு, கறிக்கு ஏதாவது பிடிக்கலாமெண்டு வெளிக்கிட்டனான்' என்றான்.
'இங்க வந்தும் நீ இந்தக் கடலோட உலயிறத விடயில்லயா' லூர்த்துராசனைப் பார்த்து சிறு சிரிப்போடு கேட்டார் அப்பு. அந்தச் சிரிப்பில் அவர் துடைத்தது போக இரு கன்னங்களிலும் மீதமிருந்த கண்ணீர் காய்ந்துபோனது. அப்புவுக்கு நன்றாகவே தெரியும் கடலையும், அலைகளையும் லூர்த்துராசனால் விடமுடியாதென்பது. ஏனென்றால் அதிகமாய் அப்பு போராடியது இவனோடும், கடலோடும்தான். கடல்வேட்டையின் பக்குவங்களையும், நுணுக்கங்களையும், திறவுகளையும், கடல்வானத்து காலநிலைக் கணிப்பு, சமுத்திர சாஸ்த்திரங்களையும் லூர்த்துராசனுக்குச் சொல்லிக் கொடுத்தது அப்புதான். நட்சத்திரங்களைக் கொண்டு திசைகளையும், அவை தோன்றும் கணத்தை வைத்து நேரம் என்ன என்பதைச் சொல்லிக் கொடுத்ததும் அப்புதான். மாலைவெள்ளி, கப்பல்வெள்ளி, மூவிராசாக்கள்வெள்ளி, ஆறாம்மீன்கூட்டம், செட்டியைக் கொன்ற வெள்ளி, விடிவெள்ளி என வெள்ளிகளின் பெயர்களையும் சொல்லிக் கொடுத்ததும் அப்புதான். ஏழு தீவுக் கூட்டங்களின் யாருமே போய்வராத இண்டு இடுக்குகளிலும், பொந்து பொட்டுகளிலும் புகுந்து வேட்டையாடி வங்கு நிறைந்த பிலால்களுடன் கரை மீளும் வித்தைகளை லூர்த்துராசனுக்கு மாசறக் கற்றுக் கொடுத்ததும் அப்புதான். சில சமயங்களில் சுடுகீளிகூட இல்லாமல் அத்தனை தோணிகளும் துறை திரும்பியபோதும் நம்பிக்கையோடு காத்திருப்பார்கள் கரையில் அருளப்பனின் தோணியில் நிச்சயம் மீன் வரும் என்று. அந்தக் காத்திருப்புக்கள் ஒருபோதும் பொய்த்துப் போனதுமில்லை.

அப்பு பிலிப்பன் அருளப்பன். அவரொரு சூசையப்பர் பக்தன். கப்பல் காத்த கன்னிமாதா ஆலயத்தில் உரித்துடையவராய் இருந்தபோதும்கூட சூசை மீதே அதிகம் பற்றுள்ளவராய் இருந்தார். ஒருதடவை பின்னிரா நிலவு மாரியில் ஈச்சாமுனைப் பள்ளத்தாக்கில் செக்கல்ப்பாடு வழிவலையைக் கடலில் இறக்கிவிட்டு லூர்த்துராசன் இதுபற்றி அப்புவைக் கேட்டபோது அணியத்தில் அமர்ந்திருந்தபடி புகையிலைச்சுருட்டில் இரண்டு இழுவை இழுத்து ஊதிவிட்டு

சிரித்தபடியே 'அதடா மோனே, யேசுநாதர் மீன்பிடிகரன தொழில் துறய விட்டுப்போட்டு வாங்கோடா என்னோட எண்டு கூட்டிக்கொண்டு போனவர், ஆனால் சூசை அப்பிடியில்ல, தன்ர தச்சுத் தொழில கடசிவரைக்கும் செய்து, மீன் பிடிகாரருக்குத் தோணியள் செய்து குடுத்து மாதாவயும் பாலனயும் காமேந்து செய்தவர்' என்றார். 'இந்த மனிசனுக்கு விசர்' என்று அப்போது தனக்குள் நினைத்ததுக்கொண்டான் லூர்த்துராசன்.

அப்பு நன்றாகப் பாட்டுகளும் கட்டுவார். 'சற்பிரசாதத்தின் அப்பமே, திவ்விய அப்பமே' என்று யேசுமீது ஒரேயொரு பாடல் கட்டியுள்ளார். ஆனால் சூசைமீது நிறையப் பாடல்கள் கட்டியுள்ளார். வைகாசி முதலாம் திகதி அப்புவின் துறைமுகத்திலிருக்கும் சிறிய சூசையப்பர் கட்டிடத்தில் திருவிழாவும், சுரூபச் சுற்றுப்பிரகாரமும் நடக்கும். அது கோயிலல்ல, ஒரேயொரு நாள் தொழிலாளர் பெருநாள் மட்டும் நடைபெறும் ஒரு சிறிய கட்டிடம். ரைக்டரில் தோணி ஒன்றை ஏற்றி, அலங்காரங்கள் செய்து அதில் சூசையப்பர் சொரூபத்தை ஏற்றி ஊரைச் சுற்றி சுற்றுப்பிரகாரம் நடைபெறும். இறுதியாக இந்தத் துறைமுகத்திலிருக்கும் இந்தக் கட்டிடத்தில் வந்து முடிந்து ஆராதனையும், சூசையப்பர் ஆசீர்வாதமும், தொழில் துறைகளை ஆசிநீர் தெளித்து இரட்சிப்பும் நடக்கும். இந்த தினத்தில் அப்பு ஐந்து பாடல்களையாவது பாடுவார். ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய பாடல் கட்டிப் பாடுவார். ஒவ்வொரு முறையும் இந்தச் சுற்றுப் பிரகாரத்துக்காக பெப்பேனியன் அம்மானின் நாகூரான் என்ற தோணிதான் தேர்வு செய்யப்படும். ஏனென்றால் துறையிலுள்ள தோணிகளுள் பெப்பேனியன் அம்மானின் தோணிதான் பெரியதும், எடுப்பான ஏராவும், சுருள்க்கொம்பு கொண்ட அணியமும் உள்ள தோணி. இந்தப்பக்கம் புத்தளம் பளுக்காத்துறை, முத்துச்சிலாபம், முத்தரிப்புத்துறை தொடக்கம், அந்தப்பக்கம் தனுஷ்கோடி, ராமேஸ்வரம், தூத்துக்குடி, நாகை, நாகூர் வரைக்கும் கரை தொட்டுவந்த தோணி. சரக்கு வத்தை போன்ற பெரிய வள்ளம். ஒருமுறை புயலில் அகப்பட்டு நாகூர் கரையொதுங்கித் தப்பி வந்ததால் நாகூரான் என்ற செல்லப் பெயரையும் அந்தத் தோணி பெற்றிருந்தது அந்தக் கரையோரக் கிராமத்துச் சனத்திடமிருந்து.

'மனிசிக்காரியும் பிள்ளயளும் எங்க ராசா நித்திரயா?' வலும் ஆர்வமாகக் கேட்டார் லூர்த்துராசனிடம்.
'இல்லயணயப்பு, நேற்றுத்தான் நாலு பிள்ளயளயும் கூட்டிக்கொண்டு இந்தியா போயிட்டாள், ஒண்டரமாத லீவு' என்றான் லூர்த்துராசன்.

'நாலு பிள்ளயளாச்சுதா உனக்கு? போனதவண நான் வரேக்க மூணாவது வயித்திலயெல்லோ...?'
'ஓம், அவள் மரியகொறற்றி. அதுக்குப் பிறகு மரிய ஸ்ரெல்லா. கடக்குட்டிக்கு

இப்ப பத்து வயசாப்போச்சு'
அப்பு சிரித்தார். அப்பு என்ன அர்த்தத்தில் சிரித்திருப்பாரென்பதை லூர்த்துராசன் நன்றே விளங்கிக் கொண்டான். 'அப்பனுக்குப் பிள்ள தப்பாமல் பிறந்திருக்கிறாய்' என்ற கணக்காய் இருந்ததைத் தவிர வேறெதுவாக இருந்திருக்கக் கூடும் அப்புவின் நமட்டுச் சிரிப்பு.
'பசிச்சால் ஏதாவது சாப்பிடனப்பு' என்றான்.
'இந்தக் காலங்காத்தலயா? வேணாம் ராசா. பெப்பேனியன் போக்காளியாகீட்டான் எண்டதக் கேட்டதிலயிருந்து அன்னந்தண்ணி இறங்குதில்லத் தொண்டக்குழியில. பேந்து, கொஞ்சஞ்செல்லப் பாப்பம்' என்றார்.

ஆறரை மணியாகியிருந்தது. அப்புவும், லூர்த்துராசனும், பவுல் ப்ரூனோவும் கடற்கரைக்குப் புறப்பட்டார்கள். ஊலாவ் மார்ட்டீன் தாத்தாவிடம் இரண்டு வருடங்களுக்குமுன் மூவாயிரத்தி ஐநூறு குரோணர்களுக்கு லூர்த்துராசன் வாங்கிய சிறு மரத்தோணி. அவன் பிறக்காத காலத்தில் செய்யப்பட்ட தோணி. துடுப்பு வலித்துக்கொண்டுதான் அதனைச் செலுத்தமுடியும். யந்திரங்கள் பொருத்துமளவு பருமனற்றது. தோணியைக் கண்டதும் அப்பு விழிகள் விரிய நுட்பமாகப் பார்த்தார் அதனை.

'எங்க புடிச்சனி இத, விடுவலைத் தொடுவத்தோணி மாதிரிக் கிடக்கு. நல்லா அடிபட்டுப் போச்சு' தோணியின் அணியத்தைப் பிடித்து ஆட்டிப் பார்த்தபடி சொன்னார்.
'அப்பு இது அறுவது எழுவது வருசத் தோணியப்பு, இதுக்கு இங்க சரியான மதிப்பண. லேசில கிடைக்காது' என்றான்.
'உனக்காரு தந்தது?' எனக் கேட்டார்.
'ஊலாவ் மாட்டீன் எண்டொரு அப்பு. எங்கட தெருவிலதான் இருக்கிறேர். அவற்ற தகப்பன் பாவிச்ச தோணியாம். கொஞ்சக் காசுக்குத்தான் தந்தவர். என்னில நல்ல விருப்பம் அந்தாளுக்கு' என்றான்.

-2-

துறவிகள். இளம், கிழத் துறவிகள். அவர்கள் வாழ்ந்தார்கள். போருக்கு முன்னம் வாழ்ந்தார்கள், போருக்கு நடுவிலும் வாழ்ந்தார்கள், போர் முடிந்தும் வாழ்ந்தார்கள். சாயம் கரைந்து வெளிறிப்போன அங்கிகளை வெள்ளாவிப்பானையில் அவித்து அவித்து கசங்காமல் நலுங்காமல் அணிந்து திரிந்தார்கள். ஆளுக்கொரு மந்திரக்கோலை சிறிதும் பெரிதுமான அளவுகளில் கறுப்புநாடாவில் கட்டி, தத்தம் கழுத்துக்களில் தொங்கப்போட்டபடி பவனி வந்தார்கள். கிழத் துறவிகளில் சிலரோ தங்கள் கழுத்துக்களில்

தொங்கும் மந்திரக்கோலை இடுப்புப் பட்டிகளில் சொருகிவைத்து பூமியை அழுத்தமாக மிதித்தபடி திரிந்தார்கள். இன்னும் ஒருசிலரோ மந்திரக்கோலை செங்கோலாகவே ஊன்றி நடந்தார்கள்.

சனங்களோ, இந்த மந்திரக்கோல்களின் முன்னால் அபின் தின்றவர்களைப்போல் மயங்கிக் கிடந்தார்கள். ஆனால் தேவதைகளோ; துறவிகளின் பொருட்டும், அவர்களது மந்திரக்கோல்களின் பொருட்டும் என்றென்றைக்கும் அச்சம் நிறைந்தவர்களாகவே இருந்தார்கள். போருக்கு முன்னமும், போருக்கு நடுவிலும், போர் முடிந்தும் தேவதைகளின் அச்சம் வலுத்தனவேயல்லாமல் குறைந்தபாடாய் இல்லை.

அப்புவோடு பேசியபடியே ஹெஸ்ஸா முகத்துவாரம்வரை தோணியை வலித்துக்கொண்டு வந்துவிட்டான். பவுல் ப்ரூனோ வழமைபோல் தனது அமைதியுடன் அணியத்தில் ஏறி அமர்ந்திருந்து கொண்டான். அப்பு நடுத்தோணியில் அமர்ந்திருந்தார். நேரம் ஏழு மணியைத் தாண்டியிருந்தது. வெள்ளம் நுகைப்பு அரைத்திட்டத்திற்குமேல் வந்து விட்டது. நங்கூரத்தை இறக்கிவிட்டு இரண்டு தூண்டில்களிலும் இறாலைக் கொழுவி கடலில் எறிந்துவிட்டு ஒரு சிகரட்டை எடுத்து மூட்டிக் கொண்டான் லூர்த்துராசன். சிகரெட்டை அப்புவுக்கும் நீட்டினான். 'என்னட்டச் சுருட்டுக் கிடக்கு' என்றபடி இடுப்பிலிருந்த மடிப்பெட்டியிலிருந்து ஒரு சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார். அப்பு இப்போதும் தனது மனைவி இழைத்துக் கொடுத்த அதே மடிப்பெட்டியைத்தான் வைத்திருந்தார். யானைப்பெட்டியையும் அவர் கைவிடவில்லை. நீண்ட காலத்தின்பின் அப்புவின் சுருட்டுப்புகை வாசனை லூர்த்துராசனின் நாசிவழியாகப் புகுந்து அவனது சர்வாங்கத்தையும் திளைக்க வைத்துக் கொன்றதாக உணர்ந்தான். ஒருகணம் ஏழாற்றுக் கடலின் மடியில் அவனைத் தள்ளிவிட்டு தலையைக் கிறுகிறுக்க வைக்கும் ஒரு சுக அனுபவமாக இருந்தது. ஒவ்வொரு வாசனைகளுக்குள்ளும் எத்தனை விதமான வாழ்வனுபவங்கள், சுக சரிதங்கள் புதைந்து கிடக்கின்றன. இழந்துபோன, இழக்க வைக்கப்பட்ட வாசனைகளை எங்காவது, எப்போதாவது நுகரும் சந்தர்ப்பங்களில் அந்த வாழ்வனுபவங்கள் கேட்டுக்கேள்வியின்றி அந்தக் கணங்களை வந்து பூரணமாக சுவீகரித்துக் கொள்கின்றன. பம்பரத்தைச் சுழற்றிவிடுவதுபோல் தலையை ஒரு சுழற்றுச் சுழற்றிவிட்டுப் போகின்றன. அப்புவின் சுருட்டுப்புகை வாசனையின் வல்லமை இன்னதென்று இப்போது புதிதாக லூர்த்துராசன் உணர்ந்துகொண்டான். முன்பெல்லாம் அப்பு சுருட்டுப் பற்றவைக்கும்போது 'சுருட்டு நாறுதணை, புகய அங்கால விடணை' என்று எத்தனை தடவைகள் எரிந்து விழுந்திருப்பான். அப்புவும் அசடு வழிய அத்தனை தடவைகளும் மூட்டிய சுருட்டை அணைத்திருக்கிறார் இவனுக்காக. இப்போது நினைக்கக் கவலையாகவும், குற்ற உணர்வாகவுமிருந்தது லூர்த்துராசனுக்கு.

பெரிய தூண்டிற்கம்பின் கயிறு நிமிர்ந்தது. 'இழுக்குதடா தம்பி, ஏதோ பெரிசுபோல' நடுத்தோணியிலிருந்து எழுந்து நின்று பறதிப்பட்டார் அப்பு. அணியத்தில் குந்தியிருந்த பவுல் ப்ரூனோவும் கயிறு நிமிர்வதை அவதானித்துவிட்டு எழுந்து நின்றான். விட்டால் கடலுக்குள் குதித்துவிடுவான் போல் இருந்தது. அப்புவும், ப்ரூனோவும் பட்ட பறதிப்பாட்டில் தோணி கவிழ்ந்து விடுவதுபோல் அலையில் அங்குமிங்குமாகப் பதகளித்தது. 'அப்பு, இரணயப்பு. பறதிப்படாதயண, இழுக்கிறன். புடிச்சுப்போடலாம்'என அப்புவை அமைதிப்படுத்திவிட்டு தூண்டிற்கயிற்றை வளைத்துச் சுற்றினான் லூர்த்துராசன். பவுல் ப்ரூனோவால் இருப்புக் கொள்ள முடியவில்லை. அவன் அணியத்தில் எழுந்து நின்றபடியே தூண்டிற் கயிற்றையே இமைக்காமல் அவதானித்தான்.

லூர்த்துராசன் இழுத்துத் தோணிக்குள் போட்ட அந்த மீன், சுமார் ஒன்றரை முளம் நீளமானதாகவும், மூன்று கிலோவுக்குக் குறையாததாகவும் இருந்தது. அது துடித்த துடிப்பிலும், வாலை அடித்த அடிப்பிலும் தோணி உடைந்து விடும்போல் அச்சமுண்டாயிற்று அப்புவுக்கு.
'தோட்டுப்பறி இல்லயா மோனே, இருந்தால் அதுக்குள்ள பிடிச்சு மடக்கி வைக்கலாமெல்லோ?'

அப்பு தோட்டுப்பறியை இன்னமும் மறக்கவேயில்லை. பறியிழைப்பதில் அப்பு வலும் விண்ணன். பனையோலைக் குருத்தைக் காயவைத்து, இம்மியளவும் பிசகாத அளவுகளில் பக்குவமாகச் சீவி, இறால் பறியிலிருந்து, களங்கண்டிப்பறி, வழிவலைப் பறி, திருக்கைவலைப்பறி என எல்லா வகையான தோட்டுப் பறிகளையும் அந்தந்தத் தொழிகளுக்கேயுரிய வகையில் இழைத்துக் கொடுப்பார். தீவகக் கரையோரக் கிராமங்களில் அப்புவின் தோட்டுப் பறிகளுக்கு மிகுந்த பவிசு இருந்துவந்த காலமொன்றிருந்தது.
'தோட்டுப்பறியாண?, இல்லயணயப்பு. இங்க அதெல்லாங் கிடையாது. பறியிழைக்கப் பனையோலைக்கு ஆற்ற வீட்ட போறது?' சிரித்துக்கொண்டே அப்புவுக்குப் பதில் சொல்லிவிட்டு, கடையால் கொட்டுக்குள் இருந்த ஒருமுளம் நீளமான இரும்புத் தடியை எடுத்து மீனின் உச்சியில் இரண்டு அடி போட்டான் லூர்த்துராசன். மீனின் துடிப்பு அடங்கிப் போனது. அப்பு அவனின் இந்தச் செயலைக் கொஞ்சங்கூட எதிர் பார்க்கவேயில்லை. 'ச்சே, என்ன அன்னியக்கெட்ட வேல செய்யிறாயடா மோனே, இப்பிடியா அடிச்சுக் கொல்லுறது? ச்சே, எங்கட பரம்பரயிலயே கண்டு கேட்டறியம் இப்பிடியொரு காரியத்த...' மீனை அடித்துக் கொன்றதை அப்புவால் ஜீரணிக்க முடியாதிருந்தது. அவர் கவலையும், கோபமும் அடைந்தார். லூர்த்துராசனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரித்தே விட்டான். 'சிரிக்காதயடா மோனே,

இப்பிடியெல்லாம் அடிச்சுக் கொல்லப்படாது. எங்க பழகினனி இந்தப் பழக்கம்? ம், ஊரில எத்தின தோணி மீனப் பிடிச்சிருப்பாய்?, இப்பிடி நீ செய்தறியன் நான். இதென்ன புது நாகரியம்' அப்பு சலித்துக் கொண்டவராய் பார்வையைத் திருப்பி தூரத்திலிருந்து எழுந்து வரும் அலைகளின்மேல் பதித்தார். லூர்த்துராசனுக்கு விளங்கிவிட்டது மீனை அடித்துக் கொன்றது அப்புவுக்குப் பிடிக்கவில்லை என்று. தோணியில் இழுத்துப்போட்ட தூண்டிலில் இறாலைக் கொழுவி மீண்டும் கடலில் போடுவதில் முனைப்பாயிருந்தான். லூர்த்துராசனும் இந்த நாட்டுக்கு வந்த புதிதில் மீன்களை அடித்துக் கொல்வதில்லை. ஆனால் கூடவரும் நோர்வேஜிய நண்பர்கள் இவனைக் கடிந்து கொள்வார்கள். உடனே அடித்துக் கொல்லும்படி சத்தம் போடுவார்கள். ஏன் அப்படிச் செய்ய வேண்டுமென்று இவன் அவர்களிடம் எப்போதுமே கேட்டதில்லை. அந்தச் செயல் இவர்களின் கருணைக்கொலை மனோபாவமாக இருக்கலாம் என தனக்குள் நினைத்துக் கொண்டான். அடித்துக் கொல்லப்படும் மீனில் சுவை அதிகம் என வெள்ளையர்கள் நம்புவதாகவும் கேள்விப் பட்டிருக்கிறான். மரண பயத்தில் பதறிப்படும் மீனில் ஒருவித அமிலம் சுரக்குமென்றும், அதனால்தான் மீனின் சுவை மாறிவிடும் என்றும்கூட எங்கோ அறிந்திருந்தான். உண்மை பொய் தெரியாது. நாடில் எந்த மீனவர்களும் தோணிக்குள் உயிராகப் பிடித்துப் போடப்படும் மீன்களை அடித்துக் கொல்வதில்லை. மாறாக அவற்றுடன் உரையாடுவார்கள். நெருங்கிய உறவினரோடு, நண்பரோடு, ஆசைக்குரிய காதலியோடு உரையாடுவதுபோல் இருக்கும் மீன்களுடனான இவர்களது உரையாடல்.

கடலிலிருந்து வலையைத் தோணிக்கு இழுக்கும்போது 'வாடி ராசாத்தி, பொலிஞ்சு வாடி, கூட்டாளிமார் எல்லாரயுங் கூட்டிக்கொண்டு வாடி, சுத்திப் படடி நாச்சியார், வலைக்குப் பத்தாகத் தூக்கிப் போடடி' என்பனவாகவும், தோணியில் பிடித்துப்போட்ட மீனோடு உரையாடும்போது, 'கூப்பிடடி குஞ்சு அக்க தங்கச்சிமார வந்தேறச்சொல்லிக் கூப்பிடடி. புள்ளகுட்டிக்காரனடி கூப்பிடடி. குஞ்சுகளுக்கு ஒரு நேரக் கஞ்சிக்குத்தானே இரக்கிறம் கூப்பிடடி' என்பனவாகவும், தொடர்ச்சியாக ஆறேழு மீன்கள் திருப்திகரமாக வந்துவிட்டால், 'என்ர சீதேவி கூப்பிடடி, கஞ்சிக்குத் தந்திட்டாய் ஒரு போத்தில்க் கள்ளுக்கும் இரங்கிவிடடி என்ர சீதேவி' என்பனவாகவும் இருக்கும் மீன்களுடனான அவர்களின் வேண்டுதல் உரையாடல்கள். இவர்கள் ஒவ்வொரு கோரிக்கைகளை முன்வைக்கும்போதும், தோணிக்குள் பிடித்துப்போட்ட மீன்கள் தலையை ஆட்டித் திமிறி, வாலை அடித்து துடித்துப் படபடக்கும். அப்படி அவை தோணிக்குள் படபடவென அடித்து ஒலியெழுப்புவதை இவர்கள் தமக்கான பதில்களை அவை சொல்வதாக எண்ணிக் கொண்டு உரையாடிக்கொண்டே தொழிலைக் கவனிப்பார்கள்.

இத்தகைய உரையாடல்கள் மீன்களோடு மட்டுமல்ல, ‘மீன்கலக்கிலை கொண்டுபோய் விடடி சீதேவி’ என்று தோணியோடும் பேசிக்கொள்வார்கள், ‘வாரிக்கொண்டு வாடி முத்து, பவளம்’ என வலையைக் கடலில் விரிக்கும்போது வலையோடும் பேசுவார்கள். ‘கிளையாக் கொண்டுவந்து சேரடி அம்மா’ என்று கடலலையோடும் பேசுவார்கள். கொண்டல் கலைச்சுத் தணிஞ்சுவாடியம்மா, கவிர் கலைச்சு வெப்பல் தாடி தாயே’ என்று காற்றோடும் பேசுவார்கள். நெடுமுரல் மீன் மட்டும் அகப்படுமானால் உடனேயே கழுத்தை முறித்துக் கொன்று விடுவார்கள். காரணம் நெடுமுரல் தோணிக்குள் கிடந்தும், ஆளை நோக்கிப் பாய்ந்து, துப்பாக்கி முனையிலிருக்கும் கத்திபோன்ற தனது கூரிய அலகால் தாக்கக்கூடியது. ஆபத்தானது. நெடுமுரல், ஆடாத்திருக்கை என இவ்விரண்டின் தாக்குதலுக்கு உள்ளாக்கப் படுவதென்பது சாபக்கேடானதாக கடலோடிகள் நம்பி வந்தார்கள்.

தூண்டிலில் இறாலைக் கொழுவி கடலில் வீசிவிட்டு, எட்டி கடல் நீரை இரு கைகளாலும் கோலியேந்திக் கைகளைக் கழுவிக் கொண்டான். அணியத்தில் அமர்ந்து பவுல் ப்ரூனோ மீனையே பார்த்துக்கொண்டிருந்தான். பவுல் ப்ரூனோவுக்கு அந்த மீனைப் பார்க்கப் பெரும் புதினமானதாய் இருந்தது. அப்பு மீனின் நாட்டில் சுட்டுவிரலை வளைத்துக் கொழுவிப்பிடித்து தூக்கி உற்று நோக்கினார். ‘கலவாய்.....’ என்றார்.

‘இல்லயணயப்பு, இது எங்க ஊர்க் கலவாய் இல்ல. கிட்டடத்தட்ட அந்த இனந்தான் ஆனால் இதின்ர நாட்டுமுள்ளும், முதுகு முள்ளும் சாரியான சின்னன். வாயும் சின்னன், பல்லும் குட்டிப் பல்லுகள். இதை இங்க தொ(ர்)ஸ்க் எண்டு சொல்லுவாங்கள். எங்கட ஊரில கருவாட்டுக்கு கட்டா மாதிரி இங்க இந்த மீனில போடுற கருவாடு பேமஸ். மீனெண்ணக்குளிசை செய்யிறதுக்கும் இது பேமஸ்’ என்றான் லூர்த்துராசன். அப்பு கொடுப்புக்குள் சிரித்தார். நல்ல மீன்தான் பிடிபட்டிருக்கிறது என்பதில் அப்புவுக்கு மகிழ்ச்சி. தவிரவும் சீமைக்கு வந்தும் பேரன்காரன் மீன்வகை அறிந்து வைத்திருக்கிறான் என்ற ஒரு பெருமை மிதப்பும் அவருக்கு.

பவுல் ப்ரூனோ அணியத்தை விட்டு இறங்கிவந்து மீனை உற்றுப்பார்த்துவிட்டு மீண்டும் போய் அணியத்தில் அமர்ந்துகொண்டான். அவனது அவதானிப்பு கடலில் போடப்பட்டுள்ள தூண்டிற் கயிற்றின்மீதே மையங்கொண்டிருந்தது. அடுத்த மீன் என்னவாக இருக்கும், எப்படி இருக்கும், எந்தளவில் இருக்கும் என்பதே அவனின் எதிர்பார்பாயிருந்தது.

லூர்த்துராசன் இலங்கைத்தீவின் மீன்பிடித்தொழில்களில் அநேகமானதை அறிந்து வைத்திருந்தது மட்டுமல்ல, அத்தனை தொழில்களையும் செய்துமிருக்கிறான்.

கடலட்டை, சங்கு, முத்து, நாவடம் கடற்தாமரை குளிப்பது மட்டுமல்ல, சிங்கறால் வேட்டை, கலவாய் வேட்டையென நீரடி மீன்பிடியிலிருந்து வழிச்சல்வலை, படுப்புவலை போன்ற வலைத்தொழில்களையும், களங்கண்டி, வீச்சு என பொறிமுறைத் தொழில்களிலும் அனுபவமுடையவனாய் இருந்தான். ஆனால் லூர்த்துராசனுக்கென மிகவும் பிடித்த தொழில் என்றால் சிங்கறால் வேட்டையும், கலவாய் வேட்டையும். அதிலும் கலவாய் வேட்டையையே சலிப்பற்று, விருப்போடு செய்வான். கடல்க்காகம் என்றும் இவனுக்கொரு பட்டப்பெயர் இவனது ஊரில் இருந்து வந்தது.

லூர்த்துராசன் ஊரிலிருக்கும்போது கோடைகாலங்களில் கலவாய்மீன் வேட்டைக்குப் போகும் அநேக சந்தர்ப்பங்களில் தனியனாகத்தான் போவான். கடலின் அடியில் உள்ள பாறை இடுக்குகள், சிறுமலைக் குன்றுகள், சாட்டாமாறுத் திடல்கள் போன்றவற்றில் பொந்துகள் அமைத்து கலவாய் மீன்கள் வாழும். அவற்றைச் சுழியோடி, தேடிக் கண்டு, கம்பியால் குத்திப் பிடித்து வருவான். இந்த கலவாய் குத்தும் கம்பியானது சிறுமண்டா, ஈட்டி போன்றது. வீட்டுக் கட்டிட வேலைகளுக்குப் பயன்படுத்தும் இரும்புக் கம்பியை ஒரு ஆள் அள-விலாக வெட்டி முனையைக் கூராக்கி, மறு முனையை கைபிடியாக வளைத்துத் தயாரிக்கப் படுவது. இதன் துணைக் கருவியாக மட்டுக்கம்பி என்ற ஆயுதமும் பயன்படுத்தப்படும். இரண்டு அல்லது மூன்றுமுளம் நீளமான வைரமான தடியில் கொழுவிபோல் வளைக்கப்பட்ட கம்பியை இணைத்துக் கட்டப்பட்டிருக்கும், அல்லது முதலாம் இலக்கப் பெரிய தூண்டில் அப்படியொரு தடியில் வரிந்து கட்டப்பட்டிருக்கும். ஆழமான பொந்துகளுக்குள், அல்லது பாறைகளின் குகைகளுக்குள் புகுந்துவிட்ட மீன்களை அப்படியே உள்ளேயே வைத்துக் குத்திவிட்டு வெளியே எடுக்கச் சிரமமாக இருக்கும் சமயங்களில், இந்தத் துணைக் கருவியான மட்டுக்கம்பியை உள்ளே விட்டுக் கொழுவி, மீன்களை வெளியே இழுத்துப் பிடித்து விடுவார்கள். இந்தத் துணையாயுதத்தின் தேவை லூர்த்துராசனுக்கு எப்போவாவதுதான் தேவைப்படும். கலவாய் மீன்கள் பாறைகளுக்குள்ளும், குகைகளுக்குள்ளும் ஓடிப்போய்ப் பதுங்குவதற்குமுன் அவற்றை வெளியில் வைத்தே வேட்டையாடி விடுவான்.

சுழியோடுவதற்கான காலணிகள், கண்ணாடி, ஒரு கலவாய்க்கம்பி, ஒரு மட்டுக்கம்பி இது மட்டுமே லூர்த்துராசனுக்குப் போதும், நான்கு குடும்பங்களுக்குச் சோறு போடுவான் என்ற ஒரு அபிப்பிராயம் அவனது கிராமத்துச் சனங்களிடம் இருந்தது. அந்தளவுக்கு இந்தக் கலவாய்மீன் வேட்டையில் லூர்த்துராசன் பெரிய சுழியன். கடற் பாறைகளுக்குள் புகுந்து புறப்பட்டு வருவான். எந்த நேரமும் தோள்ப்பட்டைகள், முதுகு, முளங்கை, விரல்களென கற்கள் கிழித்த காயங்களும், ஆஞ்சாளை, கலவாய் போன்ற மீன்கள் கடித்த காயங்களும் லூர்த்துராசன் உடம்பில் இருந்துகொண்டேயிருக்கும். பல

சுழியோடிகள் இந்த வேட்டைத் தொழிலைச் செய்து வந்தாலும், லூர்த்துராசன் வேட்டையாடிக் கொண்டுவரும் கலவாய் மீன்களில் குத்துக்காயம் இருப்பதைக் கண்டு பிடிப்பது கடினமாகவே இருக்கும். தவிரவும் லூர்த்துராசன் கரைக்குக் கொண்டுவரும் கலவாய்மீன்கள் அநேகமானவை உயிருடனேயேதான் இருக்கும். பாறைகளில் பதுங்கி நிற்கும் கலவாய் மீன்களின் உடலில் கண்ட இடத்திலும் குத்த மாட்டான். நல்ல வளம் பார்த்து, கடலடியில் தரையோடு தரையாகப் படுத்திருந்து, கண்ணடியின் நாட்டுப் பகுதியில் இலக்கு வைத்துக் குத்துவான். நாட்டுப் பகுதியில் குத்தினால் தப்பவே தப்பாது. மீனும் சாகாது. கண்ணில் குத்தினால் இன்னமும் சிறப்பு. ஆனால் லூர்த்துராசன் கண்களை நோக்கிக் குறி வைப்பதுமில்லை, கண்களில் குத்துவதுமில்லை. அதற்கு வேறொரு காரணமும் இல்லை, மீன் உடனேயே செத்துவிடும், கண் சிதைந்த மீன்கள் விற்பனை செய்யும்போது பொலிவாகவோ, பார்வைக்கு வசீகரமாகவோ இருக்காது. மீன்கள் பளபளவென கண்களை விழித்துக் கிடந்தால்தான் வாங்குபவர்களையும் வசீகரித்து இழுக்கும். தவிரவும் கலவாயின் வயிற்றுப் பகுதியில் கடைசிவரை குத்தவே மாட்டான். அப்படிக் குத்திப்பிடிக்கும் கலவாயின் காயம் மிகப் பெரிதாகக் கிழிந்திருக்கும், அந்தக் கிழியலூடாக குடல் வெளியே வந்திருக்கும். இப்படி குடல் வெளியே தெரியும் ஒரு மீன் கிடந்தாலே ஏனைய மீன்களின் மதிப்பும் குறைந்துவிடும். கலவாய் வேட்டையில் மட்டும் சுழியனல்ல, மீன் வாங்குவோரின் இந்த உளவியல் சூட்சுமங்களும் தெரிந்தவனாக இருந்தான் லூர்த்துராசன்.

மீண்டும் பெரிய தூண்டிற்கம்பு மெல்ல அசைந்தது. இதனை முதலில் கவனித்தவன் பவுல் ப்ரூனோதான். அணியத்திலிருந்து எழுந்த பவுல் ப்ரூனோ அப்புவையும் கடந்துவந்து லூர்த்துராசனுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். இரண்டு மூன்று தடவைகள் மெல்ல மெல்ல அசைந்த தூண்டிற்கம்பின் கயிறு சடாரென நிமிர்ந்ததும் கடலை நோக்கி வளைந்தது. ‘தம்பி இழுக்குதடா’ என்றார் அப்பு.

தூண்டிற் கயிற்றைச் சுற்றத் தொடங்கினான் லூர்த்துராசன். கடினமாக இருந்தது. ‘விட்டிராதயடா தம்பி, ஏதோ பெரிசுபோல கிடக்கு’ என்றார் அப்பு வாரியிலிருந்து எழுந்தபடி. ‘அப்பு, இரண வள்ளத்த ஆட்டாதயண...’ கயிற்றைச் சுற்றி வளைத்தபடியே லூர்த்துராசன் சொன்னான். அப்பு அமர்ந்துகொண்டார். அப்புவுக்குக் கை துருதுரு என்றிருந்தது. அவனிடமிருந்து தூண்டிலைப் பறித்து தானே அந்த மீனைப் பிடித்துவிடவேண்டும்போல் இருந்தது அவருக்கு. ஆனால் இப்படிக் கம்பில் கிர்கிர் என்று சந்தம்போடும் ஏதோ கிறிச்சான்மாதிரி இயந்திரக்கூடு பூட்டிய, வளையம் வளையமாகக் கடுக்கன் போட்ட தூண்டிற் கம்பில் மீன்பிடித்து அப்புவுக்குப் பழக்கமில்லை. அது தெரியவும் மாட்டாது. ஐம்பது யார் தூண்டிற்கயிற்றை, ஒரு சாண் காய்ந்த முள்முருக்குக் கட்டையில், அல்லது பூவரசங் கட்டையில் சுற்றி, கயிற்றின் முனையில்

இரண்டு தூண்டில்களைப் பிணைத்து, பாரத்திற்காக ஒரு இஞ்சியிலும் சற்றுக் குறைந்தளவான ஈயத்துண்டைக் கட்டி வைத்திருப்பார்கள். அந்த இரண்டு தூண்டில்களிலும் கணவாய்த் துண்டுகளைக் கொழுவி, கோலியாத்தை நோக்கி தாவீது கவணால் கல் வீசியெறிந்ததுபோல் தோணியில் நின்று எறிவார்கள். சொல்லிவைத்தாற்போல் விளைமீன்கள் பிடிபடும். இதுதான் அப்புவுக்குத் தெரிந்த தூண்டில் மீன்பிடி.

மிகுந்த பிரயத்தனப்பாட்டின் பின் மீனைத் தூக்கித் தோணிக்குள் போட்டான் லூர்த்துராசன். சுமார் நான்கு கிலோவரை கனமுள்ள மீன். அது தலையையும், வாலையும் இரண்டு தடவைகள் ஆட்டியும், ஒரு தடவை முழு உடலையும் அசைத்துத் தூக்கியடித்தும், தோணியில் படாரென ஒரு சத்தம் வரவைத்துவிட்டு அமைதியானது. 'அதழ். நல்ல அதழடா மோனே' என வாயூற, கொடுப்புக்குள் சிரித்தபடி சொன்னார் அப்பு. இது அதழ் தானண அப்பு, ஆனால் இங்க இதுக்குப்பேர் வேற, வெய்த்த எண்டு சொல்லுவாங்கள். இந்த நாட்டில இதுதான் ஆகக்கூடின விலயான மீன். ஆனால் அஞ்சு கிலோவுக்குள்ப்பட்ட மீன்தானணயப்பு ருசியாயிருக்கும். அதுக்குமேல முத்தின மீன்கள் வலிச்சலாயிருக்கும். இங்க இந்த மீன் அம்பதறுபது கிலோவுக்கு மேலயும் வளரும்' என்றான் லூர்த்துராசன். அணியத்திலிருந்து ப்ரூனோ இறங்கி வந்து அதழ்மீனைத் தொட்டுப் பார்த்துவிட்டு மீண்டும் போய் தனதிடத்தில் அமர்ந்துகொண்டான். அதன்பின் அவர்களுக்கு எதுவுமே அகப்படவில்லை. கடல் நீரோட்டம் மாறி, மணி பத்தாகியிருந்தது. வடு ஓடத் தொடங்கி விட்டது. இனி எதுவுமே அகப்படாது எனத் தெரிந்துகொண்ட லூர்த்துராசன் பவுல் ப்ரூனோ அமர்ந்திருந்த அணியப் பகுதிக்குச் சென்று தோணியின் நங்கூரத்தை இழுத்து ஏற்றினான். தோணியைக் கரையிலேற்றி நங்கூரம் பாய்ச்சிவிட்டு வீடு வந்து சேர மணி பதினொன்றாகியிருந்தது.

*-3-*

குசினிக்குள் நின்று மீன்களை செதில் திருத்தி, வெட்டி குடல் நீக்கி, சுத்தம் செய்து, சிறு சிறு துண்டுகளாக்கி ஒவ்வொரு நாளுக்குமான சமையலுக்குரிய அளவாக மெழுகு பையில் பிரித்துப் போட்டுக் கட்டி குளிர்ப்பெட்டியில் அடுக்கி வைத்தான். பக்கத்தில் அப்பு அவன் மீன் வெட்டும் பக்குவத்தை ரசித்தபடியே நின்றிருந்தார்.

'உடன்மீனில புளியாணம் வச்சால் நல்ல சோக்கா இருக்கும் மோனே' வாயூறியபடியே சொன்னார் அப்பு.
'ஓமண, ஆணம் வச்சுத்தாறன் போய் குளியணை'
'அந்தத் தலயிலயும் ஒண்ட ஆணத்துக்க போடு. இவன் விரும்பிச்

சாப்பிடுவான்' தலை விரும்பிகள் பவுல் ப்ரூனோ மட்டுமல்ல. அப்புவும்தான். அப்பு மட்டுமல்ல, லூர்துராசனும்தான். உடன்மீனில் புளியாணம் வைப்பதற்கு அளவாக சுமார் ஒருகிலோ மீன் துண்டுகளையும், ஒரு தலையையும் எடுத்து வைத்துக் கொண்டான்.

அப்புவும், பவுல் ப்ரூனோவும் குளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்துவிட்டு மீண்டும் குசினிக்குள் வந்து புளியாணம் தயாரிப்பதற்கான பணிகளில் துரிதமாகினான். ஊரில் இருந்த காலத்தில் அப்பு பன்னிரண்டு ஒரு மணிக்குள் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு முடிப்பவர். பசி தாங்க மாட்டார்.

புளியாணத்துக்கான மீன் துண்டுகளை அதற்கு ஏதுவான ஒரு சட்டியிலிட்டு, சுமார் ஒரு லிட்டர் தண்ணீரை நிறைத்து அடுப்பிலேற்றினான், அளவான உப்பு. சின்ன வெங்காயம் எட்டு பத்து எடுத்து உரித்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி அதனுள் போட்டான், அதேபோல் எட்டு பத்து செத்தல் மிளகாய்களையும் எடுத்து காம்புகளோடு முழுதாக அதனுள் இட்டான். நேற்று இந்தியன் கடையில் வாங்கிவந்த கறிவேப்பிலைப் பைக்கட்டை குளிர்ப்பெட்டியிலிருந்து எடுத்துத் திறந்தான். கறிவேப்பிலையின் வாசம் மருந்துக்குக்கூட இல்லை. சில இலைகளை ஒடித்துக் கசக்கி முகர்ந்து பார்த்தான். கறிவேப்பிலையின் வாசமே தட்டுப்படவில்லை. சலிப்போடும், கோபத்தோடும் கறிவேப்பிலைப் பைக்கட்டை அப்படியே தூக்கிக் குப்பைக் கூடைக்குள் வீசி எறிந்தான். உண்மையிலேயே புளியாணத்துக்குக் கறிவேப்பிலை தேவையில்லைத்தான். போட்டால் சற்று வாசமாக இருக்கக்கூடும் என நினைத்தான் லூர்த்து ராசன் அவ்வளவுதான்.

மறு அடுப்பில் சோறு சமைப்பதற்கான உலையை ஏற்றினான். கறியடுப்பு இரண்டு கொதியல். பத்துப் பதினைந்து நிமிடங்களில். மிளகாய் அவிந்துவிட்டதை அவதானித்தவன் அத்தனை மிளகாய்களையும் தனியாக எடுத்து அரிக்கன் சட்டியிலிட்டு மர அகப்பையால் மசித்துக் கடைந்தான். நன்றாகக் கடைந்ததும் புளியாண உலையிலிருந்து இரண்டு அகப்பை சுடுதண்ணீரை அள்ளி மிளகாய் கடைந்த சட்டியிலூற்றி, கலக்கி மீண்டும் புளியாணச் சட்டிக்குள் ஊற்றினான். ஆணம் திடீரெனச் சிவந்தது. கொதித்துக் கொண்டிருந்த சோற்று உலையில் இரண்டுபேணி குத்தரிசியைக் களைந்து இட்டான். அளவான உப்பையும் இட்டபின் சோற்று உலையை மூடினான்.

மீண்டும் ஐந்து நிமிடங்கள். ஒரு சிறு கிண்ணத்தில் ஒரு அகப்பை ஆணத்தை அள்ளியிட்டான். ஆணத்துக்கு அளவான பழப்புளியை எடுத்து அதற்குள்ளிட்டு பிசைந்து கரைத்து ஆணத்துக்குள் மீண்டும் ஊற்றியபின் அடுப்பை அணைத்து விட்டு ஆணச்சட்டியை ஆவி வெளியேறாமல் மூடிவைத்தான்.

குளித்துமுடித்து வந்து சோபாவில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சியில் சங்கமமானான் பவுல் ப்ரூனோ. Michael York - Hidemi Aoki 1976ல் நடித்த 'செவன் நைற்ஸ் இன் ஜப்பான்' தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்தது. அவன் தொலைக்காட்சியை மிக உன்னிப்பாகவே அவதானித்துக் கொண்டிருந்தான். 1978இல் யாழ்.றீகல் தியேட்டருக்கு வந்து பேய் பிசாசு ஓட்டம் ஓடிய படம் இது. லூர்த்து ராசனுக்கு மிகப் பிடித்த படங்களில் ஒன்று இது. பவுல் ப்ரூனோவுக்கும் நிச்சயம் பிடித்திருக்க வேண்டும். விழிகள் பிதுங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் தனது ஈர உடம்பை துவாயால் துடைத்தபடி அப்பு குசினிக்குள் நுழைந்தார்.
'என்னடா மோனே.... நல்லாக் கமகமக்குது. உன்ர அன்னபூரணம் ஆச்சி புளியாணம் வச்சாளெண்டால் இப்பிடித்தான் மணக்கும்' அப்பு அடுப்படிக்கிக் கிட்டவாக வந்தார். ஆணச்சட்டியை திறந்து ஆவியை மோப்பம் பிடித்தார். முகம் விரியச் சிரித்தார். கரண்டியால் ஆணத்தை அள்ளி உள்ளங்கையில் விட்டு நக்கிச் சுவைத்தார். அல்லிப்பூக்கள் ஏழு ஒரே கணத்தில் மலர்ந்ததுபோல் அவரது விழிகள் சுவை மாளா மலர்ந்தன. நாவை சப்புக் கொட்டினார். அப்புவின் கண்கள் மெல்லப் பனித்தன. லூர்து ராசனை ஒரு பார்வை பார்த்தார். அவன் சிரித்தபடியே நின்றான். அன்னபூரணம் ஆச்சியின் நினைப்பில் அவர் ஆட்பட்டு விட்டார் என்பதை அவன் விளங்கிக் கொள்வதென்பது ஒன்றும் கடினமல்ல. விளங்கிக் கொண்டான்.
'என்ன...., அப்பக்கார அன்னபூரணம் வந்து அருட்டுறாளோ' எனக்கிண்டலாகக் கேட்டான்.
'அட போடா போக்கத்தவனே' துக்கத்திலும் ஒரு வெட்கம் அப்புவுக்கு.

'அப்பு, ஒரு பியர் குடியண. குடிச்சிற்றுச் சாப்பிடுவம்'
'இந்த வெள்ளணத்தோடயா....?'
'நீ கள்ளுக் குடிக்கிற நேரந்தானேயண?'

குளிர்ப்பெட்டியிலிருந்து ஒரு ரின் பியரை எடுத்து வந்து அப்புவுக்கு உடைத்துக் கொடுத்தான்.
'போனமுற வரேக்க ஒண்டு தந்தாய்.... பச்சக் கைச்சல்' என்றார் அவனைப் பார்த்து நக்கல்ச் சிரிப்புடன்.
'இது நல்ல பியரண அப்பு. குடிச்சுப்பார்' என்றான் லூர்த்துராசன்.
'கோப்பயில ஊத்து. இப்பிடியெல்லாம் பேணியோட அண்ணாக்கத் தொண்டைக்குள்ள கவுட்டுத்தேலாது என்னால' அவனிடமே பியர் ரின்னை நீட்டினார் அப்பு.

கிளாஸ் எடுத்து வந்து பியரை ஊற்றிக் கொடுத்தான். பியரில் ஒரு மிடறு இழுத்தார் அப்பு. இன்னொரு மிடறு. திரும்பவும் மூன்றாவது மிடறு.
'என்னடா இப்பிடிக் குளிருது? ம் நல்லாத்தான் இருக்கு.' மீண்டும் ஒரு மிடறு.
'போன முற ஏன் அந்தக் கைச்சல் பியர் தந்தனி?' பியர்க்கிளாசை கன்னத்தில் வைத்துத் தேய்த்து குளிரை அனுபவித்தபடி கேட்டார் அப்பு.
'நல்லது எதெண்டு கண்டுபிடிக்க இவ்வளவு நாளாச்சுதண' என லூர்த்துராசன் சொன்னதைக் கேட்டு அப்புவுக்கு அடக்க முடியவில்லை விழுந்து விழுந்து கெக்கட்டமிட்டுச் சிரித்தார்.

'அடே கிழவா... சிரிச்சுக் களைச்சது போதும் இழுத்துமுடி சாப்பிடுவம்' என்றான் லூர்த்துராசன்.
'இல்ல மோனே, எனக்கு இப்ப பசி இல்ல. கமகமெண்டு ஆக்கி வச்சிருக்கிறாய்தான் வாயூறுது..... சத்துப்பொறு சாப்பிடுவம்'
'அப்பு நீ பசி தாங்க மாட்டேயண...?'
'அதொரு காலமெடா மோனே....., நாள்க்கணக்கா, கிழமக்கணக்கா என்ர சனம் பசி பட்டினியோட கிடந்து உலைஞ்சத இந்த நாசங்கட்டின ரெண்டு கண்ணாலுங் கண்டுபோட்டுத்தான் வாறன்'
'அதெல்லாம் பிறகிட்டு ஆறுதலாக் கதைப்பண, முதல் நீ குடிச்சிட்டுச் சாப்பிடு' என்ற லூர்த்துராசனுக்கு நல்லாகத் தெரியும் அப்பு நிறையக் கதைகளோடு வந்திருக்கிறார் என்பது. நிறையவே மரணச் செய்திகளோடும், அவலச் செய்திகளோடும் அப்பு வந்திருப்பதை லூர்த்துராசன் உணர்ந்துகொள்வது ஒன்றும் கடினமல்ல. அதுவும் பெப்பேனியன் அம்மான் செத்த எட்டாம் நாள் வந்திருக்கிறார்.

தவிரவும் அப்புவோடு நிறையக் கதைகள் கேட்கவேண்டும் என்ற அங்கலாய்ப்பும், தேவையும்கூட லூர்த்துராசனுக்கு உண்டு. தொடங்கினால் இப்போதைக்கு முடியாதென்பதும் தெரியும் அவனுக்கு. அதற்கான தகுந்த தருணத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயமும் லூர்த்துராசனுக்கு உண்டு.

'அவாக்குக் கொஞ்சம் சோறு போட்டு அந்தத் தலையயும் வச்சுக் குடுடா. நல்ல பசியோட இருக்கிறான்' பவுல் ப்ரூனோவைப் பார்த்தபடியே சொன்னார் அப்பு. ஒரு கோப்பையில் கொஞ்சம் சோறும் போட்டு மீன் தலையையும் வைத்து பவுல் ப்ரூனோவுக்கு முன்னால் கொண்டுவந்து வைத்தான் லூர்த்துராசன். பவுல் ப்ரூனோ சாப்பிடவில்லை. சாப்பாட்டுக் கோப்பையையே பார்த்துக் கொண்டிருந்தான். சாப்பிடாமலிருந்த பவுல் ப்ரூனோவைப் பார்த்துக்கொண்டே நின்றான் லூர்த்துராசன். அப்புவுக்கு விளங்கிவிட்டது. 'அடோய், நீ கொதிக்கக் கொதிக்கக் கொண்டு வந்து குடுத்தால் அவன் எப்பிடியடா சாப்பிடுவான்? பார் ஆவி பறக்குது. கொஞ்சம்பொறு ஆறவிட்டுச் சாப்பிடுவான்' என்றார் அப்பு.

அப்போதுதான் லூர்த்துராசனின் மரமண்டையில் உறைத்தது. 'ஓ... சுடச்சுடச் சாப்பிட மாட்டானா?' கேட்டபடியே தனது பியர் ரின்னைக் கையில் எடுத்தபடி பவுல் ப்ரூனோவின் பக்கத்தில் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

'நானென்ன விரதமோடா மடையா? ஒருதுண்டு மீன் எடுதெண்டுவா சாப்பிட்டுப் பாப்பம்'
'அப்பு மன்னிச்சுக்கொள்ளண இந்தா வாறன்' என எழும்பிக் குசினிக்குள் போனான் லூர்துராசன். ஒரு கிண்ணத்தில் நாலைந்து மீன் துண்டுகளை போட்டு எடுத்து வந்து அப்புவுக்கு முன்னால் வைத்தான்.

அப்பு கள்ளடிக்கும்போது நண்டுச் சம்பலையோ, குட்டுறுச் சம்பலையோ தன் கையால் தானே தயாரித்து தேங்காய்ச் சிரட்டையில் வைத்துவிட்டுத்தான் தொடங்குவார். அந்தப் பழக்கம் அவருக்கு எப்போதும் விட்டுத்தள்ள முடியாத பழக்கமாகவே இருந்தது. இதனை மறந்துபோன லூர்த்துராசன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

'இதென்ன குப்பவிறாண்டி மாதிரிக் கறண்டி. தூக்கு தூக்கு' புளியாணக் கிண்ணத்திலிருந்த முள்ளுக் கரண்டியை எடுத்து லூர்த்துராசனிடம் கொடுத்தார் அப்பு.
'எட தம்பி, இதென்ன எல்லா மீனையும் போட்டுக் கொண்டாந்திருக்கிறாய், சோத்துக்கு இருக்கா'
'ஓமண நிறய இருக்கண நீ சாப்பிடு'

*-4-*

ஒவ்வொரு துறவிகளும் குறுநில மன்னர்களாகவும், அரசர்களாகவும், பேரரசர்களாகவும், மேதகு சக்கரவர்த்திகளாகவும் கொலுவோச்சியிருந்தார்கள். சனங்களின் வாழ்விடங்களுக்கு நடுவே எழுந்திருந்த விரியன்பாம்புப் புற்றுகளை அவர்கள் தீண்டாதிருந்தார்கள். மாறாக அவற்றின் பாதுகாப்புக்களை மேலும் வலுப் படுத்தினார்கள். நஞ்சுப் புற்றுகளுக்குக் காவலாக சனங்களையே நியமித்தார்கள். ஆலகால விருட்சங்களை வெட்டி அக்கினியிலே போடாமல், அவற்றை நந்தவனம் என்றார்கள். சனங்களும் நம்பினார்கள்.

சமுத்திரத்தில் பசுமை விதைந்திருந்த தாவாரங்கள் வேரறுந்து கரையொதுங்கி அழுகி நாறிக்கிடந்தன. சனங்களுக்கு நடுவில் வாழ்ந்திருந்த தேவதைகளோ தலைமறைவானார்கள். வண்ணத்துப்பூச்சிகளை வேட்டையாடும் எல்லா உரிமங்களையும் துறவிகள் தங்கள் அங்கிப்பைகளுக்குள் கொண்டு திரிந்தார்கள். அச்சப்பட்ட தேவதைகள் வண்ணத்துப்பூச்சிகளின் சிறகுகளுக்குள் தலைமறைத்து

வாழ்வதை துறவிகள் நல்லாகவே அறிந்து வைத்திருந்தார்கள். வண்ணத்துப் பூச்சிகள் மீதானை வேட்டைகளை இடையறாது விருப்பத்தோடும், ரசிப்போடும் செய்து வந்தார்கள்.

பின்னேரம் ஐந்து மணி.
துனேச வடகுடா. அட்லாண்டிக் பூங்கா.

குடாக்கடலின் ஒரு பகுதியை இயற்கையாகவே உள்ளே விட்டு, அதன்மேல் கண்ணாடிகளாலான மிகப் பிரமாண்டமான கட்டிடமமைத்து, கடல்வாழ் உயிரினங்களை வளர்த்துக் காட்சிப்படுத்தும் பூங்கா. கோடை காலத்தில் உள்ளூர் வெளியூர் சனங்கள் மட்டுமல்ல, தேசங்கள் கடந்து வந்துபோகும் உல்லாசப் பயணிகளும் தவறாமல் கண்டு வியந்து போகும் முக்கியத்துவம் வாய்ந்த கடலுயிரிப் பூங்கா. லூர்த்துராசன் குடியிருப்பிலிருந்து மேற்குத் திசையில் மிக அருகில்தான்.
அட்லாண்டிக் பூங்கா அமைந்துள்ள குடாவுக்கு மேற்குக் கரையோரம் கரடிமுனை. கரடுமுரடான பாறைகளும், தட்டைப் பாறைகளும் படுத்துறங்கும் கரை. உறக்கத்திலுள்ள பாறைகளை உசுப்பி எழுப்புவதுபோல் அடுக்கடுக்காய் வந்து மோதிச் சிதறும் அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைக் கரங்கள். மெல்லிய பருவக்காற்று இதமாக வருடிச் செல்ல, அந்த சுகானுபவத்தை முழுமையாக அனுபவித்தார்களோ இல்லையோ, ஆனால் அந்தக் கரடிமுனையின் ஒரு தட்டைப் பாறையில் இருவரும் அமர்ந்திருந்தார்கள். பவுல் ப்ரூனோ அசதி மிகுதியால் வீட்டிலேயே உறங்கி விட்டான். அப்புவும் லூர்த்துராசனும் மட்டும் பொடிநடையாக வந்து அம்ர்ந்திருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

இங்கு வந்தமர்ந்த கணத்திலிருந்து அப்பு கலங்கிய விழிகளோடுதான் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். இடையிடையே குலுங்கிக் குலுங்கி அழுதார். லூர்த்துராசன் எல்லாவற்றையும் ஈரலித்த கண்களுடன் மவுனமாகவே கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்பு தன்வசமான இராகத்தில் எதையோ பாடினார். கோபத்தோடு அழுதழுது பாடினார்.

ஏ செகமே....! ஏ செகமே....!
அறிவாயோ நீ செகமே?
வாதிக்கிறாரே என்
வலுவிழந்த சனத்தாரை

தகுமோ இது தகுமோ

*சொல்லு பதில் ஏ செகமே.*
*நீசராலே மூட்டிய தீ*
*நிட்டூரம் செய்கிறதே*
*என் சனத்தார் மாமிசத்தை*
*சுட்டுக் கருக்கி*
*வாய் கொள்ளச் சுவைக்கிறதே*
*தகுமோ சொல் ஏ செகமே*

*கடலே! என்னருங் கடலே!!*
*இன்னொருக்கால் குமுறியெழு*
*இன்னொருக்கால் வேகரங் கொள்*
*கொள்ளையளைக் கரமெழுப்பி*
*அள்ளிச் செல் இரக்கமின்றி*
*இக்கொடுமை செய்வாரை.*

தட்டைப்பாறையில் அமர்ந்திருந்த அப்பு பாடி முடித்து அப்படியே மல்லாந்து படுத்தார். அவரது இரு விழிகளாலும் நீர் ஒழுகி தட்டைப் பாறையை உருக்கியது.

லூர்த்துராசன் சற்றுக் குழம்பிப் போனான்.

'அப்பு...., அப்பு, என்னண... அறம் பாடிறியோண?'

லூர்த்துராசன் சடனாக இப்படிக் கேட்பான் என்று அப்பு நினைத்திருக்கவில்லை. பதறியவராக எழுந்தார் அப்பு. 'இல்லயடா ராசா, அந்தப் பொல்லாங்க நான் செய்ய மாட்டன். அந்தப் பாவத்த நான் செய்யமாட்டன் ராசா. ஏதோ.... ஆத்திரத்தில நாச்சொல்ல விட்டுப்போட்டன். அதொரு பொல்லாங்கும் நடவாது ராசா. நான் மனமறிஞ்சு சொல்லயில்ல' அப்பு எப்படித்தான் மறுதலித்துச் சமாதானம் சொன்னாலும்கூட தான் சாபவார்த்தைகள் கொட்டி விட்டதை நினைத்து துக்கப் பட்டார். அப்பு தான் பாடின்ய இந்தப் பாடலுக்காக சத்தியமாகவே வருந்தினார்.

★★★★★

பொறுத்தருள வேண்டும் மக்களே. அப்பு பிலிப்பனின் இந்த இரண்டாம் வருகையானது சுவாரஸ்யமான ஒரு கதையை உங்களுக்குச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பாக இருக்கும் என்று நம்பினேன். அந்த நம்பிக்கையில் காலையிலிருந்து இவர்கள் பின்னால் அலைந்துகொண்டே இருக்கிறேன். குருவிகளுக்கு குத்தரிசிப் பிடியை அள்ளி விசுறுவதையும், மீன் பிடிப்பதையும், புளியாணம் வைப்பதையும், பியர் குடிப்பதையும், பாட்டுப் பாடுவதையும்

படம் காட்டுகிறார்களே தவிர, அப்பு பிலிப்பன் அருளப்பனின் இந்த வருகைக்கான காரணத்தையோ, கதைகளையோ அறிந்துகொள்ளும்படியாக என்னைத் தமது அண்மையில் அணுக அனுமதிக்கிறார்களில்லை. கரடிமுனைத் தட்டைப் பாறையிலமர்ந்து இருவரும் பேசிக்கொள்ளும்போது என்னைத் தள்ளியே நிறுத்தியுள்ளார்கள். தங்களது உரையாடல் எனது காதுகளில் விழுந்துவிடாதபடி மிகவும் அவதானமாக இருக்கிறார்கள்.

மேற்கொண்டு கதையை நான் சொல்வதற்குத் தோதான ஆள் கப்டன் லிங்கேஸ் தெரு ஒன்பதாம் இலக்க வீட்டில் உறங்கிக்கொண்டிருக்கும் பவுல் ப்ரூனோதான். கொஞ்சத் தூரம்தான் வாருங்கள் என் பின்னால். உங்களை கதை வாசிப்போராயல்ல, மனிதரை வாசிப்போராய் ஆக்குகிறேன் என்றெல்லாம் உங்களுக்கு இலவச வாக்குறுதிகள் தரப்போவதில்லை. இவ்வளவுதூரம் கடந்துவிட்டோம், இந்தக் கூப்பிடுதொலைவுவரை நடந்து விடுவோமே.

Kaptein Linges தெரு 9A,
6006 Aalesund
பவுல் ப்ரூனோ தனக்கு உடல் மிகவும் அசதியாகவும், வலியாகவும் இருப்பதால் தான் சற்றுக் கண்ணயரப் போவதாகச் சொல்லி அவர்களோடு வெளியே செல்ல மறுத்து விட்டான். ஆனாலும் அவன் உறங்கவில்லை. அவன் விழிப்பாகவே இருந்தான். வாசற்கதவைத் திறந்து என்னை உள்ளே வரவேற்ற அவ க்கு என்னை அறிமுகஞ் செய்து கொண்டேன். சோபாவில் அமரும்படி சொன்னான். எதிரே தானும் அமர்ந்து கொண்டான். எந்தவித ஆர்ப்பாட்ட, அலங்காரங்களும் இல்லாமல் கதை சொல்லத் தொடங்கினான் பவுல் ப்ரூனோ.

-5-

பெப்பேனியன் அம்மான் செத்துப்போய் இன்று எட்டாம் நாள். அங்கே எட்டாம்நாள் செலவு சடங்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஐம்பதுகளில் நடந்த சாதியொடுக்குமுறைப் போராட்டக் களத்தில் துடிப்புமிக்க இளைஞர்களாக நின்று போராடியவர்களில் மிக முக்கியமானவர்.

**1956**ம் ஆண்டு ஏப்ரல் **10**ம் திகதி செவ்வாய்க் கிழமை. கருகம்பனை புனித செபஸ்தியார் ஆலயப் பெருநாளும், கூத்து மேடையேற்றமும். அண்ணாவி அம்புரோசு தலைச்சனில் கூத்து மேடையேறுகிறது. அரசனாக அண்ணாவி அம்புரோசு.

‘நாங்கள் நிலத்தில் இருக்க கீழ்சாதியள் எங்களைவிட உயரத்தில் இருக்கவோ?, அதுவும் சிம்மாசனத்தில்?’ சில ஆதிக்கசாதிய இளசுகள் பொருமத்

தொடங்கினார்கள். அந்த சலசலப்பு மெல்ல மெல்ல அகண்டு பெருத்தது.

பாதிக்கூத்து நடந்துகொண்டிருக்கும்போது மேடையில் அரசன் கொலுவிருக்க வைக்கப்பட்ட சிம்மாசனத்தை அகற்றிவிட்டு பதிலாக அருகிலிருந்த வீட்டிலிருந்து கொண்டுவந்து ஒரு உரலை வைத்தார்கள். செங்கோலுக்குப் பதிலாக உலக்கை. கூத்து இடையில் நின்று போகிறது.

'எங்களது ஐம்பத்துமூன்று குடும்பங்களின் வியர்வையிலும், இரத்ததிலும் கட்டப் பட்டதே இந்தக் கோயில். அப்படியிருக்க எங்களது இந்தக் கோயில் திருவிழாவில் எங்கள் கலையை அரங்கேற்ற இத்தனை அவமானமா?'

சண்டை மூண்டது. 27நாட்கள் நடந்தது சண்டை. கொதித்தெழுந்த இளைஞர்களை அன்றிருந்த ஆதிக்கசாதிய கத்தோலிக்கத் தலைமை ஒருவாறாக நாசூக்காக ஆசுவாசப் படுத்திக்கொண்டது. தீர்வும், விளைவும்...? 'நமக்காக நாம் ஒரு கிராமத்தை உருவாக்கி, நமக்கெனவே ஓர் ஆலயத்தையும் கட்டியெழுப்புவோம் வாருங்கள் மக்களே' என மிகத் தந்திரமாக ஆதிக்க சாதியினருக்கே இவர்களது ஆலயத்தைத் தாரை வார்த்துக் கொடுக்கப் பண்ணியது அன்றைய கத்தோலிக்கம். மேய்ப்பனுக்குப் பின்னால் நடந்த மந்தைகள்போல் இந்த ஐம்பத்துமூன்று குடும்பங்களைக் கொண்ட பட்டினத்தார் அந்தப் பாதிரியின் பின்னால் தென்திசை நோக்கி நடந்தார்கள். (பட்டினம் என்பது சமூகம் என்பதாகும். நிலமல்ல சனம். மண்ணல்ல, மானிதர்கள்)

நாகதாழைகள், கள்ளி மரங்கள், ஈச்சைகள், காரைகள் என அடர்ந்த நரிக்காடு. காட்டின் தென்கரையில் ஏழாற்றுப் பிரிவின் வடக்குக் கரை. மோயீசன் இஸ்ராயேல் பட்டினத்தாரை பாலைவனத்துக்கு அழைத்து வந்ததுபோல் நம்ம பாதிரியாரும் இந்தப் பட்டினத்தாரை நாகதாழைக் காட்டுத் திடலுக்கு அழைத்து வந்தார்.

அண்ணாவி அம்புரோசு தலைமையில் இளைஞர் சேனை தங்கள் வல்லமை பொருந்திய உழைப்பை அள்ளியிறைத்தது. நாகதாழைகள், கள்ளி மரங்கள், ஈச்சைகள், காரைகள் அக்கினிக்கு இரையாகின, நரிகள் தென்னம்மட்டைகளில் ஏறி கடல் கடந்து ஓட்டம் பிடித்தன. ஐம்பத்துமூன்று குடும்பங்ளைக் கொண்ட பட்டினத்தாரின் மாதாபுரம் எழுந்தது. கப்பல் காத்த கன்னிமாதா ஆலயமும் எழுந்தது. எவரொருவர் பக்க உதவியுமில்லாமல், எல்லாமே இந்தப் பட்டினத்தாரின் உழைப்பில் கட்டுமானம் பெற்றெழுந்ததே. ஆலயக் கட்டுமானப் பணிக்கென யாழ் கத்தோலிக்கத் திருச்சபை ஒரு சுண்ணாம்புக் கட்டியைக்கூடத் தூக்கிப் போடவில்லை. ஆனால் இந்த மாதாபுரப் பட்டினத்தாரின் உழைப்பைத் தொடர்ந்து சுரண்டுவதில் திருச்சபை

தனது விறைத்துப் புடைத்த திருச்சபைச்சட்ட ஆண்தனத்தை நீட்டிப் பிடித்துக்கொள்வதில் எப்போதும் முனைப்பாகவே இருந்தது.

மாதாபுரத்தில் அண்ணாவி அம்புரோசு தலைமையில் அன்றிருந்த இளைஞர்சேனையின் தளபதிகளில் ஒருவர்தான் பெப்பேனியன் அம்மான். மாதாபுரத்தை மேலும் மேலும் கட்டியெழுப்பவும், செழுமைப் படுத்தவும், பாதுகாக்கவும் தொடர்ந்து தன்னை வருத்தி உழைத்தார். தனது பட்டினத்தாரின் உழைப்பை கத்தோலிக்கம் அள்ளுகொள்ளையாகச் சுரண்டுவதை மட்டுப் படுத்தினார். அதேவேளை தேவனுக்குரியதை தேவ க்குக் கொடுங்கள் என தனது பட்டினத்தாருக்கு கட்டாயமாகச் சொல்லி வந்தார். பெற்றும் கொடுத்தார். அம்புரோசு அண்ணாவியாரின் மறைவுக்குப் பின்னும் மாதாபுரப் பட்டினத்தாரின் பொதுத் தேவைகளுக்கான பலவேறு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன, வீதிகள் செப்பனிடப்பட்டன. இவை எல்லாவற்றின் அடியிலும் பெப்பேனியன் அம்மானின் இரத்தமும் வியர்வையும் உறைந்தே கிடந்தது. ஏழாற்றுத் திடலின் எல்லைகளையும், வளங்களையும் தனது பட்டினத்தாரோடு பாதுகாத்து வந்தார். எழுபதுகளின் ஆரம்பத்தில் நோர்வேயின் இழுவைமடித் தொழிலை ஏழாற்றுத் திடலில் பரீட்சித்துப் பார்க்க வந்தவர்களை விரட்டிக் கலைத்ததோடு, மாதாபுரத்துப் பட்டினத்தாரைத் திரட்டி, தீவகத்துக்குள் அந்த இழுவைமடி நாசகார மீன்பிடித் தொழிலை செய்வதற்கு மறுதலிப்புக் காட்டி போராட்டங்களை நடாத்தினார். பூரண வெற்றிகளும் கிடைத்தன. சமுத்திரங்களையும், அவற்றின் வளங்கலையும் பாதுகாக்க மீனவரால் மட்டும்தான் முடியுமே தவிர, அரசாலோ, அரசியல்காரராலோ, அதிகாரிகளாலோ முடியாத காரியம் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். மாதாபுரம் கட்டப்பட்ட காலத்திலிருந்து திருச்சபை மேலிடத்துக்கு பெப்பேனியன் அம்மான் மீது ஒரு கடுப்பு இருந்துகொண்டே வந்தது.

1995ம் ஆண்டு யாழை விட்டுச் சனங்கள் வன்னி நோக்கி பட்டி சாய்த்துக் கொண்டு செல்லப்பட்டதோடு மாதாபுரத்துப் பட்டினத்தாரும் ஓட்டிச்செல்லப் பட்டார்கள். பதின்நான்கு வருடங்கள் காணாத் தேசமெல்லாம் கண்டுகொண்டும், அன்றாடச் சிலுவைகளைச் சுமந்து அல்லலுற்றுத் திரிந்தார்கள். உயிரிகளுக்கான ஒரு சீரான வாழ்வை வாழமுடியாமல் அது எங்கே இருக்கிறது எனத் தேடித் தேடி அலைந்தார்கள். மாதாபுரத்துப் பட்டினத்தார் போலவே கடலைத் தவிர வேறெதுவும் தெரியாத பல பட்டினங்கள் இந்த நிலைக்கு உள்ளாகின.

பன்னிரெண்டாயிரம் சதுர கடல்மைல்களைக் கொண்ட இலங்கையின் கடற்பரப்பில் எழுபத்திமூன்றரைப் பகுதியை சொந்தம் கொண்டவர்களாயிருந்த வடக்குக் கிழக்கு மீனவர்கள் கெண்டைக்காலளவு கடலில்கூடக் கால் வைக்கமுடியாதபடி தடைச் சட்டங்களும், யுத்த மொத்த வலயங்களும் போடப்

பட்டிருந்தன. போதாக்குறைக்கு 2004இல் வந்த சுனாமி ஆயிரக்கணக்கான சனங்களைத் தின்றதுமல்லாமல் மீன்பிடி வளங்களையும் ஒட்டுமொத்தமாகச் சூறையாடிச் சென்றது. பதினைந்துக்கும் மேற்பட்ட இலங்கையின் பாரிய மீன்பிடித் துறைமுகங்களை இது விழுங்கியது. இலங்கைத்தீவின் ஒருலட்சத்தி எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களில் தொண்ணூறு சதவிகிதத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்தச் சுனாமியால் பாதிக்கப் பட்டனர்.

மாதாபுரத்துப் பட்டினத்தார் மீண்டும், பட்ட காயங்களின் வலிகளோடும், இரத்த வாடை மாறாமலும் மாதாபுரத்துக்கு 2009 நடுவில் வந்து சேர்ந்தார்கள். யுத்தம் மக்களைத்தான் நலியப் பண்ணியது கத்தோலிக்கத்தை அல்ல. அது இன்னமும் வேகரங் கொண்டு பருத்துப் புடைத்தது. எல்லாம் இழந்து கோவணத்தாண்டிகளாக தங்கள் மாதாபுரத்துக்கு வந்து சேர்ந்த பட்டினத்தாரை வன்னியில் பயிற்சி பெற்ற பாதிரிகளைக் கொண்டு இரக்கமின்றி வதைக்கத் தொடங்கியது. அன்றாடங் காய்ச்சிச் சனங்களின் உழைப்பை அன்றாடமும் பறித்தது. அயலட்டங்களைச் சுற்றி எட்டுக்கும் மேற்பட்ட ஆலயங்களைப் புனரமைத்தும், புதிதாகக் கட்டியும் வருமானம் பார்க்கத் தொடங்கியது.

தினப்படி வருமானத்தில் பத்தில் ஒன்று, மாதாந்தம் ஒரு நாள் உழைப்பி பூராவும், மாதத்தில் ஒரு தடவை ஒவ்வொரு குடும்பமும் 200ரூபாய் விகிதம் பாதிரியின் தாபரிப்புப் பணம், சுற்றுச்சூழவுள்ள ஆலயங்கள் சராசரி ஒவ்வொரு நாற்பத்தி ஐந்து நாட்கள் இடைவெளியில் திருவிழாக்கள். ஒவ்வொன்றின் திருவிழாவுக்கும் குடும்பத்துக்கு 500, 1000 என கட்டாய பங்களிப்பு. இப்படி இன்னும் நிதி வசூலிப்புக்கான நிறையச் சட்ட வலைகளுக்குள் மாதாபுரத்துப் பட்டினத்தார் வதைக்கப் பட்டார்கள். மதத்தின் பெயரால் நடந்தேறும் இந்த மக்களுக்கெதிரான வாதைகளை பெப்பேனியன் அம்மானால் சகிக்க முடியாமலிருந்தது.

ஏற்கனவே போர்மீண்ட சனங்களைக் குறிவைத்து பன்நாட்டு நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்கின. வெறுங்கைகளோடுள்ள அன்றாடங்காய்ச்சித் தொழிலாளி என்ன செய்வான்? ஒவ்வோ தொழிலாளியும் சராசரி நான்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கடனைப் பெற்றுத்தான் தொழில் போட முடியும். அப்போ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தொழிலாளியும் நான்கு நிதி நிறுவனங்களுக்கு வட்டி கட்டியாக வேண்டும். வருடம் பூராவும் தொழில் நடப்பதில்லை. பருவகால மாற்றங்கள், கடற்சீற்றங்கள், காத்தடி என வருடத்தில் நான்கு மாதங்கள் தொழில் நடவாக் காலங்கள். அந்தச் சமயங்களில் நிதி நிறுவனங்களில் பட்ட கடன்களுக்கு வட்டி செலுத்த முடியாமல் தொழிலாளர்கள் திணறிப் போவார்கள். அந்த சந்தர்ப்பத்தில் கடன் கொடுத்த இந்த நிறுவனங்கள் வந்து தொழில் தளபாடங்களை அப்படியே அள்ளி

ஏற்றிக் கொண்டு போய் விடுவார்கள். இதுதான் இன்றுவரை தொடரும் நிலை. இந்நிலையைக் கொஞ்சம்கூட மதக்கம்பெனிகளும் கரிசனை கொள்ளாமல் மேலும் மேலும் இந்தப் பாவப்பட சங்களைத் தாங்களும் அளவுக்கதிகமாக உறிஞ்சிக் குடிக்கிறார்களே என்ற கடுங்கோபம் பெப்பேனியன் அம்மாக்கு.

இந்தக் கொடுமைகளெல்லாம் கடவுளுக்கே பொறுக்காதவை, நீதியற்றவை என பெப்பேனியன் அம்மான் குரலெழுப்பினார்.

சனத்தின் புனர்வாழ்வுதான் முதன்மையானதே தவிர, அளவுக்கதிகமான ஆலயங்களில்லை என்றும், அன்றாடக் கஞ்சிக்கே அல்லாடும் சனத்திடம் கொள்ளை அடிக்க வேண்டாம் என்றும் பெப்பேனியன் அம்மான் கூக்குரலிட்டார். வன்னியில் பயிற்சி பெற்ற பாதிரிகள் என்றால் சும்மாவா? பெப்பேனியன் அம்மானின் மாதாபுரப் பட்டினத்தாரையே அம்மானுக்கு எதிராகத் திருப்பிவிட்டார் பாதிரியார். நொந்து நொடித்தவராக மாதாபுரத்தை விட்டு வெளியேறி ஒரு கடலோரத்தில் குடிலமைத்து தனியனாகவே வாழ்ந்தார். எட்டு நாளைக்கு முன்பு செத்தும் போனார். அவரைப் பழி வாங்கிய மிதப்பில் கத்தோலிக்க திருச்சபை தனக்குள் கும்மி கொட்டியது. சனத்துக்காக வாழ்ந்த ஒருத்தனைச் சாகடித்தது என்பது ஏதோ சிலுவைப் போரிலேயே வென்றுவிட்டதான பூரிப்பு திருச்சபைக்கு. சொல்லி முடித்த பவுல் ப்ரூனோ மிகவும் கோபமாகக் காணப்பட்டான். அவனது கண்கள் இரத்தச்சிகப்பாக மாறியிருந்தன.

கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டு வரலாற்றை சவ்விழுவை இழுக்காமல் இப்படிச் சுருக்கமாகச் சொல்லி முடிக்க பவுல் ப்ரூனோவால் மட்டும்தான் முடியும் போலுள்ளது. என்னை சொல்லச் சொன்னால் ஐநூறு பக்கங்களுக்குக் குறையாமல்தான் சொல்வேன்.
'ஏதாவது சாப்பிடப் போகிறாயா...? நல்ல புளியாணமும் புழுங்கலரிசிச் சோறும் இருக்கிறது கொஞ்சம் சாப்பிட்டுப் பார்' என்றான் பவுல் ப்ரூனோ.
'இல்லை, வேண்டாம். ரீ குடிப்போம்' என்றேன்.
'உடன் மீனில் ஆக்கிய புளியாணம். ருசியாக இருக்கும். கொஞ்சம் சுவைத்துப் பார்' என்று கட்டாயப் படுத்தினான் பவுல் ப்ரூனோ. ' சரி' என்பதாக தலையசைத்தேன். எழுந்து சென்றவன் சில வினாடிகளில் திரும்பி வந்து ஒரு கண்ணாடிக் குவளையை நீட்டினான்.
'இது என்ன?' என்பதாய் அவனைப் பார்த்தேன்.
'பனஞ்சாராயம். பருகு அதற்குள் நான் புளியாணச் சாப்பாட்டை சூடாக்கி விடுவேன்' என்றான். நன்றி சொல்லியபடி கையில் வாங்கிக் கொண்டேன். வாழ்க்கையில் இன்றுதான் முதன்முதலாக பனஞ்சாராயம் சுவை பார்க்கப் போகிறேன். சமையல் பகுதியிலிருந்து திரும்பி வந்தான் பவுல் ப்ரூனோ கையில்

ஒரு பனஞ்சாராயப் போத்தலுடன்.

‘பிடித்திருந்தால் இன்னும் பருகு. பொறுத்து சாப்பிடலாம்’ என்று சொல்லியபடி பனஞ்சாராயப் போத்தலையும், இரண்டு புளியாண மீன் துண்டுகளை ஒரு சிறு கண்ணாடிக் கோப்பையிலிட்டு என் முன்னால் வைத்து தனது இருக்கையில் அமர்ந்து கொண்டான் பவுல் ப்ரூனோ.

ஒரு மிடறு சுவைத்தேன். நாசித் துவாரங்களில் தொடங்கி தொண்டைக் குழாய் வழியாக அடி வயிறுவரை ஒருவித குளிர்காரத்தை விதைத்துக்கொண்டு சென்றது பனஞ்சாராய மிடறு. நீண்ட காலத்தின்பின் ஒரு சுவையான, இதமான பானத்தை அருந்தும் வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்கு எனது அருமைக்குரிய பவுல் ப்ரூனோவுக்கு என் நன்றிகள். புளியண மீன்துண்டில் சிறிதளவைக் கிள்ளி சுவ பார்த்தேன். நீண்டகாலமாக அடைத்துக்கிடந்த செவ்த்துவாரங்கள் திறக்கும்படியான காரமாகவும், பனஞ்சாரயச் சுவையில் ஊறியா நாவில் கரும்பாகவும் இனித்தது.

பவுல் ப்ரூனோ விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடங்கினான். அவன் பின்னால் நானும் தொடர்ந்து பயணிக்கிறேன் இயடைநடுவில் நழுவிப் போகாமல் நீங்களும் என்னோடு கூட வருகிறீர்கள் என்ற நம்பிக்கையோடு.

பவுல் ப்ரூனோ தொடர்ந்தான்.

*(6)*

1948ம் ஆண்டிலிருந்து அப்பு பிலிப்பன் அருளப்பனும் முபாரக் அலி நானாவும், தங்காலை சோமபாலவும் கொழும்பு கப்பல்த் துறைமுகத்தில் பணியாற்றி வந்தார்கள். சரக்குக் கப்பல்களிலிருந்து இறக்கப்படும் பொருட்களை ஏற்றிச்செல்வெதற்காக துறமுகத்துக்குள் பார ஊர்திகள் வந்து போகும் பிரிவில் ‘செக்-இன் கிளர்க்’ உத்தியோகஸ்தர்களாக மூவவரும் பணியாற்றி வந்தார்கள். இவர்களுக்கு அதிகாரியாக இருந்தவர் ரெயூனியூன் கிரியோல் என்ற ஒரு பறங்கியர். அறுபதாம் ஆண்டு கோடையில் ரெயூனியூன் கிரியோல் ஓய்வு பெற்றுகொண்டு தனது நாட்டுக்கே போய்விட்டார். அவருக்குப் பதிலாக யாழ்ப்பாணம் செ.இராசநாயகம் முதலியாரின் உறவினரான பேரின்பநாயகம் முதலி என்பவர் அன்றிருந்த அரச அதிகாரத்தின் செல்வாக்குகளைப் பயன்படுத்தி பதவியை வாங்கிக்கொண்டு வந்தார். பேரின்பநாயகம் முதலி பதவியேற்றுக்கொண்டு கப்பல்த் துறைமுகத்துக்கு வந்த காலத்திலிருந்து முபாரக் அலி நானாவுடனும், பிலிப்பன் அருளப்பன் அப்புவுடனும், தங்காலை சோமபாலாவுடனும் ஒரே ஏறுப்பாடாகவே இருந்து வந்தது. துறைமுகப்

பணிகள் தொடர்பாக எந்தவித அடிப்படை அறிவோ, விபரங்களோ தெரியாமல், செல்வாக்கைப் பயன்படுத்திப் பதவியை வாங்கிக்கொண்டு வந்த முதலிக்கும் அப்புவுக்கும், அலிநானாவுக்கும் சோமபாலாவுக்குமிடையில் தினமும் பெரிய புடுங்குப்பாடாகவே இருந்தது. கப்பல்த்துறைமுக நடைமுறைகள் பற்றித் தெரியாமல்த் திணறிய பேரின்பநாயகம் முதலிக்கு அப்புவும், அலி நானாவும், சோமபாலாவும் பெரிய மனது கொண்டு துறைமுக நடைமுறை, செயற்பாட்டுகள், விதிகள் போன்ற விபரங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். எல்லாவற்றையும் கேட்டு உள்வாங்கிக் கற்றுக் கொண்டாலும் பேரின்பநாயகம் முதலிக்கு ஒரு திமிரும், தடிப்பும் தலை தூக்கவே செய்தது. ‘எளிய துலுக்கப் பயலும், கீழ்சாதி உறண்டைய ம், மோட்டுச் சிங்களவ ம் எனக்குப் படிப்பிக்கிறதோ?’ என்ற உறுத்தலும், கெப்பேறும் முதலிக்கு. தொட்டதற்கெல்லாம் அப்பு மீதும், அலி நானா மீதும், சோமபால மீதும் குறை கண்டு பிடிப்பதிலும், நொட்டை சொல்லுவதிலுமாகவே பணிக்காலம் நகர்ந்தது. இப்படி இழுபறிகளோடு ஒருவாறாக ஒரு வருடத்தை முதலியோடு ஓட்டிவிட்டார்கள் அப்புவும் அலி நானாவும், சோமபாலவும்.

அறுபத்தியோராம் ஆண்டு நோன்புப் பெருநாளுக்காக ஊருக்குச் சென்றுவர விடுப்புக் கேட்டார் முபாரக் அலி நானா. மறுத்து விட்டார் முதலி. அப்புவும், சோமபாலவும் தங்களால்ல் முடிந்தவரை பேசிப் பார்த்தார்கள். இணங்கவில்லை முதலி. அலி நானாவின் இரண்டுவாரப் பணிகளையும் தாமே செய்வதாகவும், அதற்கு எந்தவித ஊதியமும் வேண்டாம் என்றும் கேட்டுப் பார்த்தார்கள் அப்புவும் சோமபாலவும். முதலி முடிந்த முடிவாகவே மறுதலித்து விட்டார். முதலியோடு எப்படித்தான் பேசிப் பார்த்தாலும் அனுமதி கிடைக்கப்போவதில்லை என்பதை அப்பு வும் சோமபாலவும் உணர்ந்துகொண்டார்கள். ஒப்பேறாக் காரியத்துக்காக முயற்சி செய்வது வீண் என்ற முடிவுக்கு வந்த அப்புவும் சோமபாலவும் வந்துவிட்டார்கள். மேற்கொண்டு முதலியுடன் விவாதிப்பதை இருவருமே விட்டுவிட்டார்கள்.

ஊரிலிருக்கும் தனது மனைவியுடனும் ஐந்து பிள்ளைகளுடனும் இந்த நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதாக இருந்த முபாரக் அலி நானாவுக்குப் பெருத்த ஏமாற்றம். ஐந்து பிள்ளைகளும் மனைவியும் அலி நானாவின் வருகையை எதிர்பார்த்துப் எப்படியாகப்பட்ட பெருத்த கனவுகளோடு இருப்பார்கள் என்பதை முபாரக் அலி நானா நன்றே அறிவார். முபாரக் அலி நானா இந்த நோன்புப் பெருநாளுக்கு ஊருக்குப் போகாமால் விடுவதால் குடும்பத்தார் அடையப் போகும் பெருத்த ஏமாற்றம் எப்படியாகப் பட்டதென்பதை அலி நானாவால் நினைத்துப் பார்க்கவே பெரும் விம்மல் புடைத்த துயரமாக இருந்தது, அலி நானா எதையும் வெளிக்காட்டா விட்டாலும், அவர் தன் ள்ளே துயரப் படுவதை அப்புவும் சோமபாலவும் உணர்ந்து கொள்வதில் எந்த-

வித சிரமும் இருக்கவில்லை. முதலியின் அதிகார மமதைக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்பதில் அப்புவும் சோமபாலவும் மிகமிக ஆவேசமாகவே இருந்தார்கள். அதற்கான பொருத்தப்பாடான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

சில மாதங்கள் கடந்தன.

1961 மார்கழி 24 ஞாயிற்றுக்கிழமை. நத்தார் விருந்துக்காக கொழும்பு கொச்சிக்கடையில் குடியிருக்கும் அந்தோனி குரூஸ் தனது இல்லத்துக்கு அப்புவையும், அலி நானாவையும், சோமபாலவுவையும் அழைத்திருந்தான். அந்தோனி குரூஸ் வங்காலையைச் சேர்ந்தவன். இவர்கள் மூவருடன்தான் அவனும் கப்பல்த்துறைமுகத்தில் பணியாற்றுகிறான். இவர்களைவிட அந்தோனி குரூஸ் மிகவும் இளையவன். கடந்த வருடம்தான் தனது ஊரைச் சேர்ந்த மரிய கிளாறா கூஞ்ஞ என்ற தான் காதலித்து வந்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான்.

கூஞ்ஞ-குரூஸ் இரண்டு பட்டினத்தாருக்கும் இந்தக் காதலில் உடன்பாடில்லாததால் இரு பட்டினத்தாருமே இந்தத் திருமணத்துக்கு ஒப்புதல் மறுத்து விட்டார்கள். அதனால் அந்தோனி குரூஸ் இரவோடு இரவாக மரிய கிளாறா கூஞ்ஞயை அழைத்துக்கொண்டு கொழும்பு வந்து விட்டான். ரெயூனியூன் கிரியோல் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு சில வாரங்களின்முன் அவரது தலைமையிலேயே அந்தோனி குரூஸ், மரிய கிளாறா கூஞ்ஞ இருவரின் திருமணமும் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் நடந்தேறியது. அப்புவும் முபாரக் அலி நானாவுமே சாட்சிக் கையெழுத்திட்டார்கள். அந்தோனி குரூஸ், மரிய கிளாறா கூஞ்ஞ இருவரது திருமண நிகழ்வுகளை தனியனாக நின்று மிகச் சிறப்பாக நடாத்தி முடித்தவன் சோமபால.

அந்தோனி குரூஸ் வீட்டில் நத்தார் விருந்தை முடித்துக்கொண்டு அப்புவும், அலி நானாவும், சோமபாலாவும் புறப்படும்போது மணி இரவு ஒன்பதாகியிருந்தது.

மூருவரும் குடியிருக்கும் துறைமுகப் பணியாளர் குடியிருப்புக்குச் செல்வதற்கு சைக்கிள் ரிக்ஷா ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தார்கள். தெருவில் எதுவும் தட்டுப்படவில்லை. பொடிநடையாக நடக்கத் தொடங்கினார்கள் மூவரும். வழியில் ஒரு தெருவிளக்குக் கம்பத்தினருகே சற்றுத் தள்ளாடியபடி நின்ற ஒரு மனிதனை சிலர் சூழ்ந்துகொண்டு ஏதோ பிரச்சனைப் பட்டுக்கொண்டு நின்றார்கள். கூடி நின்றவர்கள் அந்த மனிதனை சிங்களத்தில் அதட்டியும் திட்டிக்கொண்டும் நின்றார்கள். நடுவில் அகப்பட்ட மனிதனோ நாவுளறும் ஆங்கிலத்தில் எதையோ புலம்பிக்கொண்டு நின்றான். அப்புவும் அலி

நானாவும் சோமபாலவும் கூட்டத்தாரின் அண்மையில் சென்று பார்த்தார்கள். சூழ்ந்து நின்றவர்களது மத்தியில் அகப்பட்டுக்கொண்டு நின்ற மனிதனை அடையாளம் கண்டுகொண்டார்கள். அது பேரின்பநாயகம் முதலிதான். அதற்குள் தகவல் அறிந்து அந்தோனி குரூஸும் வந்து சேர்ந்துவிட்டான். அங்கு கூடி நின்றவர்களுக்கு அந்தோனி குரூஸை நன்றாகவே தெரியும். கோபத்தோடு நின்ற அவர்களோடு சோமபாலவும் அந்தோனி குரூஸும் சிங்களத்தில் உரையாடி, ஒருவாறு சமாளித்து பேரின்பநாயகம் முதலியை விடுவித்தார்கள் பேரின்பநாயகம் மீதான சிங்கள இளைஞர்களின் குற்றச்சாட்டு, இந்தப் பகுதிப் பெண்கள் சிலரோடு பேரின்பநாயகம் முதலி பாலியல் உபாதைகளை மேற்கொண்டார் என்பது. இந்த விடயத்தில் முதலி பலகீனமானவர் என கப்பல்த் துறைமுகத்து ஊழியர்களிடையே அரசல் புரசலாகக் கதைகள் உலாவினாலும்கூட, அதனை அப்புவோ, அலி நானாவோ, சோமபாலவோ, அந்தோனி குரூஸோ நம்பவில்லை. ஆனால் இப்போ நம்பாமல் இருக்க முடியவில்லை. விடுவிக்கப்பட்ட முதலியை நால்வரும் சேர்ந்து அவரது குடியிருப்புக்கு அனுப்பி வைத்தார்கள்.

அடுத்த இரண்டு நாட்களும் திங்கள், செவ்வாய் நத்தார் விடுமுறைதினங்கள் கழித்து டிசம்பர் 27ம் திகதி புதன்கிழமைதான் பணியிடத்தில் பேரின்பநாயகத்தைக் கண்டார்கள் அப்புவும், அலி நானாவும், சோமபாலவும். இவர்கள் மூவரையும் கண்டதும் பார்க்காதது போலவே மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு தனது காரியாலயத்துக்குள் நுழைந்து கொண்டார் பேரின்பநாயகம். மதியத்திற்குப் பின் பேரின்பநாயகம் முதலி தனது காரியாலயத்துக்கு அப்புவை வரும்படி அழைப்பதாகத் தகவல் வந்தது. அப்புவுக்கு ஒரே படபடப்பு. காரணம், அப்புவுக்கு இந்த வருடத்துக்கான பணி இன்னமும் இரண்டு தினங்கள்தான். நாளை மறுநாள் 29ம் திகதி பணியை முடித்துக்கொண்டு ஒரு வார புதுவருடப்பிறப்புக் கொண்டாட்டத்துக்கான விடுப்பில் ஊருக்குப் போய் வரும் அனுமதியை ஏற்கனவே அப்பு பெற்றிருந்தார். அந்த விடுப்பில் பேரின்பநாயகம் கை வைத்து விடுவானோ என்ற அச்சம் அப்புவுக்கு. அப்பு பயந்தது போலவே நடந்தது.

இன்று திடீரெனத் தனது காரியாலயத்துக்கு அப்புவை அழைத்த பேரின்பநாயகம் அப்புவின் ஒருவார விடுப்பை தான் தள்ளுபடி செய்து விட்டதாக அறிவித்தார். இருவருக்குமிடையில் பெரும் வாக்குவாதம் நடந்து, முற்றிப் பருத்தது. பேரின்பநாயகம் அப்புவை எட்டிப்பிடித்து அடிப்பதற்காகக் கை ஓங்கினார். அவ்வளவுதான். வாசலின் வெளிப்புறத்தில் நின்ற முபாரக் அலி நானா ஒரே பாய்ச்சலாக வந்து முதலியில் கை வைத்து விட்டார். முதலியை மூலைச் சுவருக்குள் குந்தவைத்து அப்புவும் அலி நானாவும் மிகத் தாராளமாகவே மிதித்தெடுத்து விட்டார்கள். முதலி கையெடுத்துக் கும்பிட்ட

பின்பே விட்டார்கள்.

தங்கள்மீது விசாரணைகள் வரும் என்று எதிர்பார்த்தார்கள் அப்புவும், அலி நானாவும். ஆனால் அப்படியெந்த ஏற்பாடுகளும் முன்னெடுக்கப் படுவதாகத் தெரியவில்லை. இவர்களிடம் தான் அடி வாங்கியது வெளியில் தெரிந்தால் அவமானம் எனக் கருதினாரோ என்னவோ மவுனமாகவே இருந்துவிட்டார். அப்படி எந்தவித அசம்பாவிதமும் நடந்ததாகவே முதலி காட்டிக் கொள்ளவில்லை. மாலை பணி முடிவதற்கு சற்று முன்னதாக அப்புவுக்கான ஒருவார விடுப்பு அனுமதிக் கடிதம் கொடுக்கப் பட்டது. அந்தக் கடித்ததுடன் இணைத்து தனது பணிவிலகல் கடிதத்தையும் எழுதிக் கொடுத்தனுப்பினார் அப்பு. ஆனாலும் இவர் தானாகவே பணிவிலகல் செய்தாலும்கூட ஒருமாதகாலம் கட்டாய பணி செய்தே ஆகவேண்டும். இல்லையெனில் இவரது ஓய்வூதியத்தில் ஆறு மாதகாலம் வெட்டப்படும் என்ற தகவலை முதலி இவருக்கு தனது பணியாளன் மூலம் சொல்லி அனுப்பினார். ஆறுமாதமென்ன, முழுவதையும் நீயே வைத்துக்கொள். எதுவும் தேவையில்லை எனக்கு என அப்பு முதலிக்குச் சொல்லியனுப்பிவிட்டு, அன்றே ஊருக்குப் புறப்பட்டு வந்து விட்டார். அப்புவுக்கு ஒரேயொரு கவலை. முபாரக் அலி நானாவை தனியாக விட்டுவிட்டு வருகிறோமே என்பதுதான் அது. ஆனாலும் அந்தோனி குரூஸ் மற்றும் சோம பாலா நிச்சயம் அலி நானாவுக்குத் துணையாக இருப்பார்கள் என்ற சிறு நம்பிக்கை அவருக்கு இருந்தது. முபாரக் அலி நானாவிடமும், அந்தோனி குரூஸிடமும் சோம பாலாவிடமும் விடை பெற்றுக்கொண்டு அப்பு அன்றே தீவுக்குத் திரும்பிவிட்டார்.

கார்த்திகையிலிருந்து மாசி மாதம்வரை வழிவலைத் தொழில் நடக்கும் காலம். மீன்பிடிபாடு அதிகமான பருவகாலமும் இதுதான். மீனவர்களுக்கான பேரின்பக் காதலைப் பொழியும் காலம். அப்பு ஊருக்கு வந்ததும் முதல் வேலையாக தனக்கான தொழிலைப் போட்டுக் கொண்டார். தனக்கான சிறு தோணியொன்றையும் செய்து, நிகழ்ந்துகொண்டிருக்கும் பருவகாலத்துக்குரிய தொழிலான வழிவலைத்தொழிலையும் ஏற்படுத்திக் கொண்டார். பருத்தி நூலில் பின்னப்பட்ட வெண்நூல் வலைகளும், தொழிலாளர்கள் தாங்களே தங்களது சுய முயற்சியால் தாழம் தும்புகளிலிருந்து நூல் திரித்துப் பின்னப் பட்ட வலைகளுமே பாவனையிலிருந்த காலம் மறைந்து, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நைலோன் வலைகள் பாவனைக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஆரம்பகாலம் அது. வெண்நூல் வலைகள், தாழம்வலைகளில் பிடிபடும் மீன்களைவிட இந்த நைலோன் வலைகளில் அதிகளவு மீன் பிடிபாடு நடந்தது. பல கரையோரக் கிராமங்களில் இந்த நைலோன் வலை பாதகமானது எனவும், தடை செய்ய வேண்டும் எனவும் குரல்கள் எழுந்தன. எழுந்த மாத்திரத்தில் அடங்கியும் போயின. அப்பு தனது தோணியில்

நைலோன் வலைத் தொழிலையே ஆரம்பித்தார். **1961**ம் ஆண்டு மார்கழி மாதம் **31**ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை கப்பல் காத்த கன்னிமாதா ஆலயத்தில் **62**ம் வருடத்தை வரவேற்று நடந்த சாமத்திருப்பலி முடித்து, அப்புவின் தோணி கடலில் இறக்கப் பட்டது. வருடப்பிறப்பு அன்று பணியாரம் சுட்டு, மாடு வெட்டி உறவுகளுக்கு விருந்து வைத்து, வருடப்பிறப்பின் முதல்நாள் உழைப்பை அப்படியே கோயிலுக்குக் காணிக்கையாக ஒப்புவித்தார்.

அப்பு தனியன். தனதுன் சிறுதோணியில் அவர்தான் கப்பித்தான், அவர்தான் மாலுமி, அவர்தான் தண்டையல். அப்புவின் சீவியப்பாடு வெகு சிறப்பாக நகர்ந்தது. மனைவி அன்னபூரணியும் அப்புவும் தங்களது சிறு குடிலில் காதலோடு காலங்களை சுவைத்தார்கள்.

அப்புவும் அன்னபூரணி ஆச்சியும் தமது சிறு குடிலில் காதல்வாழ்வைச் சுவைத்தப்டி காலத்தை விரட்டிச் சென்றார்கள் என்பதை சுவைய பவம் கண்டவனாகவே பவுல் ப்ரூனோ கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான். இரண்டாவது சுற்று பனஞ்சாராயத்தை அவனே எனது வெற்றுக் கோப்பையில் வார்த்தான். 'குடி' என்பதாக கண்களால் சைகை செய்தான். பவுல் ப்ரூனோ கதை சொல்லும் பாங்கு உங்களில் யாருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதிகாலையிலிருந்து அப்புவுக்கும், லூர்த்துராசனுக்கும் பின்னால் கதை தேடி அலைந்ததைவிட நான் இவனிடமே கதை கேட்டிருக்கலாம்.

பவுல் ப்ரூனோ எழுந்து அடுக்களைப் பக்கம் சென்று சற்று நேரத்தில் திரும்பி வந்தான். யன்னலைத் திறந்து ஒரு சிறங்கை தானியத்தை வீசி எறிந்தான். குருவிகளின் கீச்சுக் குரல்கள் அல்லோல கல்லோலப் பட்டன.

'இவனே ஒரு நாடோடிக் குருவி, இவன் நாடோடிக் குருவிகளுக்குத் தீனி போடுகிறான்' என்று சொல்லியபடியே வந்து சோபாவில் அமர்ந்தான். 'உனக்கு முட்டை பிடிக்குமல்லவா?' என்று கேட்டான். 'ஆம்' என்று தலையசைத்தேன். 'சரி குசினிக்குள் வா உனக்கு முட்டை பொரித்துத் தருகிறேன்' என்று சொல்லியவாறே எழுந்து அடுக்களைக்குள் சென்றான். அவனைப் பின் தொடர்ந்தேன். ஒரு பழைய மரக் கதிரையை எடுத்துவைத்து அதில் உட்காரச் சொன்னான். உட்கார்ந்தேன். மின்சார அடுப்பை இயக்கி அதில் இரும்புச் சட்டியொன்றை ஏற்றினான். சட்டி சூடாகி வந்ததும் சூரியகாந்தி எண்ணையில் சிறிதளவு சட்டியில் ஊற்றினான். 'தேங்காயெண்ணைக்கு இருக்கும் சுவை வேறெந்த எண்ணைக்கும் வராது' என்றான். சில வினாடிகளிலேயே எண்ணை சூடாகியது. சிறிது கடுகைக் கிள்ளி அதில்ப் போட்டான். இவனென்ன, முட்டை பொரிப்பதாகச் சொல்லிவிட்டு கடுகைப் பொரிக்கிறானே என எனக்குள்

குழம்பினேன். பின் கடுகு பொரிந்து வெடித்துவர சிறிதளவு பெருஞ்சீரகத்தையும் கிள்ளி அதில்ப் போட்டான். அவை பொரிந்து கொண்டிருக்கையிலேயே உள்ளிப்பூண்டு ஒன்றை முழுதாகவே எடுத்து நசித்து, தோலை நீக்கிவிட்டு அதற்குள் போட்டுப் பொரித்தான். பின் கறிவேப்பிலை கொஞ்சம். அவை பொரிந்துகொண்டிருக்கும்போதே பெரிய வெங்காயம் ஒன்றை எடுத்து உரித்து மெல்லிய சீவல்களாக நறுக்கி அதில் போட்டான். கோது நீக்கிய பத்துப் பன்னிரண்டு கருவண்டு இறால்களை எடுத்து ஒரு கிண்ணத்தில் இட்டு அளவான உப்பும், மிளகாய்த்தூளும் இட்டுக் கலந்து வைத்தான். சட்டியில் பொரிந்துகொண்டிருந்த தாழிப்பு பொன்நிறமாக வந்ததும் இறால் கலவையை அதனுள் கொட்டிவிட்டு ஆவி வெளியேறாமல் இரும்புச் சட்டியை மூடினான். மூன்று கோழிமுட்டைகளை எடுத்து ஒரு கிண்ணத்திலிட்டு நன்றாக நுரை வரும்வரை அடித்துக் கூழாக்கினான். தாழிப்புடன் கலந்து இறாலின் பொரியும் வாசம் நாசியைச் சீண்டியது. இறாலும் நன்றாகப் பொரிந்து வந்ததும் ஒரு தக்காளிப்பழத்தை எடுத்து வட்டம் வட்டமாக வெட்டி பொரியலின்மேல் பரத்தி அடுக்கி மீண்டும் சட்டியை மூடினான். ஒரு நிமிடம் கடந்தபின் மூடியைத் திறந்து முட்டைக் கலவையை பரவலாக சட்டியில் ஊற்றி மீண்டும் மூடிவிட்டு அடுப்பின் வெப்பத்தைக் குறைத்துக்கொண்டான். மூன்று நான்கு நிமிடங்களில் மூடியைத் நீக்கிவிட்டு ஒரு சாப்பாட்டுக் கோப்பையால் சட்டியை மூடிப் பிடித்துக்கொண்டு அப்படியே தலைகீழாகக் கவிழ்த்து விட்டான். சாப்பாட்டுக் கொப்பையில் வட்ட வடிவமாகவும், அழகாகவும், நல்ல வாசனையாகவும் இருந்தது முட்டைஇறால் பொரியல். இருவரும் அடுக்களையை விட்டு வந்து மீண்டும் சோபாவில் அமர்ந்து கொண்டோம்.

பனஞ்சாராயத்தின் மூன்றாவது சுற்றை எனது வெற்றுக் கோப்பையில் வார்த்தான். பொரியலைச் சுவைத்தபடியே மூன்றாவது சுற்றை ஆரம்பித்தேன்.

-7-

1962ம் ஆண்டு தைமாதம் 20ம் திகதி சனிக்கிழமை. காலை ஏழு மணியிருக்கும். அப்பு வங்குகள் நிறைந்த மீன்களுடன் தனது தோணியைக் கரையேற்றிவிட்டு நங்கூரத்தைத் தூக்கியபடி நிமிர்ந்து பார்த்தார். கரையில் மீன் வாங்கக் காத்து நின்ற வியாபாரிகள் கூட்டத்தாரின் நடுவே முபாரக் அலி நானா முகம் நிறையச் சிரிப்பைச் சுமந்தபடி நின்றிருந்தார். அப்பு தூக்கிய நங்கூரத்தைக் கரையில் எறிந்துவிட்டு ஓடிச்சென்று அலி நானாவை இறுகக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இருவரும் தமது பொசிப்புத் தீருமட்டும் முத்தங்களைப் பரிமாறிக் கொண்டனர். இருவரது கண்களும் கலங்கி வழிந்தன. கரைநீளம் நின்ற மனிதர்களில் எல்லாக் கண்களும் இருவரையும் இமை மூடாது பார்த்திருந்தன. ‘பிலிப்பு, நீயில்லாத எடத்தில எனாக்கென்ன சோலி? வந்திட்டன்’ என்றார்

முபாரக் அலி நானா.

ஊரில் முபாரக் அலி நானாவுக்கு பார்ப்பதற்குச் சோலிகளா இல்லை? நான்கு ஆண் மக்களும், ஐந்தாங்காலாக ஒரு செல்ல மகளும். மூத்த மகன்கள் மூவர் சடங்கு கட்டிவிட்டார்கள். மூத்தவன் ஆப்தீன் யாழ்ப்பாணம் பெரியகடையில் ‘ஆப்தீன் ரெயிலரிங்’ என தையல்நிலையம் நடாத்தி வருகிறான். நவீன ஆடை வடிவமைப்புக்களில் பிரபல்யமாக விளங்கியது ஆப்தீனின் தையல் நிலையம். இரண்டாமவன் சலீம் சாவகச்சேரி நகர மத்தியில் ‘சலீம் அலி கஃபே’ வைத்து நடாத்தி வருகிறான். கொத்துரொட்டிக்குப் பிரபல்யமான உணவு விடுதியாகத் திகழ்ந்தது அது. மூன்றாமவன் இப்ராஹிம் எருக்கலம்பிட்டியில் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வைத்து மீன்பிடியும், கருவாட்டு வாடியும் நடாத்தி வருகிறான். நான்காமவன் அமீனும், ஐந்தாங்கால் ஷெரீனாவும் நாச்சிக்குடாவில் தாயார் ஆயிஸாவுடன் வாழ்கிறார்கள். அமீன் ஒருமரச் சிறுதோணி வைத்து தூண்டிவலைத்தொழில் செய்து வருகிறான். மகன்கள் இப்படி ஆளுக்கொரு தொழில்களில் உயர்ந்திருக்கும்போது முபாரக் அலி நானாவுக்கு செய்வதற்குச் சோலிகளா இல்லை. அவர் நாச்சிக்குடாவுக்கு வந்து இளைய மகன் சலீமுடன் தொழிலை இன்னும் சற்று விஸ்தரித்துக்கொண்டு ஈடுபடத் தொடங்கினார்.

அப்புவுக்கு ஒரேயொரு வருத்தம். கவுமேந்து வேலையிலிருந்து ஓய்வு பெற்றால் சாகும்வரை ஓய்வூதியம் கிடைத்திருக்கும். இன்னும் சில வருடங்கள்தான் உண்டு ஓய்வு பெற. அதனையும் அலி நானா உதறி எறிந்துவிட்டு வந்தார் என்பதுதான். அதற்குக் காரணம் தான்தானே என்ற உறுத்தலும் அப்புவுக்கு இருந்தது. ஆனாலும் கப்பல்த்துறைமுகப் பணியில் கிடைக்கும் மாதாந்த ஊதியத்தை விடவும் சுய தொழிலில் அலி நானா இரட்டிப்பாக உழைக்கும் வல்லமையுடையவர் என்பது அப்புவுக்கு சற்று ஆறுதலைத் தந்தது.

அப்புவுக்கும் அலி நானாவுக்கும் பொதுவான ஒரு துயரம் இருந்தது. அது என்னவெனில், அந்தோனி குரூஸை தனித்து விட்டு வந்து விட்டோமே என்பது. இருப்பினும் தங்காலை சோமபால இருக்கிறான். அவர்கள் இருவரும் ஒரே வயதையுடைய இளைஞர்கள். ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக நிச்சயம் இருப்பார்கள். அந்தோனி குரூஸ் சுழியன். தப்பிவிடுவான்.

அப்புவின் சிறு குடிசையில் அன்னபூரணம் ஆச்சியின் கைப்பக்குவத்தில் நல்ல அரைத்த உடன்மீன் குழம்பும், அறக்கீரைச் சுண்டலும், கணவாய்ப் பொரியலும் என அழகான விருந்து  முபாரக் அலி நானாவுக்கு அன்று.

எழுபதுகளின் ஆரம்பத்திலேயே முபாரக் அலி நானாவின் இளைய மகன் அமீனும்,

ஐந்தாங்கால் செல்லமகள் ஷெரீனாவும் சடங்கு முடித்துக்கொண்டார்கள். மண்கும்பானிலிருந்து கிடைத்த நல்ல சம்பந்தம். ஒரே குடும்பத்துக்குள் ஒன்றுமாத்தாக அமீன், ஷெரீனா இருவருமே மணம் முடித்துக்கொண்டு மண்கும்பானுக்கே போய் விட்டார்கள். இப்போ முபாரக் அலி நானாவும், மனைவி ஆயிஸாவும் நாச்சிக்குடாவில் தனியன் களாகவே இருக்கிறார்கள். நாச்சிக்குடாவில் குடியிருந்த அந்தக் கொஞ்சச் சனங்களுக்காக அலி நானா ஒரு பலசரக்குக் கடையை வீட்டுக் காணிக்குள்ளேயே தொடங்கினார். சனங்களுக்கு அது மிகப்பெரும் ஆறுதலாக இருந்தது. அத்தோடு முபாரக் அலி நானா தூண்டிவலைத் தொழிலையும் கை விடவில்லை. தனியனாகவே செய்து வந்தார்.

பவுல் ப்ரூனோ காலங்களை வேகமாகக் கடக்கத் தொடங்கிவிட்டான் என்பது விளங்கிவிட்டது. கதை சொல்வதில் அவன் சலிப்படையவில்லை என்பது தெரியும், அதேவேளை தான் சொல்லவந்த கதைகளை சொல்லிவிட வேண்டுமென்பதில் அவசரம் காட்டுகிறான் என்பது புரிந்து விட்டது. பவுல் ப்ரூனோவின் கைப்பக்குவத்திலான முட்டைஇறால் பொரியலில் பாதிக்குமேல் சாப்பிட்டு முடித்து விட்டேன். அதன் சுவை பனஞ்சாராயத்துக்கு கனகச்-சிதமாகப் பொருந்தியிருந்தது.

பவுல் ப்ரூனோ தொடர்ந்தான். 4ம் திகதி செவ்வாய்க்கிழமை. புரட்டாதி மாதம், 1990ம் வருடம். மாலை ஆறுமணி. சாககச்சேரி மசூதிக்கு முன்னால் தொழுகை முடித்துவிட்டு உரையாடிக்கொண்டு நின்ற சில முஸ்லிம் இளைஞர்களுடன், அந்தப் பகுதி இயக்க ஆதரவாளன் எனச் சொல்லப் படுபவன் அந்த இளைஞர்களை வலிந்த சண்டைக்கு இழுத்தான். வாய்த்தர்க்கம் வலுத்து வந்தபோது அங்கு வந்த முஸ்லிம் பெரியவர்கள் சிலர் தலையிட்டு விலக்கி வைத்தனர். அன்றிரவு மசூதியைத் தாக்கும் நடவடிக்கையிலும் இந்த ஆதரவாளனின் ஆதரவாளர்கள் மேற்கொண்டார்கள். அவர்களை முஸ்லிம்மக்கள் பிடித்து சாவகச்சேரி இயக்கப் பொறுப்பாளனிடம் ஒப்படைத்தார்கள். இயக்கப் பொறுப்பாளனோ "இனிமேல்த் தமிழர ஆத்திரப் படுத்தாமல் நடந்து கொள்ளுங்கோ" என்று குற்றவாளிகளைப் பிடித்துக்கொண்டு வந்து ஒப்படைத்தவர்களுக்கு அறிவுறுத்தியதோடு, குற்றவாளிகளையும் விடுவித்தான். ‘தமிழர ஆத்திரப்படுத்தாதேங்கோ எண்டால், அப்ப நாங்கள் ஆரு?’ என்றொரு குரல் கூட்டத்தார் மத்தியிலிருந்து. ‘ஆர்ரா பூனா முன்னால வா’ என ஆத்திரத்தோடு கத்தினான் பொறுப்பாளன். கூட்டத்தார் மவுனமாகக் கலைந்து சென்றார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. 1990ம் ஆண்டு. ஐப்பசி 14ம் திகதி. ஐப்பசியிலேயே பனிமூட்டம் நாச்சிக்குடாமீது படரத் தொடங்கிவிட்டது. காலை ஆறுமணிக்கு

முபாரக் அலி நானா தூண்டிவலைத் தோணியைக் கரையேற்றிவிட்டு மீன்களைக் கூடையில் நிறைத்துக்கொண்டிருந்தார். பனிமூட்டங்களை விலத்தி அலி நானாவின் இரண்டாவது மகன் சலீம் பதறிப்பட்டுக்கொண்டு வந்தான். திடீரென மகனைப் பார்த்ததும் முபாரக் அலி நானாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மகனின் முகத்தில் அச்சம் அப்பியிருக்கக் கண்டார்.

சாவகச்சேரியில் முஸ்லிம் பட்டினத்தாருக்கு விரோதமான காரியக் கோலங்களை வரைந்து விடுவதற்கு புள்ளிகள் இடப்பட்ட சேதியை மகன் சலீம் விபரித்தான். அத்தோடு கடந்த மாதம் இயக்கப் பொறுப்பாளனிடம் ‘தமிழர ஆத்திரப்படுத்தாதேங்கோ எண்டால், அப்ப நாங்கள் ஆரு’ என்று கூட்டத்தார் மத்தியிலிருந்து தான் கேள்வி எழுப்பியதை அவர்கள் அவதானித்து வைத்து, தனக்கெதிராக ஏதாவது பொல்லாங்கு செய்யக்கூடும் என்ற அச்சத்தையும் தந்தையிடம் சொன்னான். மகன் அதீதமாகக் கற்பனை செய்வதாக அலி நானா எண்ணிக்கொண்டார்.

இப்படியெல்லாம் அதீதமாகக் கற்பனை செய்து அச்சப்பட வேண்டியதில்லை. அசம்பாவிதங்கள் நடந்தேற எவ்வித காரண காரியங்களுமில்லை என மகனுக்கு எடுத்துரைத்து மீண்டு அன்று மதியமே ஊருக்கு அனுப்பி வைத்தார். யாரோ விசமத்துக்கு தேவையற்று அவிழ்த்துவிட்ட கட்டுக் கதைகளை நம்பி மகன் பயத்தில் உளறுவதாகவே முபாரக் அலி நானா நம்பினார். தவிரவும் மூத்த மகன் ஆப்தீனின் இரண்டு ஆண்மக்கள் ராஃபிக் 26வயது, றஹீம் 24வயது, 83இல் இருந்து நீண்டகாலப் போராளிகளாக இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க இப்படியொரு மோட்டுச் சங்கதிகள் எப்படி நடக்கக்கூடும். வீண் புரட்டுக்களை மகன் சலீம் நம்பிக்கொண்டு இங்கு பதறியடித்து ஓடி வந்ததை நினைக்க அலி நானாவுக்கு கேலித்தனமாக இருந்தது.

மறுநாள் திங்கள் கிழமை 15ம் திகதி பிற்பகல் சலீமும், மனைவியும், அவர்களது இரண்டு இளம் பெண்பிள்ளைகளும் அலி நானாவிடம் வந்து சேர்ந்தார்கள். சாவகச்சேரியிலிருந்த முஸ்லிம் பட்டினத்தாரை அகலச்செய்த காரியத்தை முபாரக் அலி நானாவால் நம்ப முடியாமலிருந்தது. தாங்கமுடியாமலுமிருந்தது. ஏதோ தவறு நடந்துவிட்டது என்று முபாரக் அலி நானா நம்பினார். சில நாட்களில் தவறு கண்டரியப்பட்டு, நிவர்த்தி செய்யப்படும் என்பதையும் திட்டவட்டமாகவே நம்பிக்கை கொண்டிருந்தார்.

அதிகப்படியாக இன்னும் இரண்டு வாரங்களில் அனைத்தும் சீர் செய்யப்பட்டுவிடும், ஊருக்குத் திரும்பலாம் என நம்பிக்கையுடன் அறிவுறுத்தி, அதுவரை தம்முடன் இருக்கும்படி மகன் குடும்பத்தாரை தம்முடனேயே வைத்துக் கொண்டார் அலி நானா.

ஐப்பசி 22. திங்கட்கிழமை செக்கல் சரிந்த நேரம் இப்ராஹிமின் படகு எருக்கலம்பிட்டியிலிருந்து நாச்சிக்குடாவுக்குள் வந்து தரை தட்டியது. இப்ராஹிம் விடுதலை இயக்கத்துக்காகப் பொருளாதார ரீதியில் பெருமளவு கொடுத்து வந்தாலும்கூட, இயக்கத்தாரது கடல்வழித் தேவைகளுக்கான ஏராளம் பணிகளைச் செய்து வந்தவன்.

முன்நூற்றுக்கும் அதிகமான ஆயுதக் காரர்கள் எருக்கலம்பிட்டியைக் கடலாலும், தரையாலும் சுற்றி வளைத்து கொள்ளையிட்டார்கள் என்ற விபரத்தை தந்தை முபாரக் அலி நானாவுக்கு விளக்கிச் சொன்னான் இப்ராஹிம். எருக்கலம்பிட்டி மக்கள் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். மன்னார் வளைகுடாவின் கடற்பரப்பு தனது மடி விரித்து ஏக வளங்களை மக்களுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தது. அத்தோடு பூமியில் அவர்கள் சிந்திய வியர்வைக்கேற்ப தகுந்த அறுவடைகளைப் பண்ணினார்கள். ஆமாம், எருக்கலம்பிட்டி மக்கள் தமது கடும் உழைப்பால் மிக உயர்நிலையில் வாழ்ந்தார்கள். தேச விடுதலைக்கான பணிக்கு பொருளாதார ஒத்தாசைகளை அதிகமாகச் செய்ததுமல்லாமல் சமுத்திரங்களை வெல்லவல்ல பல போராளிகளையும் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்க இயக்கத்தார் இந்த மக்களை நிந்திப்பர் என்பதை முபாரக் அலி நானா மறுதலித்தார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிரிகளே இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதே முபாரக் அலி நானாவின் நம்பிக்கை.

அன்று செவ்வாய்க்கிழமை. ஐப்பசி 30ம் திகதி. வடபூமியை விட்டே முஸ்லிம் பட்டினத்தாரை அகலப்பண்ணும்படிக்கு பரவலாகக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட சேதி முபாரக் அலி நானாவுக்குக் கிடைத்தது. அந்த மனிதனால் இனியும் நம்பாமல் இருக்க முடியவில்லை.

நாச்சிக்குடா நிலம் முபாரக் அலி நானாவின் நிறுத்த வகையற்றுச் சொரிந்த கண்ணீரில் கரைந்து கடலில் கலந்தது. குடாக்கடலின் அலைகள் கொந்தளித்தன. கொண்டல்க்காற்றெழுந்து உலுப்பியதில் கடலடி நிலம் அலையுண்டு, கலங்கிச் சேறானது. முபாரக் அலி நானா வேரோடு அகற்றப்பட்ட நாச்சிக்குடாவின் மேற்றிசைச் சூரியன் வெட்கத்தோடும், துக்கத்தோடும் இரணைதீவுக்குப் பின்னால் முகம் மறைத்துக் கொண்டான்.

'ஏன் உன் சகோதரரை சிதறடிக்கிறாய்? உன் இரத்தத்திலும், சரீரத்திலும் பாதியான அவர்களுக்கெதிரான நிட்டூரங்களை இவ்வேளை நீ நிகழப் பண்ணுவதென்ன? உனது சோதரர் எழுப்பும் கூக்குரல்கள்கூட அவர்களுக்கு விரோதமாக எழும் உனது கரங்களை கட்டுப்படுத்தாமல் போனதென்ன?

அறிவாயா நீ, உனது சோதரரை உன்னிலிருந்து அறுத்தெறியும் பொருட்டு பாதிப் பலத்தை இழந்து போகிறாய் நீ. பலமிழந்த உன்னை பள்ளத்தாக்கில் சிதறடிக்க பலமுள்ள எதிரிக்கான பாதைகளை நீயே வெட்டித் திறந்து செப்பனிட்டுக் கொடுக்கிறாய். இறுதியாக ஒன்றை மட்டும் உனக்குச் சொல்லிச் செல்கிறேன்; எதிரிகளின் சைனியத்தால் நீ சிதறடிக்கப் பண்ணப்பட்டு, பள்ளத்தாக்கில் கிடக்கும்போது, இன்று அவரது தாகத்துக்கு எந்த நீரை மறுதலிப்புச் செய்தாயோ அதையே உனது வரண்ட நாவை நனைக்கவும், பட்ட காயங்களுக்கு மருந்து கொண்டும் முதலாமவராக ஓடி வரப்போகிறவர் உன் சோதரரே' நாச்சிக்குடாவின் காவல் தேவதை கண்ணீரோடுதானே வானத்தை நோக்கி இந்த வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, கொதித்துக்கிடந்த குடாக் கடலுக்குள் குதித்து தன்னை மாய்த்துக் கொண்டாள்.

பவுல் ப்ரூனோ சோபாவில் சரிந்து படுத்து பெருமூச்சொன்றை வெளியே துரத்தி விட்டான். மூன்றாவது சுற்றில் எஞ்சியிருந்த பனஞ்சாராயத்தை அண்ணார்ந்து தொண்டைக்குழிக்குள் ஊற்றிவிட்டு, ஒரு சிகரட்டை எடுத்துக்கொண்டு எழுந்து வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியேறினேன். என்பின்னே பவுல் ப்ரூனோவும் வந்தான்.

*-8-*

இருவருமே மவுனமாக நடந்தோம். ஹெஸ்ஸா மலையடிவாரத்தின் தென்புறத்துக்கு வந்துவிட்டோம். இரண்டாம் உலகமகா யுத்தம் நடந்தபோது நோர்வேஜியப் படைகளால் அமைக்கப்பட்ட மிகப்பெரும் பாதுகாப்பு அரண். மலையடிவாரத்திலிருக்கும் ஒரு குகைவழியாகத் தொடங்கி, ஹெஸ்ஸா கடற்கரை வரை அந்த மலைக்குகை அரண் கருங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட அரண். முப்புறமும் கடலை நோக்கியபடி குறிபார்த்து வைக்கப்பட்ட பெரும் பீரங்கிகள் பொருத்தப்பட்ட அடையாளங்களும், இரும்புக் கோப்பைகளும் இன்னமும் அப்படியே இருக்கின்றன. பாதுகாப்பு அரணின் கிழக்கு வாயில்பகுதியால் உள்ளே சென்றோம். ஆயுதக்களஞ்சிய அறை, வானொலித் தொடர்பாடல் பகுதி என நிலவறைக்குள் சில அறைகள் இருளாகவே கிடந்தன. கிட்லரின் வான், தரை, கடல் படைகளுக்கு பலத்த இழப்புக்களை அள்ளிக் கொடுத்த யுத்தமுனை இது.

பாதுகாப்பு அரணின் நிலவறையை விட்டு வெளியே வந்து அதன் மேற்பகுதியில் அமர்ந்து கொண்டேன். பவுல் ப்ரூனோவும் அருகாக அமர்ந்து கொண்டான். இன்னொரு சிகரட்டை எடுத்து மூட்டிக் கொண்டு அவனைப் பார்த்தேன். விளங்கிக்கொண்டவன் விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர ஆரம்பிக்க ஆயத்தமானான்.

"முபாரக் அலி நானா என்னாவானார்?" எனது கேள்வியின் அவசரம் பவுல் ப்ரூனோவுக்கு இந்த தருணத்திலும் சிரிப்பை உண்டு பண்ணியது.
"ஏன் அவசரப் படுகிறாய்?" சிரித்துக்கொண்டே கேட்டான்.
'நீட்டி முழக்காமல் சுருக்கமாச் சொல்' என்றேன்.
'கதை சலிப்பூட்டுகிறதா' கேட்டான்.
'அப்படியெல்லாம் எதுவுமில்லை' என்றேன்.

2010 கோடை.
என கதையைத் தொடங்கினான். அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.
'நீதான் முதல் பக்கமும், கடைசிப் பக்கமும் மட்டுமே படித்துவிட்டு, முழுவதும் படித்து முடித்ததாக புத்தகத்தை மூடிவிடும் ஆளாக இருக்கிறாய், நான் என்ன சொல்ல?' முகத்திலறைந்தாற்போல் சொன்னான் பவுல் ப்ரூனோ.
'சரி, மேற்கொண்டு சொல்' சிரித்துச் சமாளித்தபடியே சொன்னேன்.

2010 ஆடி.15 வியாழக்கிழமை.
முபாரக் அலி நான தனியனாகவே நாச்சிக்குடாவுக்கு வந்தார். மிகவும் மெலிந்து, கன்னங்கள் ஒட்டி, கண்கள் சுருங்கி உருக்குலைந்து, நடை தளர்ந்து, சிறுதுண்டு உயிரை மட்டும் சுமந்தவராக வந்தார். மனைவி என்னவானார், மக்கள் பேரமக்கள் என்னவாயினர் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. தனியனாகவே வந்தார். அவரது நாச்சிக்குடா மண்ணில் ஒருபிடி நிலம்கூட அவருக்கானதாக இருக்கவில்லை. அழுது கண்ணீர் சிந்தவும் திராணியற்ற அவரது கண்கள் குடாக் கடலையே வெறித்துப் பார்த்துப் பரிதவித்தன. குடாக் கடலுக்குள்ளிருந்து கரைக்கு ஊர்ந்துவரும் காற்றில் உயிரேதும் இல்லாதிருப்பதை உணர்ந்தார். கரையில் நிற்கும் முபாரக் அலி நானாவின் கால்களை வந்து முத்தமிட்டுச் செல்லும் சிற்றலைகள் அழுதபடியே மீண்டும் கடலுக்குள் சென்று புதைந்து கொள்வதை அவதானித்தார். ஆமாம், நாச்சிக்குடாவின் காவல் தேவதை ஐப்பசி 30ம் திகதி, செக்கல் சரிந்த செவ்வாய்க்கிழமை, 1990 அன்றே கடலில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டாள் என்பதை உணர்ந்து கொண்டார்.

எருக்கலம்பிட்டி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மண்கும்பான் என தனது பிள்ளைகள் வாழ்ந்த இடங்களெல்லாம் சென்று அலைந்தார் முபாரக் அலி நானா. அவர்களது வாழ்விட அடையாளங்களில் ஊசி முனையளவுகூட கண்டடைய முடியாதவராக, மடி நிறைய ஏமாற்றங்களை மட்டுமே சுமந்தவராக மீண்டும் நாச்சிக்குடா வந்தார்.

2010, ஆடி 15 வியாழக் கிழமையிலிருந்து, 2016 ஆவணி 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலைவரை இரண்டாயிரத்து இருநூற்றிப் பதினேழு நாட்கள் உயிர் வாழ்ந்தார். இரண்டு தலைமுறையின் எதிர்காலத்தையே

சாப்பிட்டு முடித்த மண்ணில், தான் மடிக்குள் கட்டி வைத்திருந்த துயரங்களை மட்டுமே சாப்பிட்டுக்கொண்டு வாழ்ந்து முடித்தார் முபாரக் அலி நானா. நாச்சிக்குடாவின் வடக்குக் கரையில் முபாரக் அலி நானாவின் நீள்துயில் கொண்டார். ஆமாம், ஆவணி 30, செவ்வாய்க்கிழமையின்று அவர் மரணித்த இருபத்தியோராம் நாள்.

ஹெஸ்ஸா மலையின் தென்புறக் காவலரணின் கற்கூரையில் இருவரும் மவுனமாக அமர்ந்திருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைகளையே பார்த்திருந்தோம். எப்போதும் குமுறியடித்தபடி, பேரிரைச்சலிட்டுக் காணப்படும் அட்லாண்டிக் கடலலைகள் ஆர்ப்பாட்டமெதுவுமில்லாமல் அடங்கிக் கிடந்தது.

-9-

இருவரும் வீடுவந்து சேரும்போது இரவு எட்டு மணியாகியிருந்தது. இதனை இரவு என்று சொல்லிக் கொள்வதில் எந்த நியாயமுமே இருக்க முடியாது. ஓய்வெடுக்க மறந்த நள்ளிரவுச் சூரியன் வலம்வரும் தேசத்தின் இரண்டாம் பகற்காலம் என்றே சொல்லலாம்.

அப்புவும், லூர்துராசனும் இன்னமும் வீடு வந்து சேரவில்லை. 'அவர்கள் இன்னமும் வரவில்லை. நீ பசியாயிருப்பாய் சாப்பிடு' என்றான். 'இப்போ வேண்டாம். எனக்குப் பசியில்லை' என்றேன். இருவரும் சோபாவில் அமர்ந்து கொண்டோம். எனது கண்ணாடிக் கோப்பையில் பனஞ்சாராயத்தின் இன்னொரு சுற்றை வார்த்தான். 'வேண்டாம்' என்றேன். 'இன்பங்களைக் கொண்டாடவும், துன்பங்களைக் கழுவி விடவும் இதுதானே கைகண்ட மருந்து?' சிரித்துக்கொண்டே சாராயக் கோப்பையை என்னிடம் நீட்டினான். வாங்கிக் கொண்டேன்.

2015ம் ஆண்டு ஆவணி 30ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாரடைப்பால் மரணித்த இன்னொரு மனிதனைப்பற்றிச் சொல்கிறேன் கேள் எனத் தொடங்கினான்.
அனலைதீவு லோஞ்சிக்கார விநாயக மூர்த்தியர் என்றால் தீவகத்தில் தெரியாதவர்களே இருக்க முடியாது. அவர் மறைந்து இன்று சரியாக ஒரு வருடம்.

ஊர்காவற்துறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான பயணப் படகுச் சேவையை நீண்ட காலமாகச் செய்து வந்தவர்.

ஊர்காவற்துறையிலிருந்து எழுவைதீவு, அனலைதீவு, குறிகாட்டுவான், நயினாதீவு, நெடுந்தீவு என்பது கடல்மார்க்கப் பயணப் பாதை. போக்குவரத்துச்

சேவை என்பதற்கப்பால் இது தீவக மக்களைப் பொறுத்தவரை ஒரு மாபெரும் மக்கள் திருப்பணி என்றே சொல்லலாம். காலப்போக்கில் பணம் படைத்த சிலரும் தங்கள் முதலீட்டை இந்தப் படகுச் சேவையில் அள்ளியிறைத்தனர். புதிதாகக் கட்டப்பட்ட படகுகளில் நவீன இருக்கைகளும், கண்ணாடி சன்னல்களும், வேகமான இயந்திரங்களும் என நவீனமயப் படுத்திக் கொண்டனர். அதற்கேற்ப பயணச்சீட்டின் விலையையும் தங்கள் விருப்பப்படி உச்சத்துக்கு ஏற்றிக் கொண்டனர். ஆனால் விநாயக மூர்த்தியர் மிகக் குறைந்த கட்டணத்திலேயே சனங்களை ஏற்றி இறக்கினார். புதிய முதலாளிகளின் நவீன படகுகளில் அன்றாடங்காய்ச்சி மீனவர்கள் தீவுகளிலிருந்து ஊர்காவற்துறைச் சந்தைக்கு மீன்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அப்படி அனுமதித்தாலும் அதிக பணத்தை வசூல் செய்தனர். ஆனால் விநாயக மூர்த்தியரின் படகில் எப்போதும் இந்தத் தொழிலாளிகளுக்கு சலுகைகளும், கட்டணத் தவிர்ப்புக்களும் இருந்தே வந்தன. தீவிலிருந்து தொழிலை முடித்துக்கொண்டு மீன்களை சந்தைக்கு எடுத்துச் செல்லும் தொழிலாளி-யிடம் பல சமயங்களில் கையில் பணம் எதுவும் இருப்பதில்லை. ஆனால் சந்தை முடிந்து திரும்பும்போது அந்தத் தொழிலாளிகள் பயணப் பணத்தை மறக்காமல்க் கொடுத்து விடுவார்கள். இப்படி பயணப்பணம் இல்லாமல் அந்தரிக்கும் மக்களிடம் கறார் காட்டாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பது விநாயக மூர்த்தியர் தனது படகுச் சிப்பந்திகளுக்கு இட்டு வைத்துள்ள கட்டாயமான கட்டளை. புதிய பணக்காரரின் நவீன படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டாலும்கூட எப்போதும் விநாயக மூர்த்தியரின் படகில் மக்கள் நிறைந்தே பயணித்து வந்தனர்.

தீவகம் மீதும், தீவக மக்கள் மீதும், அவர்களின் முன்னேற்றங்கள் பற்றியும் அளப்பரிய கரிசனை கொண்டவராகவே விநாயக மூர்த்தியர் இருந்தார். தனது காணிக்குள்ளிருந்த இரண்டு கிணறுகளிலும் தண்ணீர் எடுத்துச்செல்லும் அனுமதியை எல்லா மக்களுக்கும் பாரபட்சமின்றி வழங்கியிருந்தார். இதனால் தீவிலுள்ள ஒருசில சாதிமான்களின் வெறுப்பையும் வாங்கிக்கொள்ள நேர்ந்தது. தீராப் பகைகளையும் சம்பாதிக்கும்படியாயிற்று. இப்படியான சின்னத்தன எண்ணங்களையும், செயற்பாடுகளையுமிட்டு அவர் எப்போதும் அலட்டிக் கொண்டதில்லை. ஏழாற்றுத் திடலின் நடுவே கிடக்கும் இந்தத் தீவுகளில் என்னதான் வளங்கள் கொட்டிக் கிடந்தாலும் குடிக்கத் தண்ணீரில்லையேல் யார் வாழ்வார் இங்கு? இந்தத் தீவுகளின் எல்லா மக்களுக்குமாக இயற்கை அள்ளியிறைத்த மாபெரிய வரம்தான் இந்த நன்நீர். இதற்குள் இவர்கள் இந்த சாதியைத் திணிப்பது அந்த இயற்கைக்கே அடுக்காத செயல் என்பது விநாயகமூர்த்தியரின் முடிந்த முடிவு.

பருவகால மீன்பிடித்தொழில் செய்ய தீவுக்கு தங்குதாணையம் கொண்டுவரும்

மீனவரை தனது காணிக்குள்ளே இருந்த அந்த விசாலமான லோஞ்கிக் கொட்டகையிலேயே தங்குவதற்கு தானாகவே முன்வந்து அனுமதி கொடுத்திருந்தார் விநாயக மூர்த்தியர். அப்படி பருவகால தங்குதாணையம் கொண்டு அனலைதீவுக்கு வந்தபோதில் ஏற்பட்ட நட்புத்தான் விநாயக மூர்த்தியருக்கும், அப்பு பிலிப்பன் அருளப்பனுக்கும் இடையில். இந்த நட்பு மிக நீண்ட நெடியதானதாகவும், கெட்டியானதாகவும் வளர்ந்திருந்தது.

அனலைதீவின் நீர் நில விவசாய வளங்கள், பனை வளங்களும் அவற்றின் உற்பத்திகளும் என விநாயக மூர்த்தியர் அப்புவுக்கு விபரிப்பார். தீவுப்பகுதியில் எங்குமேயில்லாதவாறு இந்தத் தீவில் மட்டும் இயற்கை இங்கு வாழும் மக்களுக்கு அள்ளித் தந்தவரம் இந்த நீர்வளம் என நெகிழ்ந்து போவார். அனலைதீவைச் சூழவுள்ள கடல் வளங்களைப் பற்றியும், அவற்றின் சிறப்புத் தன்மைகள் பற்றியும் அப்பு விநாயக மூர்த்தியருக்கு எடுத்துச் சொல்வார். அனலைதீவுக் கடற்பரப்பில் விளைந்து நிற்கும் கடற்தாவரங்களின் சிறப்புக்களும், அந்தத் தாவரங்கள், கற்பாறைகள், சாட்டாமாறுகள் அதிகமாகக் காணப்படுவதால் அனலைதீவு கடல்வாழ் உயிரினங்களின் சரணாலயமாகவே திகழ்கிறது என்பதை விபரிப்பார். புளியந்தீவுத் தென்முனையிலிருந்து, எழுவைதீவு வடமுனை வரையுள்ள கிழக்குக் கடலில் உள்ள வளங்கள் எவ்வகையானது என்பதையும், இந்தத் தீவுகளின் மேற்குக் கடல்ப்பரப்பு எப்படியான வளங்களைக் கொண்டன என்பதையும் பாட்டம் பாட்டமாக அப்பு விபரிப்பார். இருவரது உரையாடல்களும் எப்போதும் இந்த இயற்கை வளங்கள் பற்றியதாகவே அதிகம் இருக்கும். கடல் வளங்கள் பற்றிய ஆழ்ந்த அறிதலை அப்புவிடமிருந்து அறிந்துகொண்ட விநாயக மூர்த்தியருக்கு தனது தீவின் மீது இன்னும் இன்னுமாக நேசம் பல்கிப் பரிணமித்தது.

புதிய லோஞ்சி முதலாளிகள் எப்படித்தான் தமது வள்ளங்களை வசீகரமாக நவீனமயப் படுத்திக் கொண்டாலும் விநாயக மூர்த்தியரின் பயணிகளை இவர்களால் தம்பக்கம் இழுக்க முடியவில்லை. இவர்களது நவீன லோஞ்சிகள் இறங்குதுறையில் பயணத்துக்குத் தயாராகக் காத்துக் கிடந்தாலும், அதிகமான மக்கள் விநாயக மூர்த்தியரின் படகின் வருகையையே எதிர்பார்த்துக் காத்து நிற்பர். இதனைப் புதிய படகு முதலாளிகளால் தாங்கிக் கொள்ள முடியாமற் போயிற்று. இவர்கள் தமது கூலியாட்களை வைத்து இரவோடு இரவாக இறங்குதுறையில் கட்டிக்கிடந்த விநாயக மூர்த்தியரின் லோஞ்சியின் எரிபொருள்த் தாங்கியில் சீனியை அள்ளிக் கொட்டி வைத்தார்கள். விநாயக மூர்த்தியரின் படகுச் சேவை நின்றது. ஆயினும் அவர் சலிக்கவில்லை, புதிய யந்திரத்தைப் பூட்டி மீண்டும் சேவையைத் தொடங்கினார். திரும்பவும் சீனியைக் கொட்டினார்கள். புதிதாக இறக்கினார். திரும்பவும் சீனியைக் கொட்டினார்கள். கையில், மடியில் இருந்த சொத்துக்களையெல்லாம் கொட்டி

*படகுச் சேவையை நடாத்த முயற்சிகள் செய்தார். முடியவில்லை. நிறுத்திக் கொண்டார். தனதான சிறிய நிலத்தில் விவசாயத்தைச் செய்யத் தொடங்கினார்.*

*யுத்தம் இந்தத் தீவு மக்களை மட்டும் விட்டு வைத்ததா என்னா? 1990ம் வருடம் தீவிலிருந்து அகதிகளாகப் படகில் புறப்பட்ட மக்கள் அறுபத்தியாறுபேர் கடலில் மூழ்கி மாண்டார்கள். அந்தச் சம்பவம் விநாயக மூர்த்தியரைப் பாதி கொன்றுவிட்டது. தொடர்ந்து நிகழ்ந்த யுத்த அனர்த்தங்களுக்குள்ளும், புலப் பெயர்வுகளுக்குள்ளும் அள்ளுண்டு, அவதிப்பட்டு மக்களெல்லாம் தேசாந்திரமாகத் திரிந்துகொண்டிரருந்த போதிலும் விநாயக மூர்த்தியர் தீவை விட்டு அகலவில்லை.*

*2009இன் மத்தியில் யுத்தம் முடிவுற்றதாகச் சொன்னார்கள். எல்லோரும்தான் சொன்னார்கள். இப்போதும்தான் சொல்லித் திரிகிறார்கள். யுத்தம் முடியவில்லை என்பதை விநாயக மூர்த்தியர் பரிபூரணமாக நம்பினார். இனிமேல்தான் யுத்தம் செய்யவேண்டிய கட்டாயத் தேவை இருக்கிறது என்பதையும் உணர்ந்தார். முதலில் எந்த எதிரியோடு போரைத் தொடங்குவது? யார் தொடங்குவது? அல்லது எதிரியுடனான யுத்தம் முதலிலா, நண்பர்களுடனான யுத்தம் முதலிலா என்ற கேள்விகளும் உண்டு அவருக்குள்.*

*யுத்தம் முடிந்ததாகச் சொல்லப்பட்ட நாட்களிலிருந்து விநாயகமூர்த்தியர் அனலைதீவின் மேற்குக் கரைகளிலேயே இரவிரவாக அலைந்து திரிந்தார். பதட்டத்தோடும் பதகளிப்போடு,ம் நள்ளிரா வேளைகளிலும் கரை நீளம் நடந்து திரிந்தார். திருவிழாக் காலங்களில் தெருமுழுதும் வண்ண விளக்குகள் பூட்டி ஆர்ப்பரிப்பதுபோல் தீவின் மேற்குக் கடலுக்குள் தினமும் முன்னூற்றுக்கும் மேற்பட்ட பெரும் படகுகள் மடிவலைகளை இறக்கி நாசம் செய்துகொண்டிருந்தன. இந்தக் கடற்பரப்பு எப்படியாகப்பட்ட வளங்களையுடையவை என்பதை அப்பு விபரித்துச் சொன்னவை விநாயகமூர்த்தியரின் எண்ணங்களில் விரிந்தவண்ணம் இருந்தன. இந்த நாசகாரப் படகுகள் கடலின் நிலத்தடியை ஆழ உழுவதால் வேரறுந்து அடைந்துவந்து தீவின் கரைநீளம் அழுகிக் கிடந்தன. கரையில் வந்தேறும் அலைகள்கூட ஒருவித கலங்கிய வீணியாகவே இருந்தன. தீவிலுள்ள பல இளைஞர்களிடம் ஓடியோடி இவற்றை விபரித்தார். வளங்கள் சூறையாடப் படுகிறதாக தன்னால் முடிந்தவரை எடுத்துச் சொன்னார். யாருமே கருத்திற் கொள்வதாகத் தெரியவில்லை. போதாக்குறைக்கு இன்னுமொரு பேரிடி தீவில் நிகழ்ந்தேறத் தொடங்கியது.*

*மக்களுக்குத் குடிநீர் விநியோகம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு அதிகாரிகளும், அவர்களைச் சார்ந்தவர்களும் வயல்வெளிகளிலுள்ள கிணறுகளில் இயந்திரத்தை*

வைத்து நீரை ஒட்ட உறிஞ்சி எடுக்கத் தொடங்கினர். இப்படி ஒட்ட உறிஞ்சி நீரை இறைப்பதால் உவர்நீர் ஊற்றுக் கண்கள் திறந்துகொள்ளும். பின் அதுவே நிரந்தரமாகி நன்னீர் வளம் அறவே அற்றுப்போகும்.

வடக்கோரப் பள்ளியருகேயும், மத்தியில் வயலம்மன் கோயிலண்டையிலும், சற்றுத் தள்ளி தென்திசையில் ஏழாம் வட்டாரத்திலுமாக குடிநீர்க்கிணறுகள் உள்ளன. இவர்கள் வீடு வீடாகத் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டிய தேவையே இல்லை. வீட்டுப் படலையடிக்கே இவர்கள் தண்ணீரைக் கொண்டுவந்து தருகிறார்கள் என்பதை மட்டுமே சனங்கள் பார்க்கிறார்களே தவிர, இவர்கள் தண்ணீரை இப்படி ஒட்ட உறிஞ்சி எடுப்பதால் எதிர்காலத்தில் இந்தத் தீவின் நிலவரம் என்னவாகும் என்பதைப் பற்றி சிறிதும் சிந்திக்கிறார்களில்லை. ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று விநாயகமூர்த்தியர் விளக்கிச் சொல்லிப் பார்த்தார். எந்தவித பலனுமில்லை. அதேவேளை இந்தச் சமயத்தில்தானே, அமிர்தமாய் இனித்திருந்த பொருக்கு வயல் கிணற்று நீர் இருநீர்த்தன்மைக்கு மாறிக்கொண்டது. விநாயகமூர்த்தியர் பதறிப்போனார். படித்துப் படித்துச் சொன்னேன், யார் கேட்டார் நான் சொன்னதை என புலம்பியழத் தொடங்கினார். குடிக்க நீருமில்லாமல், விவசாயம் செய்ய நீர்வளமுமில்லாமல் இரண்டு கருகப்போகும் தீவை அவரால் கற்பனைகூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை.

2015ம் ஆண்டு ஆவணி 30ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மதியம் தனது மண்திண்ணையில் சற்று கண்ணயர சாய்ந்தவர்தான். நிரந்தரமாகவே சாய்ந்து விட்டார். தன்னைவிட மண்ணையும், தன் பட்டினத்தாரையும் அதிகம் நேசித்த ஒரு மனிதன் சாய்ந்துதான் போனான். இந்த மரணம் அப்புவுக்கு சொல்லொணாத் துன்பத்தைக் கொடுத்தது.

*-10-*

அப்புவும் லூர்த்துராசனும் வீடு வந்து சேர இரவு பத்துமணியைத் தாண்டியிருந்தது. இருவரது முகங்களும் துக்கத்தால் வீங்கியிருந்தன. பவுல் ப்ரூனோ எனக்குச் சொன்ன கதைகளை அப்பு தனது மொழியில் லூர்த்துராசனுக்குச் சொல்லியிருப்பார். கதைகள் ஒன்றாயிருப்பினும் அவற்றை எடுத்தியம்பிய முறைகள் நிச்சயம் வேறாக இருந்திருக்கக்கூடும். ஆனாலும் அவை தரும் துயரங்களில் மாறுபாடு இருக்க முடியாது.

நால்வரும் இரவு உணவை சாப்பிட்டு முடிக்க பதினோரு மணியாகி விட்டது. புளியானமும் புழுங்கலரிசிச்சோறும் தந்த சுவையை முழுவதுமாக அனுபவிக்க முடியாமலே சாப்பிட்டு முடித்தோம். பவுல் ப்ரூனோ எல்லாக் கதைகளும்

எனக்குச் சொல்லிவிட்டான் என்பதை அப்பு அறிந்து கொண்டார்.
‘நான் இன்னொரு கத சொல்லட்டோ, கேக்கிறியளோ?’ என்றார் அப்பு.
‘சொல்லண சொல்லண’ என ஆர்வமானான் லூர்து ராசன். அப்புவுக்கு நெருக்கமாக அமர்ந்து கொண்டோம் மூவரும்.

‘அந்த நேரத்தில ஞானப்பிரகாசம் விதான எண்டொருத்தன் இருந்தான். தியாலிங்கம் விதான எண்டு இன்னொருத்தன். ஒருத்தன் வேதக்காறன், ஒருத்தன் சைவக்காறன். ஒருத்தன் கருகம்பனைக்கு அங்கால, ஒருத்தன் இங்கால. சனங்கள வதைக்கிறதில ரெண்டுமேருமே வலும் விண்ணனுகள். கள்ள வேலயள் பாக்கிறதில ரெண்டுபேருமே நல்ல கூட்டாளிமார். ஞானப்பிரகாசம் விதான எண்டவன்ர தோட்டத்தில வேலைக்கு இருந்தவன்தான் கடுகஸ்தோட்ட முத்துச்சாமி. ஞானப்பிரகாசம்விதான தன்ர வீட்டில றோஸி எண்டொரு வடிவான சீமநாய் வச்சிருந்தவன். அவன்ர பேரன் காறன் லண்டனிலயிருந்து பென்சன் எடுத்துக்கொண்டு வரேக்க குட்டியாகக் கொண்டுவந்து குடுத்த நாய் அது. அந்த றோஸி நாய் வளந்து மொழுமொழுவெண்டு நல்ல வடிவா நிண்டது. ஒருநாள் முத்துச்சாமி எங்கட கடக்கரைக்கு ஒரு சின்னச் சாக்குப் பையோட வந்து நிண்டான். என்னெண்டு கேட்டன். இதப்புடியண்ண, இதக் கொண்டுபோய்க் கல்லக் கட்டி கடல்ல போடு ரெண்டுரூவா தாறன் எண்டான். சரி தா எண்டு சாக்குப் பையயும், ரெண்டுரூவாயையும் வாங்கிகொண்டு அவன அனுப்பி வச்சன். சாக்குப் பையத் திறந்து பார்த்தால் கண்கூட முழிக்காத ஒரு வடிவான ஆண்நாய்க்குட்டி. கொல்ல மனம் வரேல்ல. நானே கொண்டுபோய் வீட்டில வச்சு வளத்தன். சங்கதி என்னண்டால் முத்துச்சாமி சூரா எண்டொரு ஊர் நாய் வச்சிருந்தவன். சூரா என்ன செய்தானெண்டால் ஞானப்பிரகாசம் விதானயின்ர றோஸியோட சிலுமிசம் பண்ணிப் போட்டான். ஞானப்பிரகாசத்தான் முத்துச்சாமிய இழுத்துப்போட்டு துவரந்தடி முறிய முறிய வச்சு வாங்கிப்போட்டான். அதுகள் ரெண்டும் விளயாடினதுக்கு இவன் அப்பிராணி முத்துச்சாமி என்ன செய்வான் பாவம். உடன கொண்டுபோய்க் கடல்ல கல்லக் கட்டி எறியச்சொல்லிப் போட்டான் ஞானப்பிரகாசம். அந்தக் குட்டிதான் சொந்தப்புள்ளயாட்டம் என்ர சீவியம் முழுக்க என்னோடயே இருக்கிறான். எனக்கு ஒண்டெண்டால் விட மாட்டான். ஒருகை பாத்திட்டுத்தான் விடுவான். என்னோட முந்தி ஹாபறில கிளாக்கா இருந்த வெள்ளக்காற சிநேகிதன்ர பேரத்தான் அவனுக்கு வச்சனான். பவுல் ப்ரூனோ’

அப்புவைப் பரிவு ததும்பப் பார்த்துக்கொண்டிருந்தான் பவுல் ப்ரூனோ.

★★★★★

# உயிர்மெய் வெளியீடுகள்

1. உயிர்மெய் இலக்கியத் தொகுப்பு (2009-2010)

2. வெளிச்சத்தில் பேசுவோம் -உயிர்மெய்-

3. ஆதலினால் காதல் செய்வீர்
- தமயந்தி-

4. பிறத்தியாள்
-பானுபாரதி-

5. வரலாறு யாரையும் விடுதலை செய்ததில்லை
-ஜீவமுரளி-

6. காசு ஒரு பிசாசு
-கலையரசன்

7. பிரண்டையாறு
-மெலிஞ்சிமுத்தன்-

8. ஒரு பயணியின் போர்க்கால குறிப்புகள்
-கருணாகரன்-

9. அத்தாங்கு
-மெலிஞ்சிமுத்தன்

10. ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி
-என். கே ரகுநாதன்-

11. சமூக இலக்கியத்தளங்களில் படைப்புகளும் செயற்பாட்டாளர்களும்
-லெனின் மதிவானம்-

12. லெனின் சின்னத்தம்பி
-ஜீவமுரளி-

13. பண்டாரவன்னியன், கண்ணகி (கூத்துப்பிரதிகள்)
-அண்ணாவி ச.மிக்கேல்தாஸ்-

14. ஏகலைவன் (கூத்து)
-தமயந்தி-

15. யேசுவில் அறையப்பட்ட சிலுவை
-கற்சுறா-

16. ஏழு கடல்கன்னிகள்
-தமயந்தி-

